10 சிறுகதைகள்

# சிறுகதை மஞ்சரி

காலாண்டிதழ்

ISSUE NO 1 - FEB 2020 - £3



## 10 SHORT STORIES

WRITTEN BY VARIOUS AUTHORS,
BROUGHT TO YOU IN
ONE CONSOLIDATED MAGAZINE

## NEW EXCLUSIVE!

சமூகம் பற்றிய
பத்து எழுத்தாளர்களின்
வேறுபட்ட பார்வைகள்

# LUXMI EDUCATION CENTRE

"Unlock Your Potential"

## 11+ SPECIALIST

**WE TEACH**

- Non Verbal Reasoning
- Verbal Reasoning
- Maths
- English

**OUR SERVICES INCLUDES**

- Individual Attention
- Home Marking
- Feed back on time
- Exam application assistance
- 90 % pass rate all the time

## SECONDARY CLASSES

- **YEAR 7**
  Maths, English, Science
- **YEAR 8**
  Maths, English, Science
- **YEAR 9**
  Maths, English, Chemistry
  Biology, Physics
- **YEAR 10, 11**
  Maths , English, Physics
  Chemistry, Biology
- **YEAR 12, 13**
  Physics, Chemistry, Maths

## PRIMARY CLASSES

- **YEAR 1** Maths, English
- **YEAR 2** Maths, English
- **YEAR 4** Maths, English, Verbal, Non Verbal
- **YEAR 6** Maths, English, Science


LUXMI EDUCATION CENTRE

101A BLYTH ROAD, HAYES, MIDDLESEX, UB3 1DB

Phone: 0208 573 0368 | Mobile: 07852 810285 | Email: web@leconline.co.uk | Website: www.leconline.co.uk

## உங்களோடு சில மணித்துளிகள்......


சிறுகதை மஞ்சரியின் முதல் இதழ் இது. இந்த இதழில் பத்து எழுத்தாளர்களின் படைப்புகள் வருகின்றன. இவர்களில் சிலர் மக்கள் மத்தியில் அறியப்பட்டவர்களும் சிலர் சிறுகதையை முதலில் எழுதுபவர்களுமாக உள்ளனர். பத்தில் 6 ஈழத்தில் வதியும் ஈழத்து எழுத்தாளர்களினதும் 4 புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்து எழுத்தாளர்களி னதுமாகும்.

ஈழத்தில் பல எழுத்துகள் வறுமையின் காரணமாகத் தாள்களில் எழுதியபடியே நாளடைவில் கறையா னுக்கு இரையாகும் தன்மையிலிருந்து அவற்றைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கிலும் வாசகர்களை நவீன எலக்ரோனிக் மாயையிலிருந்து மீட்க வேண்டுமென்ற நோக்கிலுமே இந்தச் சஞ்சிகை வெளிவருகிறது.

இது ஆரம்ப எழுத்தாளர்களுக்கும் வளர்ந்த எழுத்தாளர்க ளுக்குமான களமாகும். இது உங்களின் பயிற்சிக் களமாகும். சிறுகதை சம்பந்தமான கட்டுரைகளும் நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

சிறுகதைத் தொகுப்புகளை வெளியிடுபவர்கள் அவை பற்றிய விபரங்களைத் தந்தால் அவற்றைப் பிசுரிப்போம். ஆங்கிலத்தில் கதை எழுதக் கூடியவர்கள் அவற்றையும் அனுப்பி வைக்கலாம்.

சிறுகதை பற்றிய எனது அபிப்பிராயங்கள் உள்ளே குறிப்பிட்டுள்ளேன். இந்தக் கட்டுரையில் உள்ள கருத்துக்கள் எனது வாசினையின் ஊடாக நான் பெற்றுக் கொண்டவை களே. நீங்களும் உங்கள் அபிப்பிராயங்களை அனுப்பி வையுங்கள். உங்களுடைய எழுத்துக்களைக் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது எமது தொடர்பு முகவரிகளுக்கோ அனுப்பி வையுங்கள். இங்கு பிரசுரமாகாதவை அடுத்த இதழ்களில் பிரசுரமாகும்.



**மு. தயாளன்**

ஆசிரியர்

sirukathai1@gmail.com

# சிறுகதை மஞ்சரி

### எங்களிடமிருந்து...

- இலங்கையில் இருந்து எழுதும் எழுத்தாளர்க ளுக்கு அவர்களின் கதை பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் 1000 ரூபா சன்மானம் வழங்கப்படும்.
- கதையை அனுப்பும்போது பின்வருவன உங்களிடமிருந்து எதிர் பார்க்கப்படும்
- **வங்கி விபரம்**
- **தபால் முகவரி**
- **உங்கள் படம்**
- **உங்களைப் பற்றிய சிறு விபரணம்.**
- **நீங்கள் அனுப்பும் கதை வேறு எங்கும் பிரசுரமா கவில்லை என்ற உறு திக் கடிதம்.**

**தொடர்பு முகவரி:**

**SIRUKATHAI MANJARI**

**101A Blyth road, Hayes, UB3 1DB, UK**

——————————————

**91 Barathi street, Trincomalee, Srilanka**

**OR sirukathai1@gmail.com**

தொலைபேசி: 00447505455811

## உள்ளடக்கம்...


**3**

**பங்காளர்கள்**

**4**

**சிறுகதைபற்றிய சிறுகுறிப்பு**

**5**

**நிறக்கவர்ச்சி**

ஒரு பெண்ணின் மன உணர்வுகள் புரிந்து கொள்ளப்படாது பணமும் நிறமும் கருத்தில் கொள்ளப்பட்டு திருமணம் நிச்சயிக்கப்படும் சமூகக் கொடுமை சித்தரிக்கப்படுகிறது

**10**

**ஒரு மாற்றம்**

அரசியலில் ஒரு அரசாங்கத்தில் செய்யப்பட்ட சேவைகள் மறு அர சாங்கத்தில் கௌரவிக்கப்படாதிருக் கும் குறையினை மிக அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**16**

**ஒரு ஓடலியின் கனவு நிறை வேறுகிறது**

தனது ஊரின் மக்கள் படுந் துயரத்தை தீர்க்க ஒரு மருந்தாளன் தன்னுடைய வேலைக் காலம் முடிந்த பின்பும் அதே சிந்தனையில் தான் விரும்பிய வைகள் அரசினால் நிறைவேற்றப்படு தலின் மகிழ்வு சித்தரிக்கப்பட்டுள்ளது.

**21**

**வலிதாங்கி**

ஒரு போராளி போரின் பின் படுந்துயரமும் அந்தப் போராளியை எமது சமூகம் எப்படிக் கையாள வேண்டுமென்பதையும் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

**27**

**எனக்கு அப்பா வேண்டும்**

மது பாவனையால் ஒரு நாட்டின் சட்டங்கள் புறக்கணிக்கப்படுவதுடன் மற்றையவர்களின் உயிர்களுக்கும் ஆபத்தாகப் போய் விடுகிறதென்ற கருத்து தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**31**

**கானல்**

மது ஒரு குடும்பத்தை எவ்வாறு பாதிக்கிறதென்பதையும் அதனால் ஒரு பெண்ணின் வாழ்க்கை சீரழிவதையும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**34**

**காயமில்லாத வலி**

படிக்கின்ற காலத்தில் ஏற்படுகின்ற காதல் உணர்வுகளால் இளையோர் உணர்கின்ற வலிகளைத் துல்லிய மாக வெளிப்படுத்தியுள்ளார்.

**43**

**போர்வை**

இலக்கிவாதிகளின் தலைக்கனத்தை யும் அவர்களின் இரட்டை வேடங்க ளையும் சிறப்பாக எடுத்துரைத்து ள்ளார்

**50**

**கலைஞனின் வீடு**

அரசாங்கங்களின் கலைஞர் ஊக்கு விப்புத் திட்டங்கள் உண்மையான கலைஞர்களைச் சென்றடைவதில்லை என்பது தெளிவாகத் தரப்பட்டுள்ளது.

**55**

**சுமைதாங்கி**

ஒரு மத்தியதரக் குடும்பத்தில் ஒரு பெண்சுமக்கும் சுமையினையும் பொறு ப்பற்ற பிள்ளைகளின் உதாசீனத் தையும் வெளிப்படுத்தியுள்ளார்


**குறிப்பு:**

சிறுகதை மஞ்சரியில் வரும் கதைகள் காலக்கிரமத்தில் சிறுகதைத் தொகுப்புக் களாக மகுடம் பதிப்பகத் தினரால் வெளியிடப்படும்.

## உள் பக்கங்களில்




The famous cartoonist

**SELVAN**

cartoonthass@gmail.com

## அட்டையில்...




Cover Illustration By

**Ram Nat**

# பங்காளர்கள்......




## அலெக்ஸ் பரந்தாமன்

வன்னியில் வாழும் இவர் போர்வலியை நன்கு அனுப வித்தவர். அனுபவமிக்க எழுத் தாளர். இவரின் படைப்பு பக்கம் **3** இல் உள்ளது



## என். நஜ்முல் ஹுசைன்

இவர் கொழும்பில் வாழ்பவர் *1968* ஆம் தொடக்கம் இன்று வரை எழுதிக் கொண்டிருப்பவர். இவரின் படைப்பு பக்கம் **8** இல் உள்ளது




## கோவிலூர் செல்வராசன்

லண்டனில் வாழ்பவர். பல சிறுகதைகள நாவல்கள் எழுதியுள்ளார். நல்லதொரு படைப்பாளி. இவரின் படைப்பு **16** ஆம் பக்கத்தில் உள்ளது



## கே. விஜயசங்கர்

இவர் வவுனியாவைச் சேர்ந்தவர்.துடிப்புள்ள இளம் எழுத்தாளர். சமூகச் சிநதனை கொண்ட இவரின் படைப்பு **21** ஆம் பக்கத்தில் உள்ளது.



## உரும்பிராய் எம்.ரி. செல்வராசா

லண்டனில் வாழும் இவர் பல நூல்களின் சொந்தக்காரர். அனுபவம் நிறைந்த இவரின் படைப்பு **27**ஆம் பக்கத்தில் உள்ளது.



## கர்ணன் சின்னத்தம்பி

லண்டனில் வாழ்பவர். இயல்பில் கவிஞர். சிறுகதை உலகத்தை நேசிப்பவர். இவரின் படைப்பு பக்கம் **31** இல் உள்ளது.



## குலசிங்கம் வசீகரன்

இவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர். எங்கட புத்தக அமைப்பாளர். சிறந்த எழுத்தாளர். இவரின் படைப்பு **34** ஆம் பக்கத்தில் உள்ளது.



## நக்கீரன் மகள்

இவர் டென்மார்க்கில் வதிபவர். சமூகத்தின் இன்னல் கண்டு பொங்கி எழும் கவிஞர். சிறுகதையில் ஆர்வம் கொண்டு எமக்குத் தந்த படைப்பு **43** ஆம் பக்கத்தில் உள்ளது



## மன்னார் அமுதன்

இவர் மன்னாரில் வாழ்பவர். இவர் இயல்பில் கவிஞர். பல சிறுகதைகளும் எழுதியுள்ளார். எமக்குத் தநத படைப்பு பக்கம் **50** இல் உள்ளது.



## சிவரமணி

திருகோணமலையைச் சேர்ந்தவர். இவர் ஒரு கவிஞர். சிறுகதையுலகத்துள் காலடி எடுத்து வைத்துள்ளார். ஆர்வம் நிறைந்த எழுத்தாளர். இவரின் படைப்பு **55** ஆம் பக்கத்தில் உள்ளது

**நன்றிகள்............**

**பங்காளர்களுக்கும்** இந்தச் சிறுகதை மஞ்சரியை தன் வேலைப் பளுவுக் கிடையிலும் ஒப்பு நோக்கித் தந்த **திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும்** இதன் அட்டைப்படத்தை வரைந்த என் மகன் **ரமணனுக்கும்** சித்திரங்கள் வரைந்து தந்த **செல்வனுக்கும்** எல்லாவிதத்திலும் ஆலோசனை தந்த என் மனைவி **சாருவுக்கும்** என் அன்பு நிறைந்த நன்றிகள்

# சிறுகதை பற்றிய சிறு குறிப்பு

சிறுகதை என்பது சிறியகதை என்பதல்ல. பெரியகதையுமல்ல. நாவலின் ஒரு அத்தியாய முமல்ல. நாவலின் தொகுப்புமல்ல. ஒரு நாவல் ஆலமரமாக இருந்தால் வாழைமரம் சிறு கதை யாக இருக்கும் எனலாம்.

வாசகன் குறைந்த நேரத்தில் ஒரு சிந்தனைப் பொறியைப் பெற்றுக் கொள்வதே சிறுகதை யாகும். தொடக்கம் ஆர்வத்தையும் முடிவு சிந்தனையையும் கொண்டிருத்தல் சிறுகதைக்கான சிறந்த ஆபரணமாகும். தேவையற்ற வர்ணனை களைச் சிறுகதையில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வசனத்துக்கு வசனம் வாசகனை வியப்பிலாழ்த்திச் செல்ல வேண்டும்.

சிறுகதைக்கென்று ஒரு நிலையான இலக்க ணமோ அல்லது அமைப்பு முறையோ இல்லை.

சிறுகதை உரையாடுதல் போல் அமையலாம். ஒரு சம்பவம் எழுத்தாளன் மனதில் ஏற்படுத்துகின்ற ஒரு பொறியே சிறுகதையாக உருவாகிறது. எழுத்தாளன் தன் சுய அனுபவங்களைக் கதை யாக வடிக்க முயலும்போது அதற்கு அப்பால் வாசகனைச் சிந்திக்க வைக்கும் வண்ணம் ஏதோவொன்று இருக்கிறது என்பதை மனதில் கொள்ளவேண்டும். வெறுமனே அனுபவச் சித்தரிப்பு சிறுகதையாகாது என்பதை மனதில் கொள்ளுங்கள். பல பிரபலமான சிறுகதை ஆசிரியர்கள் இந்தப் பாணியில் எழுதிய கதைகள் பெரு வெற்றியைப் பெற்றிருக்கின்றன. இத்தனை பாத்திரங்கள் தான் சிறுகதையில் இருக்க வேண்டுமென்ற விதிகள் ஏதுமில்லை.

சிறுகதைகளில் நீண்ட வசனங்களைத் தவிர்த்தல் வேண்டும். மூன்று அல்லது ஐந்து சொற்களைக் கொண்ட வசனங்கள் சிறுகதையை மெருகூட்டும். இதற்கு சிறுகதை ஆசிரியன் சொல்லாட்சி கொண்டனவாக இருத்தல் வேண்டும். சொல்லாட்சி நிறைந்த நிலையைப் பெறுவதற்கு வாசிப்புக் கூடுதலாக இருக்கவேண்டும்.

முடிவுகளை எழுத்தாளன் வலிந்து கூறுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும். வலிந்து கூறும்போது கதையில் தத்துவப் பிரச்சாரம் முன்னுக்கு வந்துவிடும். முடிவினை வாசகன் எடுக்கும் வண்ணம் கதை நகர்த்தப்படுதல் வேண்டும். அதுவே கதையின் வெற்றியைத் தீர்மானிக்கும்.

கதையின் ஆரம்பமும் நகர்வும் வாசகனை ஏமாற்றக் கூடாது. காலத்துக்குக் காலம் சிறுகதையின் வடிவம் மாற்றமடைந்து செல்கிறது. புதுமைப்பித்தன் காலத்துச் சிறுகதைகள் அவரு டைய காலத்தில் உச்சத்தைத் தொட்டிருக்கலாம். இப்போதல்ல. நாம் அவரின் சிறுகதைகளைப் படிக்க வேண்டும். ஆனால் அதுவே சிறு கதைக்கான இலக்கணம் என மயங்கக் கூடாது. இன்றைய மனிதனின் வாழ்க்கை முறைகளை அடிப்படையாக வைத்தே இலக்கிய வடிவங்களும் தன்னிலைத் திருத்தம் அடைகின்றன. இன்றைய உலகம் கடுகதிப் புகையிரதம் போல் ஓடிக் கொண்டிருக்கின்றது. இந்தத் துரித வாழ்வுக்கு ஏற்றமாதிரிச் சிறுகதைகள் புது வடிவம் எடுப்பது தவிர்க்க முடியாததே. சிறுகதையில் கலையம்சம் என்பது இயல்பாகக் கதை வாசகனை மகிழ் வித்தபடி நகர்ந்து செல்வதாகும்.

இங்கே நான் கூறுபவைகள் வெறுமனே என் வாசக அனுபவங்களினூடாகக் கிரகித்துக் கொண்டவையே. இவற்றிற்கு மேலாக உங்களிடம் இருந்தால் அதை எமக்கு அனுப்பி வையுங்கள்.

**மு. தயாளன்**



# நிறக்கவர்ச்சி…

அலெக்ஸ் பரந்தாமன்

**அ**கிலா எங்களது பத்திரிகை ஊடகத்தில் பணிக்காக அமர்த்தப்படும் பொழுது, ஊடகம் சார்ந்த அறிவு எதுவும் அவளுக்கு இருக்கவில்லை. பயிலுநர் என்ற தகுதி அடிப்படையில்தான் அவள் ஒப்பு நோக்குப் பகுதியில் எனது மேற் பார்வையின் கீழ்ப் பணிக்கு அமர்த்தப்பட்டாள். புதிய இடம்… புதிய வேலை… புதிய மனிதர்கள்…

அவள் ஆரம்பத்திலேயே சங்கடப்படுவது தெரிந்தது. முதலில் அவளது மனத் தயக்கத்தைப் போக்க வேண்டும் அவளை ஓர் இயல்பான நிலைக்குக் கொண்டு வருவதோடு, தொழில் விடயதானங்களையும் உரிய முறையில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குள் உதித்தது.

ஒப்பு நோக்குநர் பதவிக்குப் பொருத்தமான சகல தகுதி நிலைகளும் அவளிடம் இருப்பதை, நாள்கள் நகர நகர என்னால் அவதானிக்க முடிந்தது.

பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை, தேடல் அவா, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தவறு நிகழின் அதை ஏற்றுக் கொள்ளும் பெருந்தன்மை… என்பன அவளிடம் மேலதிக தகைமைகளாக இருந்ததில், எனக்கு என் தொழில் நிமித்தம் அவளைப் பிடித்துக் கொண்டு விட்டது. அத்தோடு அவளைச் சுற்றி இன்னொரு விடயமும்

**“அவையளா வலிய வரேக்கை, நாங்கள் சீதேவியைக் காலாலை எட்டி உதைக்கிற மாதிரி இருக்கக் கூடாது பிள்ளை. பொடியன் ஒரு புடைவைக் கடை முதலாளி. தேப்பன் பொயிலைக் கட்டு விக்கிற வியாபாரி. ரண்டு பேரிட்டையும் காசு பணம் நிறையக் கிடக்குது. உன்ரை வடிவைக் கண்டுதான் அவையாக வலிய வருகினம். நாங்களும் எத்தனை நாளைக்குத்தான் பட்டினிப் பானைக்குள்ளை ஏப்பையைப் போட்டுக் கிண்டுறது…**

பிணைந்திருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. அதுதான் வறுமை! இந்த வறுமையே அவளது மன உணர்வுகளில்

பொறுமையை ஊக்குவித்தது எனலாம். தனது அடிமட்ட நிலையைப் புரிந்து கொண்டவள், தொடர்ந்தும் ஏ.எல்.படிப்பை மேற்கொள்ள முடியாதவளாகப் பத்திரிகைத் துறைக்கு வேலைக்காக வந்து சேர்ந்ததாகப் பிறிதொரு நாள் அவள் என்னோடு உரையாடும் போது கூறியிருந்தாள். தந்தை ஒரு கூலித் தொழி லாளி. அதுவும் நிரந்தரமற்ற தொழில். அவர் உடல் அலுப்புக்காகக் குடிக்கப் பழகி, அதுவே நிரந்தரமாகி... உழைக்கும் ஊதியத்தில் அரைப் பங்கினை அது உறிஞ்சிக் கொண்டிருந்தது. “முட்டுப்பட்ட குடும்பம்“ என்றே பரிகசிக்கும் உறவினர்கள் கூடத் தங்களது பெரும்பாலான நன்மை - தீமையான காரியங்களில் கூட அவர்களைச் சற்று ஒதுக்கியே வைத்திருந்தார்கள். வயது வளர வளர அதை அகிலாவினால் புரிந்து கொள்ள முடிந்தது. இதையும் அவள் ஒரு நாள் எனக்குச் சொல்லிக் கவலைப்பட்டாள். தந்தையின் பொறுப்பற்ற தன்மையும் இரத்த உரித்துக்கள் வெளிக்காட்டுகின்ற அலட்சிய வெறிப்போக்கும் அகிலாவின் மனதில் ஓர் அதிர்வை ஏற்படுத்தியிருந்தன.

என்ன இழிநிலை வருமெனினும், இந்தச் சமூ கத்தின் முன் வாழ்ந்து காட்டியே ஆக வேண் டுமென்ற ஒரு வைராக்கிய மன நிலையை அவளுக்குச் சூழ்நிலைகள் ஏற்படுத்தி விட்டிருந்தன. என்னைவிட அவள் அக வையில் இருபது வருடங்கள் பின்நிலையில் இருந்தாலும், எவ்வளவு பொறுப்புள்ள பெண் அவள். எனக்கு அவளை நினைக்கப் பெரு மையாகவும் மகிழ்வாகவும் இருந்தது. எவ ரோடும் எந்த விடயத்துக்காகவும் எதிர்த்துக் கதைக்கத் தெரியாத மனோபாவம் அவ ளிடத்தில் இருந்தது. அவளது குழந்தைத் தனமான முகத்தில் வஞ்சகம் எதுவும் இருக்க வில்லை. உதடு பிரியாத அவளது புன்ன கைப் பூக்கள் மலரும் காலங்களை ஞாபக ப்படுத்தும். பார்வைக்கு லட்சண மாக இருந்தாள். நல்ல சிவந்த நிறம்! பண்பான உடையணிதலோடு இளம் வய துக்குரிய உடல்வாகு அவளுக்கிருந்தது.

இதன் நிமித்தம் அப்பத்திரிகை ஊடகத்துள் சில வாலிபங்கள் மட்டுமின்றி வயோதிப ங்களும் மனச் சபலப்பட்டு, அவள் முன்னே ஓய்வான நேரங்களில் வந்து “வழிவதை“ நான் பலதடவைகள் கண்டுமிருக்கிறேன். இதைக் குறித்து... அவர்களைக் குறித்து அவளுக்கு எச்சரிக்கையும் செய்து கொள்ளு வேன்.

‘‘கவனம் பிள்ளை... உதுகள் ஒரு மாதிரி....”

நான் கூறும் வார்த்தைகளுக்கு முன்னால் வழ க்கம்போல அவள் தனது புன் முறுவலை உதிர்த்து விட்டுச் சென்று விடுவாள். ஆயி னும், அவள் எச்சரிக்கையாகவே எல்லோரு டனும் நடந்து கொண்டாள். பத்திரிகை ஊட கத்தினுள் ஒப்பு நோக்குநர் பகுதிக்குப் பலர் பணியாற்றுவதற்காக வந்து தாக்குப் பிடிக்க முடியாமல் விலகிக் கொண்டிருந்தார்கள். அகிலா இப்போது கணினிப் பகுதியில் தனது கடமையைச் செய்து கொண்டிருந்தாள். ஒப்பு நோக்குப் பயிலுனராக வந்த அவள், மதிய நேர உணவு வேளையின் போது, கணினித் தட்டச்சில் “ ரைப் “ அடிக்கப் பழகி இப் போது செய்திகளைப் “பக்கம் போடும்’’ நிலைக்கு உயர்ந்து நின்றாள். அவள் அந்த

ஊடகத்தினுள் கடமைக்கென வந்து எட்டு வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. என்னால் தொடர்ந்தும் ஊடகத்துள் பணியாற்றுவதற்கு உடல்நிலை ஒத்துழைக்க மறுத்தது. கட மையில் இருந்து விலகுவதென முடிவு செய்தேன். விலகற் கடிதத்தை நிர்வாகத் திடம் ஒப்படைத்ததை அறிந்த அவள் கலங்கிய கண்களுடன் என் முன்னால் வந்து நின்றாள். “ஐயா! நான் இந்த ஊடகத்துக் குள்ளை வந்தநேரம் உங்களைச் சந்திக்காமல் இருந்திருந்தால் இந்த எட்டு வருசமும் நான் இதுக்குள்ளையிருந்து தாக்குப் பிடிச்சிருக்கமாட்டன்”.மெலிதான நீர்க் கசிவு மேலும் தென்படுகிறது அவள் கண்களில். என்னால் அவளை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அதேசமயம், அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதும் விளங்கியது எனக்கு. மிகுந்த மன அழுத்தத்தோடு அவ ளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு நான் ஊடகத்தைவிட்டு வெளியே வந்து விட்டேன். நான் அவளை விட்டுப் பிரிந்து மேலும் இர ண்டு வருடங்களாகிவிட்டன. எனது பூர்வீகம் வேறு ஒரு பிரதேசத்தில் உள்ள கிராமமா கையால் நான் அங்கு சென்று விட்டேன். ஒருநாள் எதிர்பாராதவிதமாக என்னோடு ஊடகத்தில் பணியாற்றிய நண்பனொருவ னைக் கிராமத்தின் சந்தியில் கண்ட போது… அவன் அகிலாவைப் பற்றிக் கூறிய விடயங்கள்…. அப்படியே என் மனதை நொரு ங்கிப் போகச் செய்தன.

“அகிலா! இஞ்சை பாரம்மா..முருகேசற்றை மூத்த பொடியன் உன்னைத் தனக்குக் கட்டி த்தரச் சொல்லித் தன்ர தாய் தேப்பனைக் கேட்டிருக்குது. சீதனம் நகை நட்டு ஒண்டும் வேண்டாமாம். உன்னை மட்டும் தரச்சொல்லிப் பொடியன் கேக்குது.” அகிலாவின் தந்தை மெதுவாகப் பேச்சை ஆரம்பிக்க, அதிர்ந்து போய் நின்றாள் அகிலா.

“அவையளா வலிய வரேக்கை, நாங்கள் சீதேவியைக் காலாலை எட்டி உதைக்கிற மாதிரி இருக்கக் கூடாது பிள்ளை. பொடி யன் ஒரு புடைவைக் கடை முதலாளி. தேப் பன் பொயிலைக் கட்டு விக்கிற வியாபாரி. ரண்டு பேரிட்டையும் காசு பணம் நிறையக் கிடக்குது. உன்ரை வடிவைக் கண்டுதான் அவையாக வலிய வருகினம். நாங்களும் எத்தனை நாளைக்குத்தான் பட்டினிப் பானை க்குள்ளை ஏப்பையைப் போட்டுக் கிண்டுறது… சொல்லு பாப்பம்”.

தாயும் அருகில் வந்து ஒத்துப்பாட ஆரம் பித்தாள். அகிலாவுக்குப் பெரும் குழப்ப மாக இருந்தது. தனது வாழ்வுக்கான சீதன த்தைத் தனது பெற்றோர் தேடி வைக்காத நிலையில் எப்படியோ எவனுக்கோ தனது முகலட்சணத்தை முன் நிலைப்படுத்தித் தள்ளிவிட முனைகின்றனர்… என்பது மட்டும் தெளிவாக விளங்கியது அவளுக்கு. முரு கேசரின் மூத்தபொடியன் நல்ல “பணப் பசை“ உள்ளவன் என்பது அகிலாவுக்குத் தெரியும். ஆனால் அவன் தனக்குப் பொருத்தமான வனா… என்பது குறித்து அவள் தனக்குள் கலங்கினாள். இதற்கு மறுப்புத் தெரிவித்தால், மேற்கொண்டு குடும்பத்துக்குள் எழும் குழப்ப நிலை குறித்து அஞ்சினாள். அவளது மென்மையான சுபாவத்தையும் அடக்க ஒடுக்கமான பண்பியலையும் பெற்றோர்

தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு.... முருகேசருக்குச் சம்மதம் தெரிவித்து விட்டனர். தனது எதிர்கால எண்ணங்களுக்கும் கனவுகளுக்கும் எதிர் மறையாகவே நிகழ்வுகள் அமைந்து விட்டதை அகிலா உணர்ந்து கொண்டாள். இனி அழுது குளறி ஆர்ப்பாட்டம் செய்வதால் எதுவித பலனுமில்லையென்பதும் புரிந்தது.

அவளுக்குச் "சாதகப் பொருத்தம் நல்லதாகப் பொருந்தியிருக்குது..." என்று ஒரு தடவை அவளது தந்தை தாய்க்குக் கூறியபோது, அவள் தன் மனதுக்குள் குமைந்தழுதாள்

."சாதகப் பொருத்தம் மட்டும் பொருந்தினால் போதுமே? மனப் பொருத்தம், முகப் பொருத்தங்கள் பார்க்க வேண்டாமே…" தாயை ஒருதடவை இப்படிக் கேட்க வேண்டும் போல் தோன்றினாலும், அவளது அமைதி நிலைச் சுபாவம் ... அந்த வார்த்தைகளை வாயிலிருந்து வெளியே வரத் தடுத்து விட்டது. " இந்தக் கல்யாணத்திலை உனக்குச் சம்மதமிருக்கா? " என்றாவது ஒரு வார்த்தையைக் கேட்டிருக்கலாம். வாயில்லாப் பூச்சிமாதிரி வளர்த்து விட்டு இப்படிச் செய்து விட்டார்களேயென அவள் தனக்குள் அழுத படி... மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டிருந்தாள் தனக்குள் சிரிப்பைத் தொலைத்தவளாக...

மதியப் பொழுது தளர்ச்சியடையும் அந்த நேரத்தில் நான் அகிலா வசிக்கும் வீட்டைத் தேடிப் போய்க் கொண்டிருந்தேன். கேற்வாசலில் நின்றவாறு குரல் எழுப்பி விட்டு நிற்கையில் ஒருவர் மிதி வண்டியுடன் வந்து கேற்றைத் திறந்தார்.

"யார் நீங்கள்....? உங்களுக்கு என்ன வேணும்.?"

நான் என்னைப் பற்றிக் கூறியதும்...கேள்வி கேட்டவரின் முகம் ஒருகணம் சட்டெனச் சுருங்கியது... விரிந்தது. .. பின் சிறிது விகாரமாக மாறி மறைந்தது.

அவர் எதுவும் கூறவில்லை. நான் பிடித்திருந்த கேற்றை மேலும் விரிவாகத் திறந்து விட்டு, அதனூடாகத் தனது மிதி வண்டியைத் தெருவுக்கு நகர்த்தியவர், அதன்மீது ஏறி அப்பால் சென்று மறைந்தார்.

எனக்குச் சற்று குழப்பமாக இருந்தது. நான் தவறாக எதுவும் கூறவுமில்லை கேட்கவுமில்லை. அப்படியிருக்க.... இவர் ஏன் இப்படி...?

"உள்ளை வாங்கோ ஐயா..." குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறேன்.

வீட்டு வாசலில் அகிலா நின்று கொண்டிருந்தாள். நீண்ட நாள்களுக்குப் பின்பு... என்னைக் காணும் ஆர்வமோ உவகையோ எதுவுமற்றவளாய் அவளும் முகம் இறுகிய

நிலையில்...

எனக்கு ஒன்று விளங்கிக் கொண்டது. மனமுடைந்த மணவாழ்க்கை அவளுக்குக் கிடைத்துள்ளது. ஊருக்கும் பேருக்கும் ஒரு ஒப்புதல் வாழ்க்கையாக அவள் வாழ்ந்து கொண்டிருப்பதும் விளங்கியது. இருப்பினும், முகத்தில் வில்லங்கமாக ஒரு சிரிப்பை வரவழைத்துக் கொண்டேன்.

"எப்படிச் சுகங்கள்...?" என விசாரித்தவாறே, கடந்துபோன ஊடக வேலைகளினூ

டாகக் கதையை நகர்த்தியபடி... "எங்கை உங்கட அவரைக் காணேல்லை...?" என்று கேட்டேன்.

"இப்ப கேற்வாசல்லை உங்களோடை கதைச்சிட்டுப் போறாரே... அவர்தான்..."

அவளது பதில்....?!

ஆயிரம் இடிகள்... மின்னல்களுடன் ஒன்றாக இணைந்து, உடலுக்குள் இறங்கியது போன்ற உணர்வைக் கொடுத்தது.

"அவரா...?"

எனது முகம் என்னையறியாமலே கேற்றடிப்பக்கம் திரும்பி விட்டுத் திரும்பவும் அவள் முகத்தைப் பார்த்தது. முகத்தில் மேற்பற்கள் நான்கும் மேலுதட்டைத் துருத்திக் கொண்டிருந்த நிலையில், உள் குழி விழுந்த கன்னமும் அதன் மேல் அம்மைத் தழும்புகளாகத் தோற்றமளித்த பள்ளங்களும் மெல்லிய உடல் வாகுடன் கன்னங்கரேல் நிறத்தில் சுருள் தலைமுடிகளுடன் ஓர் ஆபிரிக்க மனிதனைப் போல் தோற்றமளித்த அவனா அகிலாவின் கணவன்?

எனது மனவோட்டத்துடன் கூடிய முகபாவத்தை அவள் கவனித்திருக்க வேண்டும். என்னைப் பார்த்து அழத் தொடங்கினாள். வீட்டில் வேறு எவரும் இருக்கவில்லை என்பதால் அவள் தனக்கு ஏற்பட்ட திருமண அதிருப்தி குறித்து என்னிடம் விபரமாகச் சொல்லி அழுதாள். நான் அவளை அனுதாபத்தோடு பார்த்துக் கொண்டிருந்தேன். அவளது பெற்றோர்கள் எதிர்பார்த்தது தமது மகளின் மனப் பொருத்தத்தைவிடப் பணப் பொருத்தம்! முருகேசரின் மூத்த மகனுக்குத் தேவைப்பட்டது ஒரு பெண்ணின் புரிதலை விட அழகான முகமும் சிவப்பு நிற உடலும். சுயநலம் சார்ந்த தேவைக்கும் தன் நலம் சார்ந்த ஆசைக்கும் நடுவில் பண்பியல் அமைவுகளோடு கூடிய ஓர் அமைதி ஆளுமை அகப்பட்டுச் சின்னா பின்னமாகி நிற்பதை என்னால் உணர்வதற்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. பொழுது நன்றாக இறங்கி விட்டிருந்தது. நான் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன்.

## தொல்காப்பியர் கூறும் கதை மரபு

கதை சொல்லும் மரபு தொன்று தொட்டு இருந்து வந்தது என்பதை வலியுறுத்தி பின்வரும் பாடலைத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**பொருள் மரபில்லாப் பொயம் மொழி யானும்**
**பொருளோடு புணர்ந்த நகை மொழியானும்**

## தகவல் 1

19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உலகம் பல மாற்றங்களைச் சந்தித்தது. குறிப்பாக ஆங்கில மொழியின் செல்வாக்கினால் தமிழ்ச் சிறுகதையுலகம் பல மாற்றங்களை அடைந்தது. வாய் மொழியாக வழங்கப்பட்டு வந்த பல கதைகள் அச்சில் வந்தன. இந்த வரிசையில் முதன் முதல் அச்சில் வந்தது வீரமாமுனிவரின் பரமார்த்த குருவின் கதையாகும்.

# ஒரு மாற்றம்.



என். நஜ்முல் ஹுஸைன்

முன்னாள் கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சாந்தகுமார் அழைப்பிதழை வெறித்துப் பார்த்தார். உள் மனது அவரையறியாமலேயே வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. அழைப்பிதழில் கொட்டை எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்த வாசகம்தான் அவரை வேதனை கொள்ளச் செய்தது.

“ விவசாயிக்கு வாழ்வு கொடுத்த அமைச்சருக்குப் பாராட்டு விழா” தான் கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கடுமையாக உழைத்து அபிவிருத்தி செய்த கமத்தொழில் வேலைத் திட்டங்களை ஆறு மாதங்களுக்கு முன்பு தேர்தலில் வென்று தான் அமைச்சராகவிருந்த அதே அமைச்சைப் பெற்றுக் கொண்ட பத்மசிரி அந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான வெற்றி விழாவையும் பாராட்டு விழாவையும் தனது ஜனாதிபதியின் தலைமையின் கீழ் ஏற்பாடு செய்திருந்ததோடு அந்த அழைப்பிதழையும் சாந்தகுமாருக்கு அனுப்பி வைத்திருந்தார். தான் அந்த விழாவுக்குச் சென்றால் அது தனது வேதனையை அதிகரிக்கும், அங்கே சொல்லப்படும் பொய்கள் தனக்கு எரிச்சலைத் தரும் என்று உணர்ந்து கொண்டதால் அந்த விழாவுக்குப் போவதில்லை என அவர்

தீர்மானித்துக் கொண்டார்.

அப்படி இருக்கும்போதுதான் அமைச்சர் பத்ம சிரியின் பிரத்தியேக செயலாளர் சாந்தகுமா ருக்கு தொலைபேசி அழைப்பெடுத்து அமை ச்சர் கதைக்க வேண்டும் என்கிறார் என்றார். பேசத் தேவையில்லை என நினைத்துக் கொண்டிருந்த போதே பத்மசிரி லைனில் வந்து விட்டார். “சேர் நீங்கள் கட்டாயம் இந்த விழாவுக்கு வரவேண்டும். என்னை வாழ்த்த வேண்டும்” என்றார்.

ஒரு இளைஞன் அமைச்ச ராய் வந்திருக்கிறான். “வந்து வாழ்த்துங்கள்” என்று வினயமாகக் கேட்கிறான். என்ன இரு ந்தாலும் அந்தப் பதவியில் மூன்று மாதங்களுக்கு முன்பு இருந்தவன். புதிய அமைச்சரின் நடவடிக்கைகளை அவதானிப்பது தனக்கும் எதிர்கால நடவடிக்கைகளுக்கும் நன்மை பயக்கும் என்பதனால் சரி போவோம் என்று தீர்மானித்தார்.

**ஆட்சிக்கு வருவது நாங்கள் மக்களுக்காக எங்கள் வாழ்க்கை யைத் தியாகம் செய்து சேவையா ற்றுவோம் என்று சொல்லித்தான். ஆனால் எத்தனை அரசியல் வாதிகள் அப்படிச் செய்கிறார் களோ எனக்குத் தெரியாது. ஆனால் சாந்தகுமார் சேர் அவ ர்கள் தனது நேர காலத்தை மக்க ளுக்காகத் தியாகம் செய்து சேவையாற்றியிருப்பதை நான் கண்டு கொண்டேன்.**

ஐந்து வருடங்கள் அவர் அங்கம் வகித்த கட்சிதான் ஆட்சியில் இருந்தது. தனது அமைச்சைச் சாந்தகுமார் முடிந்தவரை சிறப்பாக வழி நடத்தினாலும், தனது சக அமைச்சர்கள் எப்போதும் ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகிக்கொண்டே இருந் தார்கள். அரசினால் விலை வாசியைக் கட்டுப் படுத்த முடியாமல் போனது.

ஒரு மாதத்திற்கு ஒரு தடவையாவது ஏதாவது ஒரு வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டே இருந்தது. மேடைகளிலே வீரா வேசமாகப் பேசுவதற்கு எதிர்க்கட்சிக்கு எப்போதும் ஏதாவதொரு தலைப்புக் கிடை த்துக் கொண்டே இருந்தது.

நடந்து வந்த ஆட்சியின் மீது பெரும்பாலான மக்களுக்கு வெறுப்பேற்படும் வகையிலே சம்பவங்கள் நடந்து கொண்டு வந்தன.

ஒரு சில நல்ல அமைச்சர்கள் இருந்த போதும் தேர்தல் வந்தபோது வெற்றி பெற முடியாது சாந்தகுமாரின் கட்சி படுதோல்வியைத் தழுவியது.

தாம் ஆட்சி அமைத்தால் ஊழல் செய்த அமைச்சர்களைச் சிறையில் அடைப்போம், ஜம்பர் அணிவிப்போம், தூக்கு மேடை அனுப்புவோம் என்று எதிர்க்கட்சி முழங்கி வந்ததால் சாந்தகுமாரின் கட்சியைச் சேர்ந்த பலர் உள்ளூர அச்சத்தோடிருந்தது சாந்தகுமாருக்குத் தெரி யும் என்றாலும் சாந்தகுமார் கறைபடியாதவர். அவர் தனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாத வகையில் தனது பணியினைச் செய்தவர். தேர்தல் காலங்களில் சாந்தகுமார் பற்றியும் எதிர்க்கட்சியினர் வசை பாடினாலும் ஒப்பீட்டளவில் அவை குறைவானவையே.

இளம் அமைச்சரான பத்மசிரி தொலைபேசி அழைப்பு விடுத்தவிதத்தில் அதனைத் தட்டிக் கழிக்க முடியாத நிலைக்குச் சாந்தகுமார் தள்ளப்பட்டார். கட்டாயம் அவரது மனைவி பிள்ளைகளோடு விழாவில் கலந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். என்

றாலும் அதனை அவரது மனைவி பிள் ளைகள் ஏற்றுக் கொள்வதாயில்லை. அது மட்டுமல்ல அவரைக் கூட அந்த விழா வுக்குப் போக வேண்டாம் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அங்கே போனால் அங்கே நடக்கும் நிகழ்வுகள் அவரது மன தைப் பாதிக்கும் என்றும் சொன்னார்கள்.

“ இல்லை…… ..இல்லை என்ன நடந்தாலும் பரவாயில்லை. நான் ஒரு ஜென்டில்மேனாக நடந்து கொள்ள வேண்டும். எனது பேச்சை மதித்து நீங்களும் கட்டாயம் வரவேண்டும்” என்று மிகவும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அவரது இரண்டு பிள்ளைகளான மகளும், மகனும் அவரது மனைவியும் அவருக்கு மேலும் வேதனை தரக் கூடாதென்பதற்காக அரை மனதுடன் ஒத்துக்கொண்டனர். தேர்தல் தோல்வி அவரை பெரும் துன்பத்திற்கு ள்ளாக்கி இருந்தது அவர்களுக்குத் தெரியும். தன்னலம் பாராது சேவை செய்த அவர் தேர் தலில் தோல்வியுற்றதால் அவர்கள் கூட மனம் சோர்ந்துதான் இருந்தனர்.

விழா மண்டபம் நிறைந்து வழிந்தது. முன்னாள் அமைச்சர் சாந்தகுமாருக்கு முன் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. மனைவி பிள்ளைகளுக்குப் பின் வரிசையில் ஏற்பாட்டுக் குழு உறுப்பினர் அழைத்துச் சென்று அமர வைத்தார். அதன் பிறகுதான் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் வந்தனர். சாந்தகுமாருடன் இருவருமே வெறும் புன் னகையுடன் கடந்து சென்றனர். அமைச்சர் பத்மசிரி மட்டும் அருகில் வந்து கைலாகு கொடுத்தார். ஜனாதிபதி பிரதமர் வெளி நாட்டுப் பிரதிநிதிகளுடன் கதைப்பதிலேயே கவனம் செலுத்தினர்.

ஜனாதிபதி பிரதமருடன் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற உதவிய ஜப்பான் கம்பெனித் தலைவரும் மேடையில் சென்றமர்ந்தனர். சாந்தகுமார் அமைச்சராக இருந்தபோது பல முறை அந்த ஜப்பான் கம்பெனித் தலைவர் அவரைச் சந்தித்துள்ளார். கால மாற்றத்தை எண்ணிச் சாந்தகுமார் தனக்குள் சிரித்துக் கொண்டார். அமைச்சர் பத்மசிரியும் ஜனாதி பதிக்கருகில் அமர்ந்தார்.

நிகழ்வுகள் ஆரம்பமாகின. அந்த அபிவிரு த்தித் திட்டத்தின் ஒவ்வொரு படிமுறையும் திரையில் விளக்கிக் காட்டப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் அடையும் நன்மைகள் பற்றிச் சிலாகித்துக் கூறப்பட்டது. பல விவ சாய உற்பத்திகளின் இறக்குமதியை எதிர் பார்த்திருந்த நாடு அதே பொருட்களை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு முன்னேற்றம் கண்டது விளக்கப்பட்டது. இதன் மூலம் நாடு பல பில்லியன் ரூபாய்களைப் பெறும் என்றும் மேடையில் பேசப்பட்டது. இந்தத் திட்டம் உலக நாடுகளை நம் பக்கம் திரும்பிப் பார் க்க வைக்கும் என்றும் வர்ணிக்கப்பட்டது. அமைச்சர் பத்மசிரி மேடையில் மிகவும் பெரு மிதத்துடன் வீற்றிருந்தார். அத்தனை புகழார ங்களையும் அவர் தனக்குரியது என்று சூடிக் கொண்டது சாந்தகுமார் மனதை ஏதோ செய் தது.

ஒருவர் கஸ்டப்பட்டுச் செய்த அபிவிருத்தித் திட்டத்தைத் தான் செய்ததாகப் பறை சாற்ற எப்படித்தான் மனச்சாட்சி இடம் கொடுக்கி றதோ. சரி சரி இதற்காக தான் ஒன்றும் கவ லைப்படக்கூடாது. கவலைப்படுவதாகக்

காட்டிக் கொள்ளவும் கூடாது. இதெல்லாம் அரசியலில் சகஜம்தானே. இப்படித்தானே ஒவ்வொரு ஆட்சியிலும் நடக்கிறது. தனது கட்சி ஆட்சி செய்த வேளையில் கூட எத்தனை அமைச்சர்கள் முந்தைய ஆட்சியில் செய்த திட்டங்களுக்குத் தங்களது பெயரைப் பொறித்துக் கொண்டனர். நினைவுப் புத்தகத்திலே தங்களது பெயர்களைத்தானே பதித்துக் கொண்டனர்.

மேடையில் ஆண் பெண் என இரண்டு அறிவிப்பாளர்கள் மாறி மாறிப் பேசினர். ‘‘இப்போது இப்படியான மாபெரும் திட்டத்தை வெற்றிகரமாக செய்து நொடிந்து போயிருந்த விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய அமைச்சரைப் பாராட்டும் நிகழ்வு. கௌரவ ஜனாதிபதி அவர்களை மாண்புமிகு பிரதமர் அவர்களைத் திட்டத்தை வெற்றிகரமாக நடாத்தக் கரம் கொடுத்த ஜப்பான் கம்பெனித் தலைவரை மேடைக்கு முன்னால் அழைக்கிறேன். அவர்கள் மூவரும் மேடைக்கு முன்னால் வந்து நின்றனர்.

‘‘ இப்போது கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு பத்மசிரி அவர்களை மிகவும் கௌரவத்துடன் முன்னால் அழைக்கிறேன் ”

பத்மசிரி மிகவும் பெருமையுடன் முன்னால் வந்தார். சபையோரின் கரகோஸம் வானைப் பிளந்தது. முன்னாள் அமைச்சர் சாந்தகுமாரும் தன் பங்குக்குக் கைகளைத் தட்டி வைத்தார். மறுபடியும் அறிவிப்பாளர், ‘‘நமது தாய் நாட்டுக்கு இவ்வாறான ஒரு அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்திய அமைச்சரைப் பாராட்டுவது நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் கடமையாகும். ஏனெனில் அவர் எங்களைப் பற்றி மட்டும் சிந்திக்கவில்லை. எமது சந்ததிகளைப் பற்றியும் சிந்தித்துள்ளார். அவருக்கு இந்த நாடு என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது. அத்தகைய பெருமை பெற்ற அமைச்சரை மிகவும் கௌரவத்தோடு மேடைக்கு அழைக்கிறேன்” என்று சொன்னதும் அமைச்சர் பத்மசிரி மிகவும் பெருமையோடு ஜனாதிபதிக்கருகில் வந்து நின்றார்.

மறுபடியும் அறிவிப்பாளர், ‘‘சபையோரே இந்தப் பெருந்தகையை வாழ்த்த கௌரவிக்கத் தயவுசெய்து அனைவரும் எழுந்து நிற்குமாறு பணிவோடு வேண்டுகிறேன் ”

முழுச் சபையும் எழுந்து நின்றது. முன்னாள் அமைச்சர் சாந்தகுமாரும் எழுந்து நின்றார்.

அறிவிப்பாளர், ‘‘இந்த வெற்றிகரமான அபிவிருத்தித் திட்டத்தைத் தந்த அமைச்சரை மிகுந்த கௌரவத்துடன் அழைக்கிறேன். ‘‘மேடையில் நிற்கும் அமைச்சர் பத்மசிரியை அறிவிப்பாளர்கள் இன்னும் எவ்வளவு நேரத்திற்குத்தான் வர்ணித்துக் கொண்டிருப்பார்கள். சாந்தகுமார் நினைத்துக் கொண்டார். மீண்டும் அறிவிப்பாளர், ‘‘கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சாந்தகுமார் அவர்களை அன்போடு மேடைக்கு அழைக்கிறேன்”

அடடா அறிவிப்பாளர் தவறுதலாக அமைச்சர் பத்மசிரி என்பதற்கு பதிலாக முன்பு சொல்லிச் சொல்லி பழக்கப்பட்ட தனது பெயரைச் சொல்லிவிட்டார். நிச்சயம் விழா முடிந்ததும் அறிவிப்பாளரது சீட்டுக் கிழிந்து விடும்.

அப்படித்தான் ஆட்சி மாறிய புதிதில் புதிய ஜனாதிபதியின் படத்திற்கு பழைய ஜனாதி பதியின் பெயரைப் போட்டதனால்
வேலை இடை நிறுத்தப்பட்ட பத்திரிகை ஆசி ரியரும் சாந்தகுமாரின் நினைவுக்கு வந்தார். என்றாலும் அறிவிப்பாளர் மீண்டும் சொன்னார் "முன்னாள் அமைச்சர் சாந்தகுமார் அவர்களை மிகவும் கௌரவத்துடன் மேடைக்கு அழைக்கிறேன்"

சாந்தகுமாருக்கு இப்போது தெரிந்தது. அறிவிப்பாளர் தெரியாமல் சொல்லவில்லை. தெரிந்தேதான் சொல்கிறார். அவரையறியாமல் அவரது உள்ளம் நடுங்கியது. மேடையிலி ருந்து அமைச்சர் பத்மசிரி இறங்கி வந்தார்.

"வாங்க சேர் மேடைக்கு ..."

முன்னாள் அமைச்சர் சாந்தகுமாருக்குக் காது கேட்கவில்லை. மீண்டும் அழைத்தார் அமைச்சர் பத்மசிரி, "வாங்க சேர் மேடைக்கு"

சாந்தகுமாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழைத்தார். சாந்தகுமார் தன்னை அறியா மலேயே பத்மசிரியோடு மேடைக்குச் சென் றார். நடப்பதெல்லாம் ஒரு கனவு போல் அவ ருக்குத் தோன்றியது. சாந்தகுமாரை ஜனா திபதிக்கு அருகில் பத்மசிரி நிறுத்தினார். பின்பு ஒலிவாங்கி முன்னால் நின்று பேசினார்

" அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர், மாண்புமிகு அமைச்சர்கள் பாராளுமன்ற உறு ப்பினர்கள், அதிதிகள் பொதுமக்கள் அனைவ ருக்கும் வணக்கம். என்னைக் கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக நியமித்ததும் அமைச்சுக்குச் சென்று அங்கே முன்பு என்னென்ன ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று கண்டு பிடிக்கச் சென்றேன். எனது புதிய செயலாளரும் நானும் பைல் பைல்க ளாகத் தேடினோம். ஒருநாள் எனது செய லாளர் தயங்கித் தயங்கி ஏதோ சொல்ல வந்தார்... என்றாலும் சொல்லவில்லை. அவரிடம் ஏதோ தயக்கமிருப்பதைத் தெரிந்து கொண்ட நான் "எதுவென்றாலும் பரவா யில்லை சொல்லுங்கள் " என்றேன்.

"சொல்லுவேன் சேர். சேர் கோபப்படக் கூடாது" என்று பீடிகையைப் போட்டார். "பரவாயில்லைச் சொல்லுங்கள்" என்று சொன்ன பின்புதான் அவர் சொன்னார் "மிக ஆழமாக எல்லாவற்றையும் பார்த்த பின்பு விளங்குகிறது முன்னாள் அமைச்சர் சாந்த குமார் எதுவிதமான ஊழலிலும் ஈடுபட்டி ருக்கவில்லை என்பது மட்டுமல்ல அவர் எங்கள் நாட்டுக்கு மாபெரும் சேவை செய்துள்ளார். ஐந்து வருட காலத்தில் இப்படியான ஒரு சேவையை எந்த அமைச்சராலும் செய்ய முடியாது." என்றார். எனக்குக் கூட அவ்வாறான உணர்வு ஏற்பட் டிருந்தது எனக்குத் தெரிந்தது. அமைச்சில் பணிபுரிந்த அனைத்துப் பழைய ஊழியர் களும் அவர் மீது அளவு கடந்த மதிப்பும் அபிமானமும் வைத்திருந்தையும் நான் தெரி ந்துதான் வைத்திருந்தேன். அவரின் கீழ் நட ந்த அபிவிருத்தித் திட்டங்களை நேரடியாக நாங்கள் பார்வையிட்டோம். நான் உண்மையி லேயே மலைத்துப் போனேன். அவரது சேவையைப் பார்த்து நாங்கள் பிரமித்துப் போனோம். சாந்தகுமார் போன்றவர்கள் நம் நாட்டின் அமைச்சர்களாக இருப்பார்களே யானால் நமது நாடும் விரைவில் செல்வச்

செழிப்பான நாடாக மாறும் என்பதில் எந்த சந்தேகமும் எனக்கு இல்லை. உண்மையி லேயே நான் ஊழல்களைக் கண்டு பிடித்து அமைச்சர் சாந்தகுமார் அவர்களைக் கேவலப்படுத்த நினைத்தேன். ஆனால் அவரோ தனது அபிவிருத்தித் திட்டத்தில் தொண்ணூற்றியொன்பது வீதத்தைப் பூரணப்படுத்தியிருந்தார். இதனைப் பூரண ப்படுத்த எனக்கு சிறிதளவே வேலை இருந் தது. உண்மையைச் சொல்லப் போனால் நான் எதுவுமே செய்யவில்லை.

அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வருவது நாங்கள் மக்களுக்காக எங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்து சேவையாற்றுவோம் என்று சொல்லித்தான். ஆனால் எத்தனை அரசியல் வாதிகள் அப்படிச் செய்கிறார்களோ எனக்குத் தெரி யாது. ஆனால் சாந்தகுமார் சேர் அவர்கள் தனது நேர காலத்தை மக்களு க்காகத் தியாகம் செய்து சேவையாற்றியி ருப்பதை நான் கண்டு கொண்டேன். இவ்வாறான ஒரு மாபெரும் சேவை செய்த தியாகியின் அபிவிருத்தித் திட்டத்திற்கு லேபல் ஒட்டிக் கொள்ள எனது மனச் சாட்சி இடம் கொடுக்கவில்லை. எமது நாடே இவரைக் கௌரவிக்க வேண்டும், கொண்டாட வேண்டும் என ஆசைப்பட்டேன். இப்படிச் செய்தால்தான் சேவை மனப்பான்மையுள்ள அரசியல்வாதிகள் உருவாகுவார்கள் என நினைத்தேன். எனது திட்டத்தை எமது ஜனாதிபதி பிரதமரிடம் சொன்னேன். நான் சொன்ன காரணங்களை அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்கள். என்றாலும் எனது கட்சி உறுப்பினர்கள் பலர் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். நான் எனது தலை யிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதாகக் கூறினர். என்றாலும் விடா முயற்சியுடன் முயன்று அவர்களின் மனங் களை மாற்றினேன். அமைச்சர் சாந்தகுமார் அவர்களே இன்று நடக்கும் விழா எமது அரசின் மனப்பூர்வமான விழா. இங்கே வாழ்த்திப் பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் உங்களுக்குரியது. அமைச்சர் அமைச்சர் என்று அவர்கள் புகழ்ந்த தெல்லாம் உங்களைத்தான் ”

கொஞ்சம் வயதாகியிருந்த சாந்தகுமார் இப்போதுதான் தான் வயதாகியிருப்பதை உணர்ந்தார். நடப்பவைகளைப் பார்த்து அவரது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. முழுச் சபையுமே எழுந்து நின்று கைகளைத் தட்டிக் கொண்டிருந்தது. சாந்தகுமாரின் மனைவியும் பிள்ளைகளும் மலைத்துப் போயிருந்தனர்.

## தமிழில் எழுதப்பட்ட முதற் சிறுகதை

**குளத்தங்கரை அரசமரம்** என்பதே தமிழிற் தோன்றிய முதற் சிறுகதையாகக் கருதப்படுகிறது. இதனை எழுதியவர் **வ.வே.சு ஐயர்** ஆகும். இக்கதை 1917இல் புதுச்சே ரியில் இருந்து அவர் நடத்திவந்த கம்ப நிலையம் என்னும் பதிப்பகம் வெளியிட்ட மங்கையற்கரசியின் காதல் முதலிய கதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. **பாரதியார் வவேசு ஐயர் புதுமைப் பித்தன்** போன்ற எழுத்தாளர்களால் வளர்க்கப் பெற்ற சிறுகதை இலக்கியம் **மணிக்கொடி** பத்திரிகையால் மேலும் சிறப்படைந்தது



# ஒரு ஓட்லியின் கனவு நனவாகிறது

கோவிலூர் செல்வராஜன்

**த**ன் அறையில் இருந்தபடி பத்திரிகை படித்துக் கொண்டிருந்த பரமானந்தர் தனது ஊர் வைத்திய சாலை பற்றி வந்திருந்த செய் தியைப் பார்த் ததும் பரவசமடை ந்தார். நீண்ட காலமாகத் தான் கண்டு வந்த கனவு நனவாகப் போகின்றது. காரியம் கைகூடி வரப்போகின்றது என்ற சந்தோசத்தில் கையில் பத்திரிகையுடன் அறையிலிருந்து வெளிப் பட்டுக் குரல் கொடுத்தார்.“சரசு…சரசு..எங்க இருக்கிறாய்… பேப்பரைப் பார்த்தாயா, படிச்சாயா” என்று தன் மனைவி சரஸ்வதியை அழைத்துக் கேட்டு வைத்தார்.

**“தம்பி இன்றைய பேப்பர் படிச்சனான். நம்மட கொஸ்பிட்டல் ஆதார வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்படப் போகின்றது என்று படங்களுடன் செய்தி வந்திருக்கிறது. எனக்கு அந்த செய் தியைப் படிச்சதிலிருந்து சந்தோசம் தாங்க முடியல்ல. அதுதான் உங்களோடு பேசிற்றுப் போகலாம் என்று வந்தனான்”**

“நான் இங்க குசினிக்குள் இருக்கிறன். உங்களுக்குத் தேத்தண்ணி போடுறன். கொஞ்சம் பொறுங்க கொண்டு வாறன்.” என்று பதில் சொன்னாள் சரஸ்வதி.

“அட தேத்தண்ணி கிடக்கட்டும் கழுதை, நீ இஞ்ச வா. இந்தப் பேப்பரில் வந்திரு க்கிற செய்தியைப் பாரு” என்று அவர் சொல்லிக் கொண்டு இருக்கையில் சரஸ்வதி கையில் தேத்தண்ணிக் கோப்பையோடு ஹாலுக்குள் வந்தவள் கேட்டாள்.

“அப்படி என்னப்பா இன்றைக்குப் பேப்பரில் செய்தி. இவ்வளவு சந்தோசப் படுறீங்க. முதலில தேத்தணியைக் குடி யுங்கோ. இந்தாங்கோ பிடியுங்கோ” என்று கொடுத்தாள். அதை வாங்கி வைத்துக் கொண்ட பரமானந்தர்.

“சரசு பேப்பரில் நல்ல செய்தியெல்லோ வந் திருக்கு. நீ பார்க்க இல்ல என்ன”

“இல்லை நான் வேலையாக இருந்திட்டன். படிச்சுப் பார்க்காமல் உங்கட அறைக்குள்ள கொண்டு வந்து வச்சனான். என்ன செய்தி யப்பா வந்திருக்கு.”

“இஞ்ச பார் நம்மட ஆசுபத்திரி பெரிய வைத் தியசாலையாகப் போகிறதாம். விரைவில் அது சகல வசதிகளுடனும் கூடிய பேஸ் கொஸ் பிடலாக வரப்போகிறதாம் என்று பெரிய செய்தி படங்களுடன் வந்திருக்கு. இஞ்ச பார்” என்று பத்திரிகையில் வந்த செய்தியைக் காட்டினார் பரமானந்தர்.

“ஓமப்பா இது நம்மட ஆஸ்பத்திரிதான்... இந்த படத்தில தெரியுதே.. திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலை என்று ஆட்களும் நிறையப் பேர் மாலையும் கழுத்துமாக நிற்கிறார்கள். என்னப்பா விசேசம்?” கேட்டாள் வெள்ளந்தியான சரஸ்வதி.

“எடி சரசு, இதில இருப்பவர்கள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரும் நமது நாடாளு மன்ற உறுப்பினரும், வைத்திய அதிகாரிகளு மடி. போன வருடம் கிழக்கு மாகாண முதல மைச்சர் நமது ஆஸ்பத்திரிக்குச் சுகாதார அமைச்சர் அவர்களுடன் வருகை தந்தபோது மக்கள் வைத்த கோரிக்கைக்கு உறுதி மொழி வழங்கி இருந்தார். இந்தத் திருக்கோவில் வைத்தியசாலை இந்தப் பிரதேச மக்களின் வைத்திய நலன்களுக்காக பேஸ் கொஸ்பி டலாக விரைவில் தரம் உயர்த்தப்படும் என்று”

“அதென்னப்பா பேஸ் கொஸ்பிடல்”

“அப்படியென்றால் ஆதார வைத்தியசாலை என்று பொருள். அது ஓரளவு சகல வசதிக ளும் கொண்டது. இப்ப இருப்பது மாவட்ட வைத்தியசாலை. இது ஆதார வைத்திய சாலையாக உயர்த்தப்படும் போது மருத்துவ வசதிகள் அதிகரிக்கப்படும். வைத்தியர்கள் அதிகரிக்கப்படுவார்கள் தாதிமார் எண்ணிக்கை கூடும். புதிய கட்டிடங்கள் கட்டப்படும். வாடு கள் நவீனத்துவம் பெறும்”

“உண்மையாகவா சொல்றீங்க. எங்கட மக் கள் போதிய வசதி இல்லாம எவ்வளவு கஸ் டப்பட்டுப் போயிட்டாங்க. கொஞ்சம் கடுமை யான நோய் வந்தாலும் அக்கரைப் பற்று, கல்முனை என்று செல்ல வேண்டி இருக்கு என்னப்பா ”

“பின்ன வேறே என்ன. எவ்வளவு பழமை யான வைத்தியசாலை இது. ஆங்கிலேயர் காலத்தில ஒரு டிஸ்பென்சரியாக இருந்தது.”

“நீங்களும் இந்த ஆஸ்பத்திரியில்தானே ஓட லியராக வேலையைத் தொடங்கினீர்கள்.”

“நான் மட்டுமில்ல. எனக்கு முதல் ராசையா அண்ணர், நடேசபிள்ளை மாமா எல்லோரும் இங்குதான் மருந்தாளர்களாக வேலை செய்த வர்கள். அப்போ தெற்கே கோமாரி தொட க்கம் வடக்கே சின்ன முகத்துவாரம் வரை இருந்து நோயாளிகள் வருவார்கள். காய்சல், தடிமல் என்று வருபவர்களுக்கு அப்போது இருந்த ‘அப்போதிக்கரி’ ஐயா எழுதித் தரும் மருந்தை நோயாளிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். பலர் காயங்களுடன் வருவார்கள் அவர்களுக்கு மருந்து கட்டி இருக்கிறார்கள்.

“அந்தக் காலத்தில் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளவும் இங்கதான் வருவார்கள் என்ன”

“ஓமோம் மகப்பேற்றுக்குத் தனியாக ஒரு

வாட் இருந்தது எலோருக்கும் தெரியும். நமது திருக்கோவில் பிரதேச மக்கள் அநேகமானோர் நம்மட ஆஸ்பத்திரியில் பிறந்தவர்கள் தான்.”

“நாம பிறந்தது நம்மட பிள்ளைகள் பிறந்தது எல்லாம் இந்த ஆஸ்பத்திரிதானே. எவ்வளவு பெருமை மிக்க ஆஸ்பத்திரி இல்லையா”

“கண்டிப்பாக மிகச் சிறப்பு வாய்ந்தது. அந்தப் பழைய ஆஸ்பத்திரிக் கட்டிடமும், மருந்து கட்டும் முன்பக்கக் கொட்டிலும், குழந்தை பெறும் வாட்டும், இன்னும் என் கண்களுக்குள் இருக்கின்றன. அன்றைய ஆஸ்பத்திரி எங்கள் பிரதேச மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருந்தது. நல்ல அப்போதிக்கரி டாகுத்தர் எல்லாம் இருந்திருக்கிறார்கள். நோயாளிகளோடு அவர்கள் அன்பாகப் பேசுவதிலே நோயாளிகளின் பாதி நோய் பறந்து போய்விடும். காலம் மாறப் பிரதேச மக்களின் தொகை பெருக அந்த ஆஸ்பத்திரி மறைந்து படிப்படியாக இன்றைய எமது வைத்திய சாலை உருவாகியது. இன்று இந்தச் செய்தியின் பிரகாரம் இன்னுமொருபடி உயரப் போகிறது.

“சரி சரசு. நான் கிணற்றடிக்குப் போயிட்டு வாறன். நீ எனக்குக் காலைச் சாப்பாட்டை எடுத்து வை. நான் சாப்பிட்டுவிட்டு ஒருக்கா முச்சந்தி வரைக்கும் ஒரு நடை போயிட்டு வாறன். இந்தச் சந்தோசமான செய்தியை, நம்மட ஆஸ்பத்திரி மருந்தாளர் ஆனந்தனோடும் கதைச்சுத் தெரிந்து கொண்டு வாறன்.”

“சரி சரி கெதியாக் கை, கால் முகம் கழுவிற்று வாங்க நான் புட்டுக்குச் சம்பல் போட்டு எடுக்கிறன். இரவையக் கறி, சொதி எல்லாம் இருக்குது” என்ற சரஸ்வதி சமையலறைக்குள் சென்றாள்.

எழுபத்திரண்டு வயது நிரம்பிய பரமானந்தர் இன்னும் சுறுசுறுப்பாக இருப்பது அவரின் தேகாரோக்கியத்தைக் காட்டியது. இந்த வயது வரைக்கும் அவர் எந்தக் கெட்ட பழக்க வழக்கங்களும் இல்லாமல் இருக்கிறார்.

ஊருக்குள் அவருக்கு நல்ல மரியாதையும், கண்ணியமும் இருந்தது. அவரது வாலிப வயதிலிருந்து ஓய்வு பெறும் வரை இந்த வைத்திய சாலையின் பணியாளனாக, நோயாளிகளை அரவணைக்கும் ஒரு பண்பாளனாக இருந்திருக்கிறார். தனது காலத்துக்குள்ளே இந்த வைத்தியசாலை பெரிய தரத்துடன் உயரவேண்டும் என்று கனவு கண்டவர். அந்தக் கனவு இன்று நனவாகப் போகின்றது என்று அறிந்து அவர் உள்ளம் துள்ளிக்குதித்தது. அதன் வெளிப்பாட்டில் கம்பீரமாக நடந்து முச்சந்திக்கு வந்துவிட்டார்.

இங்குதான் இந்த ஆஸ்பத்திரியின் தற்போதைய மருந்தாளர் ஆனந்தன் இருக்கிறார். அவரின் வீட்டுக்கு முன் நின்ற பரமானந்தரைக் கேற்றைத் திறந்துகொண்டு வெளியில் செல்ல வந்த ஆனந்தன் கண்டு கொண்டான்.

“ஐயா, வாங்க. எப்படி இருக்கிறீங்க” என்று நலம் விசாரித்தான்.

“நான் நல்லா இருக்கிறன் தம்பி. நீங்க எங்கேயோ கிளம்பிட்டீங்க போல. நான் உங்களைக் கண்டு பேசிற்றுப் போகலாம் என்று

தான் வந்தனான்.”

”அப்படியே அய்யா வாங்க உள்ள வாங்க. நான் நம்மட கொஸ்பிடலுக்கு முன்னால் இருக்கிற சூப்பர்மார்கெட்வரை போயிட்டு வரலாம் என்று வெளிக்கிட்டனான். பிறகு போய்க் கொள்ளலாம் நீங்க வாங்க” என்று வரவேற்றான்.

ஹாலுக்குள் இருவரும் வந்து அமர்ந்தார்கள். ஆனந்தனின் மனைவி ராணியும் பரமானந் தருக்கு வணக்கம் சொல்லி வரவேற்றாள். பதில் வணக்கம் சொன்ன அவர்

“தம்பி இன்றைய பேப்பர் படிச்சனான். நம்மட கொஸ்பிட்டல் ஆதார வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்படப் போகின்றது என்று படங் களுடன் செய்தி வந்திருக்கிறது. எனக்கு அந்த செய்தியைப் படிச்சதிலிருந்து சந்தோசம் தாங்க முடியல்ல. அதுதான் உங்களோடு பேசிற்றுப் போகலாம் என்று வந்தனான்”

”ஓம் அய்யா, உங்கள் கனவு பலிக்கப் போகி றது. என்னோடு பேசும் போதெல்லாம் ஒரே இதைத்தானே சொல்வீர்கள். அறுபது களில் இருந்து ஓய்வு பெறும்வரை அக்க ரைப்பற்று, பாலமுனை என்று மாற்றம் வந் தாலும் உங்கள் அதிகப் படியான காலம் உங்க ஊர் ஆஸ்பதிரியோடுதானே கழிந்தது என்று சொல்வீர்கள். அது படிப்படியாக மாற்றமடைந்து மாவட்ட வைத்தியசாலையாக மாறியபோதும். பழைய கட்டிடங்கள் போய்ப் புதிய கட்டிடங்கள் வந்தபோதும் சந்தோசப் பட்டுக் கொண்டீர்கள். இருந்தாலும் திருக் கோவில் பிரதேசம் பரந்த நிலப்பரப்புக் கொண்ட பல கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம் அதனால் தற்போதைய வைத்திய சாலை சகல வசதிகளுடனும் கூடிய பேஸ் கொஸ்பிட்டலாக மாறவேண்டும். அவசர சிகிச்சைகளுக்குரிய அனைத்து வசதிகளும், போதிய நோயாளிகள் விடுதிகளும் கட்டப் படவேண்டும், புதிய மருத்துவ உபகரணங்கள் அவசர மருத்துவ வண்டிகள் எல்லாம் இருக்க வேண்டும் என்று சொல்வீர்களே அதெல்லாம் இனிக் கிடைக்கும் ஐயா”

“ஆனந்தன் நீங்க இப்படி சொல்லும் போதே எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியல்ல. பேப்பரில் செய்தியைப் படிச்சவுடன் என் மனைவிக்கும் சொல்லி அவளுடனும் சந்தோசத்தைப் பகி ர்ந்து கொண்டேன். உங்களிடம் இந்தச் செய்தி பற்றி அறியலாம் என்றுதான் வந்தனான். நீங்களும் இந்தப் பகுதி மக்களுக்காக இந்த வைத்திய சாலையிலிருந்து பல சிரமங்க ளுடனும், சில வேளைகளில் மருந்து பற்றாக் குறையுடனும் பணியாற்றுவதாகச் சொல்லி இருக்கிறீர்கள். இல்லையா தம்பி”

“உண்மைதான் ஐயா. மாத்திரை மருந்துகள் அடிக்கடி பற்றாக்குறையாக இருந்திருக்கிறது. கடந்த காலங்களில் நோயாளிகளின் வருகை அதிகரித்து இருந்திருக்கிறது. முன்னைய காலத்தைப் போலல்லாமல் தற்போது புதிய நோய்களும் மக்களைப் பாதிக்கின்றன. உங்கட காலத்தில் இந்தக் கொலஸ்ட் ரோல், ப்ரஸர், ஸுகர், கான்ஸர் என்ற நோய்கள் இருந்ததா இல்லையே”

“நீங்க சொல்லுற நோய்கள் எல்லாம் அன் றைய காலங்களில் பெரியளவு பேசப்பட வில்லை. மிஞ்சிப்போனால் காய்ச்சல், கூதல். சளி, வயிற்றுப்போக்கு, தலையிடி, சொறி,

சிரங்கு என்றுதான் வருவார்கள். அன்று நீங்கள் சொல்லுகிற நோய்கள் இருந்திருக் குமோ தெரியாது. அவற்றைக் கண்டு சொல் லும் மருத்துவ வசதியும் அன்று நமது ஆஸ்ப த்திரியில் இருக்கவில்லை. இப்போது உள்ள மருத்துவ முறையிலும் வளர்ச்சியிலும் எல்லா வித நோய்களையும் கண்டு பிடிக்க முடிகிறது.”

“சரிதான் இன்று மருத்துவத்தின் வளர்ச்சி எங்கேயோ போய்விட்டது. நமது வைத்திய சாலைக்கும் இந்த நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவம் கிடைக்கப் போகின்றது என்ற செய்தி நமக்கு மட்டுமல்ல ஐயா நமது பிர தேச மக்களுக்கும் சந்தோசத்தைக் கொடுக் கும் செய்திதான். கடந்த வருடம் கிழக்கு மாகாண முதலமைச்சருடன் வருகைதந்த சுகாதார அமைச்சர் நசீர் அவர்கள் நமது வைத்தியசாலை பற்றிப் பேசும் போது, குறிப் பிட்டது எனக்கு நினைவுக்கு வருகிறது. தன்னுடைய தகப்பனார் பொத்துவிலுக்கு விவ சாயத் தொழில் நிமித்தம் இந்த வழியால் செல்லும்போது தன்னையும் அழைத்துச் செல் வதுண்டாம். அந்த நேரம் இந்த ஆஸ்பத்தி ரியை ஒரு சிறு கட்டிடமாகத் தான் கண்ட தாகவும் இந்தப் பிரதேச மக்களுக்கு ஒரு முக்கியமான, அவசியமான ஒரு வைத்திய சாலை இது என்று அன்றே தான் உணர்ந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுக் கண் டிப்பாக இந்த வைத்திய சாலையை ஒரு ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்த ஆவன செய்வேன் என்று உறுதி கூறினார்”

“ஓம் நானும் அன்று வந்திருந்தேன். கிழக்கு மாகாண முதலமைச்சரும் அதை ஆமோ தித்துக் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்ப தாகச் சொன்னார்.... இல்லையா”

“அன்று அமைச்சர்கள் உட்பட மாகாண சபை உறுப்பினர் வைத்திய அதிகாரிகள் எல்லோ ரும் ஒரே மனதுடன் ஒருமித்த குரலில் நமது மக்கள் மத்தியில் சொன்ன வாக்குறுதி நிறை வேறுவதாக இன்றைய பத்திரிகைச் செய்தி கூறுகிறது. விரைவில் இது அமுல் படுத்தப் படும்” இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போதே ஆனந்தனின் மனைவி ராணி ஒரு தட்டில் பலகாரமும், டின்பால் தேநீரும் கொண்டு வந்து வைத்து.

“ஐயா பலகாரம் சாப்பிடுங்கள். டீக்கு சீனி போடவில்லை.” என்றாள் .

“ஏன் பிள்ளை. நான் இப்பதான் சரசு காலைச் சாப்படு தர, சாப்பிட்டு விட்டு வந்தனான்”

“பரவாயில்லை ஒன்றை சாப்பிட்டுவிட்டு டீயைக் குடியுங்கோ” என்றான் ஆனந்தன். அவனும் ஒன்றைக் கடித்து டீயைக் குடித் தான்.

ஒரு மணி நேரமாக மருந்தாளர் ஆனந்தனின் வீட்டில் இருந்து வைத்தியசாலை பற்றியும் ஊர், மற்றும் பிரதேச மக்களின் தேவைகள் பற்றியும் பல விசயங்கள் பேசி முடித்து, அவர்களுக்கு நன்றியும், வணக்கமும் சொல்லி விடைபெற்றார் அந்த எழுபத்திரண்டு வயதுப் பரமானந்தர். அவருடைய நீண்டநாள் கனவு நனவாகப் போகின்றது என்ற செய்தி அன்று அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இதற்கு வழிவகுத்த அனைத்து உள்ளங்களையும் அவர் மனதார வாழ்த்தினார்.

**K. விஜயசங்கர்**




**கா**லை எட்டு மணியிருக்கும் நான் வவுனியா பொது வைத்தியசாலையின் 1பி(ஊ) சத்திர சிகிச்சை வார்ட்டில் அனுமதிக்கப்பட்டேன். வீதி விபத்தொன்றில் கையில் சிறிய காயம் ஏற்பட்டிருந்தது.

ஒருவரின் அலறல் சத்தத்தால் வாசலில் வரும் போதே திரும்பி ஓடிவிடவேண்டும் போலிருந்தது. பாவம் மூல வியாதி முற்றி விட்டது. சைக்கிளின் நடு அச்சு அளவில் ஒரு மருத்துவ உபகரணம் அவரது மலவாசலூடாகச் செலுத்தப்பட்டுப் பரி சோதிக்கப்பட்டபோது தான் அந்த அலறல்.

அனுமதிச் சிட்டைகளைக் கொடுத்து அவர்களில் ஒருவனாக இணைந்து கொண்டேன். நோயாளிகள் மூன்று நிரையாகக் கட்டிலில் கிடந்தனர். பழுப்பு வெள்ளை நிற பெயின்ட் அக்கட்டில்களுக்குத் தனித்துவத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அனைவரின் முகத்திலும் வெறுமை தாண்டவமாடினாலும் புதிதாய் வந்த என்னைப் புன்னகையால் வரவேற்கத் தவறவில்லை.

இரண்டாவது நிரையின் இறுதிக் கட்டில் எனக்குத் தான். என் பொதிச்சுமைகளை இறக்கி வைத்துவிட்டு அழைத்து வந்த நண்பனை அனுப்பி விட்டேன். என் அயல் வீட்டுக்காரர் “தம்பி என்ன நடந்தது?” என குசலம் விசாரிக்கிறார். அயல்வீட்டுக்காரர் என்றால் வேறு யாருமில்லை பக்கத்துக் கட்டில்காரர் தான். “அக்சிடண்ட் ஒண்டு.

**“இவன் ரெண்டு கிழமையா இங்க தான் இருக்கிறான். கடைசிச் சண்டையில கால் ரெண்டையும் பறிகுடுத்துக் குடும்பத்தையும் இழந்திட்டான். இப்ப ரெண்டு முழங்காலிலையும் புண்ணாகி நீர் வருதெண்டு வந்திருக்கான். எந்த மருந்து குடுத்தும் சரிவரவே இல்ல. ஏற்கனவே முழங்காலுக்கு கீழ இல்ல. இப்ப ரெண்டு காலையும் தொடையோட கழட்ட வேணும் எண்டு சொல்லியிருக்கினம்” .**

சின்ன காயம் அதான்....” என இழுத்துப்

பதிலுரைக்கிறேன்.

“பாத்துப் போறதில்லையா தம்பி. வேகம் எல்லாம் சினிமாவுக்கு ஓகே. எங்களுக்கு ஆகாதே” என்கிறார்.

சரியாய்த்தான் சொல்கிறார். என் வேகத்தை நொந்து கொண்டு கட்டிலில் படுத்திருக்கும் அவரைச் சாதுவாக நோட்டம் விடுகிறேன். பெரிய பொட்டலம் போலக் கை காட்சி யளித்தது. உங்களுக்கு என்ன நடந்தது? என்பது போலக் கையை வெறித்துப் பார்த்தேன். மரம் அறுக்கின்ற கிரைண்டர் கையைக் கண்டபடி கடித்துப் போட்டிருந்தது. பதின்மூன்று தையல்களாம். பாவம் அவருக்கு ஆறுதல் சொல்லுமளவுக்கு நான் அனுபவ சாலி இல்லை.

கட்டிலில் ஏறி உட்கார்ந்து அனைவரையும் ஏறிட்டுப் பார்த்தேன். மயான அமைதி நிலவுகிறது.

இத்தனைக்கும் இடையில்தான் அந்தக் கம்பீரக்குரல் ரீங்காரமாக ஒலித்தது.

“இப்ப எப்பிடி வருத்தம்?”

“ஐயா எப்பிடி சுகமா?” எனப் பல வினாக்கள் தொடுக்கப்பட்டது. ஒரு இளம் ஆணின் குரல் அது. நான் சுற்றும் முற்றும் தேடினேன். யாரையும் காணவில்லை. அந்தக்குரல் ஒலித்துக்கொண்டேயிருந்தது. வைத்தியர் விடுதி வலம் வருகிறார் போல என்று எண்ணி அமைதியாகி விட்டேன். ஆனால் அது போன்ற ஆரவாரம் தெரியவில்லை. வைத்தியர் விடுதி வலம் வருவதானால் மூன்று உதவி வைத்தியர்கள் இரண்டு தாதியர்கள் இரு சிற்றூழியர் என ஒரு பட்டாளமே கிளம்பிவிடும். அதற்கான அறிகுறியே இல்லை. ஆனால் அந்தக் குரல் என்னை நெருங்குவதைப்போல இருந்தது. “அண்ண உங்களுக்கு என்ன நடந்தது” எனக் கேட்டபடி எனக்குப் பின்னாலிருந்து முன்ப தாக வந்து நிற்கிறான்.

மஞ்சள் ரிசேட், நீல நிற கோடுகள் கொண்ட சாரம் உடுத்தி, நடு உச்சி பிரித்து தலை வாரி இரு சக்கர வண்டியில் அமர்ந்தி ருந்த இளைஞன் என்னைப் பார்த்து முகம் மலர்ந்தபடியே காலருகில் வண்டியை நிறுத்தி னான். நானும் பதிலுக்குப் புன்னகைத்தேன்.

முன்னாள் போராளியென என் ஆழ்மனது உறுதிப்படுத்துகிறது.

“என்ன தம்பி யோசிக்கிறீர்” என என்னைப் பிரக்ஞையாக்கி “எல்லாருக்கும் எல்லாம் நிரந்தரம் இல்ல. இருந்திட்டு எப்பாலும் ஆஸ்பத்திரி பக்கம் வந்தாதான் அடுத்தவர் படும் பாடு தெரியும்” என்கிறான். அவன் தோற்றத்திற்கும் பேச்சுக்கும் சம்பந்தமே இல்லை. ஒரு இளைஞன் கூட அனுபவமாகப் பேசுகிறானே என எனக்குள் மெச்சிக் கொள்ளும் கணப்பொழுதில் எனக்கருகில் இருந்தவரிடம் நலம் விசாரி க்கிறான்.

இரு கால்களையும் இழந்த அவனுள் இரு க்கும் சந்தோசத்தை அங்கு யாரிலும் காண முடியவில்லை. வார்ட்டிலிருந்து விடுதலை பெற்று வீட்டுக்குச் செல்வது தான் உலகில் மிகப்பெரிய மகிழ்ச்சி என்பேன் நான். டிக்கட் வெட்டிப் போறார் போல என முடிவு செய்

கிறேன். அயல்வாசி அவனைப்பற்றிக் கூறிய நொடியில் என் முடிவே சரியென எப்போதும் எண்ணும் எனக்கு இந்த விடயத்தில் சற்று ஏமாற்றம் தான்.

“இவன் ரெண்டு கிழமையா இங்க தான் இருக்கிறான். கடைசிச் சண்டையில கால் ரெண்டையும் பறிகுடுத்துக் குடும்பத்தையும் இழந்திட்டான். இப்ப ரெண்டு முழங்காலிலையும் புண்ணாகி நீர் வருதெண்டு வந்திருக்கான். எந்த மருந்து குடுத்தும் சரிவரவே இல்ல. ஏற்கனவே முழங்காலுக்கு கீழ இல்ல. இப்ப ரெண்டு காலையும் தொடையோட கழட்ட வேணும் எண்டு சொல்லியிருக்கினம்” என அவனைப்பற்றிச் சொல்லி முடிக்கும்போது என் நினைவுகளுக்குள் மல்டிபரல்கள் தாக்குவதை உணர்கிறேன்.

அவனைப் பார்க்கும்போது எதுவுமே தெரியவில்லை. அகத்திலுள்ளது முகத்தில் தெரியும் என்பார்கள். இவன் விடயத்தில் அவ்வாக்குப் பொய்த்து விட்டதை ஏற்கிறேன்.

“ரெண்டு கிழமையா யாரும் பாக்க வரேல்ல. ஆஸ்பத்திரிச் சாப்பாடுதான். ஆனா எந்தக் கவலையும் இல்லாம இருக்கிறான்” எனப் பக்கத்துக் கட்டில்காரர் அவன் கதையைத் தொடர்கிறார். அவன் பற்றிய எந்தச் செய்தியும் அவன் வாயினால் வந்திருக்காது என்பதில் நான் இலட்சம் மடங்கு நம்பிக்கை கொண்டிருக்கிறேன். தாங்கள் கண்டதையும் பிறர் மூலம் கேட்டதையும் வைத்துக் கதைப்பது வார்ட்டுகளில் பழகிப்போன ஒன்றுதானே. எனக்கு அவனோடு கதைக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அவன் இப்போது மூன்றாம் நிரையின் முதல் கட்டிலில் நலம் விசாரித்துக் கொண்டிருக்கிறான். எனது பெயரைத் தாதி அழைக்கவே அங்கு சென்று விட்டேன். அவன் மட்டும் தன் கடைமையைச் செவ்வனே செய்து கொண்டிருக்கிறான். வேதனைக் கடலில் நீந்தும் அவர்களுக்கு அவனது பேச்சு மறுவாழ்வு உண்டென்பதை நினைவூட்டிக் கொண்டிருந்தது. நான் திரும்புவதற்குள் அவனைக் காணவில்லை. அப்போதுதான் எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு முதியவர் வீதியில் தர்மம் எடுக்கிறவராம். பஸ் ஒன்று இரு கால்களையும் ருசித்துத் தின்றுவிட்டது. யாரும் இல்லையாம். படுத்த படுக்கையாய்ப் புதுவரவாய் வருகை தந்தார். தர்மம் எடுக்கின்றவருக்கு அருகில் உறவுக்காரன் என்று ஒருவன் நின்று கொண்டிருந்தான். இவ்வளவு நாளும் வறுமைப் பிணி போக்க முதியவர் தர்மம் எடுத்துக் கொண்டிருந்தார். விபத்தினால் நீதிமன்றம் மூலம் கிடைக்கவிருக்கும் ஏழு இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகையைப் பிச்சை எடுக்கவே புது உறவுக்காரன் வந்திருக்கிறான். கைகட்டி நின்ற புது உறவுக்காரனை விலத்திக் கொண்டு இப்போது என் கதாநாயகன் முதியவரை நெருங்கிக் கலைந்திருந்த துணியை எடுத்து அவரின் நிர்வாணத்தை மூடுகிறான். மதியம் பார்வையாளர் நேரம். எல்லோரும் ஈயாய் மொய்த்துக் கொண்டனர். ஆஸ்பத்திரி வழங்கும் சாப்பாட்டுடன் சிற்றூழியர் அருள் ஐயா வருகை தருகிறார்.

“சாப்பாடு எடுக்கிற ஆக்கள் இங்கால வாங்கோ”. அருள் ஐயாவுடன் ஒரு அணி சோற்றுக் கோப்பையுடன் தயாரானது.

‘‘டயபடிக் ஆக்கள் இங்கால வாங்கோ’’. இரு அணிகளில் டயபடிக் அணி அதிக உறுப் பினர்களோடு நீள்கிறது. ‘‘எத்தின பேருக் குத்தான் உந்தக் கோதாரிச் சீனி வருத்தம்’’. அருள் ஐயா சீனி வருத்தத்தைச் சபிக்கிறார். வெட்டாமல் முழுசாக அவிக்கப்பட்ட போஞ்சி, பச்சைக்கீரை என்பன சிவப்பரிசிச் சோற்றிற்கு நிறமூட்டின. மிக நீண்ட வரிசையின் இறு தியில் அவன். தனது பங்கை எடுத்து வந்து அன்று அனுமதிக்கப்பட்ட முதியவரிடம் ஒப்படைக்கிறான்.

‘‘திலீபன் இங்க வா’’. அவன் தான் திலீபன். பெயருக்கு ஏற்றாற் போல தியாகிதான். ‘‘இண்டைக்கும் குடுத்திட்டியா? உன்ட குணம் தெரிஞ்சுதான் கூடச் சாப்பாடு கொண்டு வந் தனான். இந்தா பிடி’’ என வலுக்கட்டாயமாகக் கோப்பையைப் பறித்துச் சாப்பாடு போட்டுக் கைகளுக்குள் அருள் ஐயா திணிக்கிறார்.

அருள் ஐயாவுக்கு அவனைப்பற்றி நன்றாக தெரியும். தனது உணவை யாருக்கும் கொடு த்துவிட்டு அவர்கள் உண்பதைப் பார்த்து உவகை கொள்வான் அந்த மனிதப்பிறவி.

அருள் ஐயாவின் அன்பிற்காக நான்கு வாய் அள்ளிச் சாப்பிட்டு மீதியெல்லாம் அங்கே கரைந்து கொண்டிருந்த காகங்களுக்குக் காணிக்கையாக்கிவிட்டான்.

பொழுது மங்கிக்கொள்ளும் நேரம் திடீரென யாரோ அரசியல்வாதி வருவதைப் போல ஒரே பரபரப்பு. தாதியர்களும் சிற்றூழியர் களும் பைல்களைக் காவிக் கொண்டு அவ ருக்குப்பின் படையெடுத்தனர்.

பெரிய ஐயா வாறாராம். எல்லோரும் எழுந்து கட்டிலில் தவம் செய்கின்றனர். சுற்றிவர ஒரே கூட்டம். பெரிய ஐயாவை காணக்கூடாத அள வுக்கு வேலியடைப்பு. இவ்வளவு உயிர்க ளைக் காப்பாற்றும் பெரிய ஐயாவுக்கு காற் றுப்படக் கூட வழியில்லையென எனக்குள் சிரிக்கிறேன்.

பெரிய ஐயா எக்ஸ்ரே ரிப்போர்ட்டுகளை வல துபுறம் இடதுபுறம் திருப்புகிறார். மேலே கீழே உயர்த்துகிறார். பார்த்துப் பார்த்து ஆங்கில த்தில் விளாசுகிறார். உதவி வைத்தியர்களும் வைத்திய பயிலுனர்களும் ‘‘யா யா யெஸ் யெஸ்’’ என தலையை ஆட்டுகின்றனர். அவர் களோடு சேர்ந்து சிற்றூழியர் சிவராசாவும் ஏதோ ஆங்கிலம் புரிந்தது போல புருவத்தை உயர்த்தித் தலை அசைக்கிறார். அதைக் கண்ட நானும் பக்கத்துக் கட்டில் பரமுவும் வாய்க்குள் சிரிக்கிறோம்.

இப்போது திலீபனின் கட்டில் பெரிய ஐயா வுக்கு அடைக்கலமாயிற்று. ‘‘தம்பி நாளைக்கு உமக்கு ஒப்ரேசன். இரவு பத்துமணிக்குப் பிறகு சாப்பிடவோ தண்ணி குடிக்கவோ கூடாது. சரி தானே’’ என்கிறார். போரின் கொடூரத்தையே தாங்கும் அவனுக்குப் பசியும் தாகமும் பெரிதா என்ன? ஏற்கனவே இரு கால்களும் முழங்காலுக்கு கீழே இல்லை. இப்போது மீதமுள்ள காலின் எச்சங்களையும் கழற்றவேண்டும். நாளையுடன் முழுமையான ஊனம் அவனை அணைத்துக் கொள்ளப் போகிறது.

‘‘ஓ.கே டொக்டர். நாளைக்கு எத்தின மணிக்கு ஒப்ரேசன் டொக்டர்’’.

‘‘எட்டு மணிக்கு..’’ இது சிற்றூழியர்

சிவராசாவின் பதில். வார்ட்டுகளில் சிற்றூழியரும் பெரிய ஆக்கள் தானே.

திலீபன் இன்னும் சிரித்த முகத்துடனேயே காணப்படுகிறான். பெரிய டொக்டர் தரிசிப்பு முடியும் போது இரவு ஒன்பது மணியாகிறது. அனைத்து மின் குமிழ்களுக்கும் ஓய்வு வழங்கப்பட்டுச் சிறிய நீல நிற இரவு மின்குமிழ்கள் இரண்டு மட்டும் ஒளிரவிடப்படுகின்றன. வார்ட்டை இருள் கவ்விக்கொள்ள அனைவரையும் தூக்கம் அணைக்கிறது.

ஒருநாள் கழிந்து மறுநாள் 5.30 மணிக்கே அந்த வார்ட் களைகட்டுகிறது. புதிய நாளை வரிசையில் நின்று காலைக் கடனுடன் ஆரம்பிக்கின்றனர். காலை ஏழு மணியிருக்கும் “தியேட்டருக்குப் போறவங்க வாங்க” என்று ஒவ்வொருவராய் அழைக்கப்பட்டனர். வெறும் மேலுடனும் வெள்ளை வேட்டியுடனும் ஒவ்வொருவராக அணி வகுத்து நின்றனர். சத்திரசிகிச்சைக்குச் சம்மதமென்று எழுதிக் கைச்சாத்திட்டுக் கொள்ள அந்தச் சிங்கள நேர்ஸ் அதை வாங்கிப் பைலுக்குள் போடுகிறாள். கையில் பெயர் மற்றும் சிறு தகவல் எழுதப்பட்ட சிறிய மட்டை கட்டப்பட்டு தலையில் ஒரு கவசம் அணிவிக்கப்படுகிறது. திலீபன் தள்ளுவண்டியில் வந்து அவையனைத்தையும் சுவீகரித்துக் கொள்ளுகிறான். சிற்றூழியர் சிவராசாவின் தலைமையில் ஒப்பிரேசன் தியேட்டருக்கு ஒரு படை புறப்பட நானும் ஒருவனாக இணைகிறேன். எல்லோரிடமிருந்தும் விடைபெறுகிறான் திலீபன். முதலாவதாக நானும் திலீபனும் தியேட்டருக்குள் உள்வாங்கப்படுகிறோம். உள்ளே பச்சை ஆடைகளுடன் நான்கைந்து பேர் உலாவுகின்றனர். எனக்கு விறைப்பு ஊசி போடப்பட்டு என்னுடன் கதைத்தபடியே சத்திரசிகிச்சை தொடங்குகிறது. திலீபனுக்கு மயக்கம் வழங்கப்பட்டு ஆழ்ந்த உறக்கம் கொள்கிறான். நான் அரைமணி நேரத்தில் பொடி நடையாக வார்ட்டை அடைந்து விட்டேன். ஆறுமணி நேரப் போராட்டத்திற்கு பின் கால்களின் எச்சங்களையும் இழந்து உணர்வற்ற உடலாக அவன் வார்ட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகிறான். அவன் அமைதியாக இருந்த நாள் அதுதான் எனச் சில பழசுகள் பேசிக் கொள்கின்றனர். வார்ட்டுக்கு வந்து அரை மணி நேரத்தின் பின் உணர்வடைந்து கண்களை மெதுவாகத் திறந்து எல்லோரையும் நோட்டம் விடுகிறான்.

அயற்கட்டிலில் இருந்த சீனிவருத்தத்தால் மூன்று கால் விரல்களை இழந்த முதியவரைப் பார்த்துப் புன்முறுவல் செய்ய “மூன்று விரல்போன கிழவன் நானே இவ்வளவு கவலைப்படுறன். இனி நடக்கவே முடியாத உனக்கு எவ்வளவு கவலையா இருக்கும்”. முதியவர் முகத்துக்கே சொல்லிவிட்டார்.

“அறளை பேந்த கிழடுக்கு எதக் கதைக்கிறது எண்டு தெரியாது. பாவம் கவலைப்படுவான் தானே” என்று முன் கட்டில் முஹமட் தனக்குள் குமுறிக் கொள்கிறான்.

“ஹா ஹா” கம்பீரச் சிரிப்பு. வைத்தியத்தால் என் கால்களைத்தான் எடுக்க முடியும் என் நம்பிக்கை இன்னும் என்னிடம்தான் இருக்கிறது என்பதை அந்த சிரிப்பு முதியவருக்கு வாழ்வைக் கற்றுக் கொடுக்கிறது.

நாளுக்கு நாள் திலீபன் உடல்நிலையில்

தேறினான். “திலீபன் நீங்க வீட்ட போகலாம். டிக்கட் வெட்டியாச்சு” என்கிறாள் தாதி.

வெளியே போய் என்ன செய்யப் போகிறான் என்பதைப்போல எல்லோரும் உச்சி முகர்ந்து அனுப்புகின்றனர். சொத்தான பத்து ரூபாய் பையுடன் விடைபெற்று சக்கர வண்டியை தன் கைளால் இயக்கிக்கொண்டு புறப்பட மிக வேகமாக வந்த ஒருவர் அவனுக்கு எதிர்ப்ப டுகிறார். திலீபனை நெருங்கிவிட்டார். “மாணிக்கம் அண்ண எங்க திரும்பவும் உந்தப்பக்கம்?”.

மாணிக்கம் அவனோடு வார்ட்டிலிருந்து நலம் பெற்றுச்சென்றவர். திலீபனின் தீவிர ரசிகன் அவர் தான். வார்ட்டில் காணாமல் போன மாணிக்கத்தின் கலியாண மோதிரத்தை அவன் தான் கண்டெடுத்து கொடுத்தவன்.

“திலீபன் உன்ட தன்னம்பிக்கை தான் கேணியா ஒப்ரேசன் செய்திருந்த எனக்கு நம்பிக்கை குடுத்திச்சு. என்ட கடைல கசி யரா இருந்த பெடியன் வேலைய விட்டு நிண்டுட்டான். அடுத்த கசியர் நீதான். உன்ன கூட்டிட்டு போகத்தான் வந்தனான்”.

பொறுப்பு மிக்க நல்ல வாய்ப்பை ஏற்று அவன் இப்போது காசாளர் ஆகிவிட்டான். காசுப் பொறுப்பு கடைப் பொறுப்பு எல்லாம் அவனே தான்.

நான் நலமாகி இப்போது மிக மெது வாகத்தான் மோட்டார் வண்டியை ஓடிக்கொண்டு செல்கிறேன். மாணிக்கத்தின் பிள்ளையார் ஸ்டோரில் முன்பை விடச் சனத்திரள் நிரம்பி வழிகிறது.

## சிறுகதை

அரைமணி முதல் இரண்டு மணி நேரத்துக்குள் படித்து முடிக்கக் கூடியது சிறுகதை என **எட்கார் ஆலன்போ** கூறுவார். சுருங்கச் சொல்லுதலும் சுருக்கெனச் சொல்லுதலும் இதன் உத்திகளாகும். அதனால் நீண்ட வர்ணனைகளுக்கு இடமில்லை. குதிரைப் பந்தயம் போலத் தொடக்கமும் முடிவும் சுவை மிக்கனவாக இருத்தல் வேண்டும். என்று கூறுவார் **செட்ஜ்விக்.**

## நவீன சிறுகதையின் ஆரம்பம்

சிறுகதை என்பது ஐரோப்பிய கலை வடிவம் என்பதை பாரதியார் மறுதலித்தார். பின்பு புதியவொரு சிறுகதை வடிவத்தை உருவாக்கினார். மரபை விட்டுக் கொடுக்காமல் பழைய வடிவத்தில் புதிய விடயங்களைப் புகுத்தி அதில் வெற்றி அடைந்தார் சுப்ரமணய பாரதியார்

# எனக்கு அப்பா வேண்டும்



**உரும்பிராய் எம்.ரி. செல்வராசா**

**அ**ப்பாவிற்கும் அம்மாவிற்கும் நான் ஒரே பிள்ளை. எனக்குப் பதின்மூன்று வயது. இப்போது எனது அப்பா எங்களுடன் இல்லையே என்ற கவலை என் மனதை எப்போதும் வாட்டிக் கொண்டிருந்த போதும் இன்று எனது நண்பியின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்குச் சென்று வந்ததிலிருந்து எனக்கு அப்பாவை உடனே காணவேண்டும் போல இருந்தது. எனது மன வாட்டத்தைக் கண்ட அம்மாவின் முகத்திலும் சோகத்தின் சாயல் பரவத்தொடங்கியது.

“அம்மா, எனக்கு அப்பாவைப் பாரக்க வேண்டும்போல் இருக்கிறது” என்று கூறினேன். அம்மா என்னை ஒரு பார்வை பார்த்து விட்டுப் பதில் எதுவும் சொல்லாமல் தனது வேலைகளிலேயே கவனமாக இருந்தார். மீண்டும் நானே அம்மாவின் அருகில் சென்று “இன்று எனக்கு அப்பாவைப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது” என்றேன்.

“அப்படிப் பார்க்க முடியாது என்று உனக்குத் தெரியும் தானே, பிறகு ஏன் என்னைக் கேட்கிறாய்?” என்றார். அம்மா கூறியது சரிதான். அப்பா இருக்கின்ற இடம் அப்படிப்பட்டது. அடிக்கடி அங்கே போக முடியாது, தொலைபேசியிலும் பேச முடியாது. இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால் அப்பா அப்படியெல்லாம் செய்திருக்கமாட்டார். அப்பா எல்லாவற்றையும் ஒழுங்காக நன்றாகவே செய்வார் ஆனால் அவருடைய கூடாத பழக்கம் நண்பர்களுடன் சேர்ந்தால் அளவுக்கு மிஞ்சி மது அருந்துவதுதான். அவர் அம்மாவைக் கலியாணம் செய்ய முன்னர் தனியே லண்டனிலே இருந்த போது தான் நண்பர்களுடன் சேர்ந்து மதுபானம் அருந்தப் பழகியிருந்தார். அது பின்னரும் தொடர்ந்து கொண்டேயிருந்தது. அம்மா நான் பிறந்த பின்னரும் பல தடைவகள் அப்பாவை மதுவகைகள் குடிக்க வேண்டாம் என்று தடுத்திருக்கிறார். ஆனால் அப்பா அவற்றை விளையாட்டாகவே தட்டிக்கழித்தார்.

“இலண்டனுக்கு வந்தால் எல்லோரும் குடிக் கப் பழகவேண்டும். இல்லையென்றால் வெள் ளைக்காரன் மதிக்கமாட்டான்” என்று ஒரு சாட்டுச் சொல்லுவார். எங்காவது பிறந்தநாள் கொண்டாட்டம், விருந்துபசாரம், விழாக்கள் என்றால் நண்பர்கள் எல்லோருமாகச் சேர்ந்து நன்றாகக் குடிப்பார்கள். குடிக்கும்போதே எல்லோரும் தமது லண்டன் வாழ்க்கையில் நடந்த பல சுவையான அனுபவங்களையும், புதிய அனுபவங்களையும் உரத்துக் கதைத்துச் சிரித்து மகிழ்வார்கள். பார்ப் பவர்களும் சேர்ந்து சிரித்து மகிழ்வார்கள். ஆனால் அப்படியான வேளைகளில் அப்பா வைக் காரோட்ட அம்மா ஒரு போதும் அனுமதிக்க மாட்டார். வீட்டிற்கு வரும்போது அம்மா தான் காரை ஓட்டிக்கொண்டு வருவார். மார்கழி மாதம் தொடங்கினாலே நத்தார் கொண்டாட்டங்களும் தொடங்கிவிடும். நத்தாருக்காக அப்பாவின் வேலையிடத்தில் ஒரு கிழமைக்கு விடுமுறை விடுவார்கள். அந்த நாட்களில் மாறி மாறி நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தினமும் கொண் டாட்டங்கள் இருந்து கொண்டேயிருக்கும். சென்ற நத்தார் தினத்திற்கு முதல் நாள் அப்பாவின் நண்பர் ஒருவரின் வீட்டில் இரவு விருந்துக்குப் போயிருந்தோம். அன்றும்

**இலண்டனுக்கு வந்தால் எல்லோரும் குடிக் கப் பழகவேண்டும். இல்லையென்றால் வெள் ளைக்காரன் மதிக்கமாட்டான்” என்று ஒரு சாட்டுச் சொல்லுவார். எங்காவது பிறந்தநாள் கொண்டாட்டம், விருந்துபசாரம், விழாக்கள் என்றால் நண்பர்கள் எல்லோருமாகச் சேர்ந்து நன்றாகக் குடிப்பார்கள். குடிக்கும் போதே எல்லோரும் தமது, லண்டன் வாழ்க்கையில் நடந்த பல சுவையான அனுபவங்களையும், புதிய அனுபவங்களையும் உரத்துக் கதைத் துச் சிரித்து மகிழ்வார்கள். பார்ப்பவர்களும் சேர்ந்து சிரித்து மகிழ்வார்கள். ஆனால் அப் படியான வேளைகளில் அப்பாவைக் காரோ ட்ட அம்மா ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். வீட்டிற்கு வரும்போது அம்மாதான் காரை ஓட்டிக்கொண்டு வருவார்.**

அப்பா நன்றாக மது அருந்திவிட்டபடியால் வீட்டிற்கு வரும் போது அம்மாதான் காரை ஓட்டிக்கொண்டு வந்தார். நாங்கள் கிறிஸ்த வர்கள் அல்லாத போதிலும் மற்றவர்கள் போல் எங்கள் வீட்டிலும் நத்தார் தினத்தை மகிழ்வாகக் கொண்டாடினோம். மதிய உணவை முடித்து விட்டு வீட்டுக்கு வந்த விருந்தினரை உபசரித்து அனுப்பிவிட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எல்லாம் பார்த்து முடிய இரவு பதினொரு மணி ஆகிவிட்டது. ஆனால் அப்பா அதுவரை மதுவைத் தொடவேயில்லை. அப்போது தான் அப்பா தனது கைத்தொலை பேசியை முதல்நாள் நண்பரின் வீட்டில் மறந்துபோய் விட்டுவிட்டு வந்தது தெரியவந்தது. ஏதோ வலது கையை இழ ந்து விட்டது போல் தவித்தார். தான் உடனே அங்கே சென்று அதனை எடுத்துவரப் போகிறேன் என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். இரவு ஒரு மணி ஆகியும் அப்பாவைக் காணவில்லை. என்ன நடந்தது என்றும் தெரியவில்லை. பலமுறை கள் முயற்சி செய்தும் கைத்தொலை பேசி இணைப்புக் கிடைக்கவில்லை. நண்பரின் வீட்டுக்குத் தொலைபேசி அழை ப்புச் செய்த போது அவர்கள் அப்பா பன்னி ரண்டு மணிக்கே புறப்பட்டுவிட்டாதாகக் கூறினார்கள். நடந்து வந்தாலே பதினைந்து

அல்லது இருபது நிமிடங்களில் வந்து விடலாம். என்ன செய்வது? யாருக்குத் தொலைபேசி அழைப்புச் செய்து கேட்பது என்று தெரியாமல் இருந்தபோது அப்பா அவசர அவசரமாக வீட்டினுள் நுழைந்தார். மிகவும் களைத்தும் காணப்பட்டார். அம்மாவை அறையினுள் அழைத்து ஏதோ இரகசியமாகப் பேசினார். மறுகணமே வீட்டை விட்டு வெளியே சென்று விட்டார். அம்மா அப்ப டியே நிலத்தில் இருந்துவிட்டார்.

“அம்மா, அம்மா என்ன நடந்தது? அப்பா ஏன் மீண்டும் வெளியே போகிறார்” என்று நான் கேட்டேன்.

“சௌமி, நீ போய்ப் படு” என்று மட்டும் கூறிவிட்டுப் படுக்கையில் சென்று பொத் தென்று வீழ்ந்தார். நான் நித்திரையாகி விட்டேன். ஆனால் இடையிடையே விழித்த போது இரவு முழுவதும் கீழே யாரோ வாசல் மணியை அடிப்பதும், அம்மா அவர்களுடன் சென்று கதைப்பதும் அரைத்தூக்கத்திலும் என் காதுகளில் விழுந்தன. மறுநாள் கூட அப் பாவை வீட்டிலே காணவில்லை. முதல்நாள் நத்தார் கொண்டாட்டத்திற்கு வந்திருந்த விரு ந்தினர் சாப்பிட்ட தட்டுக்கள் கூடக் கழுவாத நிலையில் அப்படியே இருந்தன. அப்பா ஏதோ சிக்கலில் மாட்டியிருக்கிறார் என்பது மட்டும் எனக்குத் தெரிந்தது. ஆனால் அம் மாவைக் கேட்க முடியவில்லை. அப்பாவின் நண்பர்கள் சிலர் வீட்டிற்கு வந்திருந்தபோது அம்மா என்னை எனது அறைக்குச் செல் லும்படி கூறினார். அதனால் அவர்கள் என்ன பேசினார்கள் என்றே எனக்குத் தெரியாது. நான் எனது அறையிலே இருந்து கொண்டு எனது கணனியில் விளையாடுவதும், தொலைக்காட்சி பார்ப்பதுமாக நேரத்தை ஓட்டினேன். இரண்டு மூன்று நாட்கள் சென்ற பின்னர்தான் எனக்கு அம்மா எல்லாவற்றையும் கூறினார். தனது மனக் கவலையை ஆற்றுவதற்காகத்தான் அப்படிக் கூறினார் என்று எண்ணுகிறேன். அப்பா அன்றிரவு தனது கைத் தொலைபேசியை எடுப்பதற்காகச் சென்ற வேளையில் அவரது நண்பருடன் அவரது வீட்டில் வேறு சில நண்பர்கள் சேர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தார்கள். சம்பிரதாயத்துக்காக சிறிது மது அரு ந்தும்படி அவர்கள் கேட்டதற்கு இணங்க அப்பாவும் அருந்தினார். ஆனால் ஒன்று இர ண்டு, மூன்று என்று மதுக் கோப்பைகள் காலியானது. மது அருந்திவிட்டு மோட்டார் வண்டியை ஓட்டக் கூடாது என்பது சட்டம். ஆனால் அப்பா இருந்த நிலையில் அவர் அது தவறு என்று எண்ணவில்லை. அம்மா அங்கே அப்போது இருந்திருந்தால் அப் பாவை வண்டியை ஓட்ட அனுமதித்திருக்கமா ட்டார். ஆரம்பத்திலிருந்தே மிகவும் விரை வாக வண்டியை ஓட்டிய அப்பா, மங்கலான ஒளியில் பாதையைக் கடக்க முற்பட்டவரைக் காணவில்லை. தனது வண்டி மோதிய போது தான் அவர் தான் குடித்து விட்டுக் காரை ஓட்டியது தவறு என்று புரிந்தது. ஆனால் காலம் கடந்துவிட்டது. அந்த வேளையில் தன்னை யாரும் கண்டிருக்க மாட்டார்கள் என் கின்ற மனப்பாங்கில் இதயம் படபடக்க, சட்டத்திற்குப் பயந்து அவ்விடத்தில் நிற்காது எங்கெல்லாமோ ஓடினார். அவர் வாக னத்தை இன்னொரு இடத்தில் நிறுத்தி விட்டு நடந்துதான் அன்றிரவு வீட்டிற்கு வந்தார்.

அந்த விபத்தில் அகப்பட்டவர் அடுத்தநாள் இறந்துவிட்டார். என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார் அப்பா. இவர் விரைவாக வண்டியை ஓட்டியதால் ஏற்பட்ட விபத்தைக் கண்ட யாரோ இவரது காரின் இலக்கத்தை எடுத்துப் பொலிசாரிடம் கொடுத்துவிட்டனர். பொலிசார் எல்லோரையும் ஒவ்வொருவராக விசாரித்தபோது அப்பாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்பாவின் காரைப் பரிசோதனை செய்த போது அடிபட்டதால் அதிலே ஏற்பட்ட சேதங்களையும், இரத்தக் கறைகளையும் கண்டுபிடித்தனர். அப்பா குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதன்பிறகுதான் எங்கள் வாழ்வில் சோகப்படலம் ஆரம்பமாகியது. பொலிஸ், விசாரணை, நீதிமன்றம், வழக்கு, தண்டனை என்றெல்லாம் அதுவரை அறிந்திராத அப்பாவும் அம்மாவும் தினமும் அழுதார்கள். நிம்மதியின்றி அலைந்தார்கள். அன்றிலிருந்து வீட்டில் எதுவுமே சரியாக நடக்கவில்லை. நண்பர்கள் உறவினர்கள்கூட எம்முடன் சரியாகப் பேசவோ பழகவோ இல்லை. அப்பாவுக்கு அவர் செய்த குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை கிடைத்தது. ஒரு வருடமாக அவர் சிறையிலே இருக்கிறார். இன்னும் சில வருடங்கள் சிறையிலே இருக்க வேண்டும். சென்ற வருடம் நத்தார் அன்று எமது வீடு இருந்த சந்தோசத்திற்கும் இந்த வருடம் எமது வீடு இருக்கின்ற சோகத்திற்கும் காரணம் கூற என்னால் முடிந்தாலும், தெரிந்துகொண்டும் மதுவினால் சீரழிந்த பலருடைய குடும்பங்களின் கதைகளை மற்றையவர்களிடமிருந்து கேட்டபோது நம்பமுடியவில்லை. என் அப்பாவைப் போல சில அப்பாக்கள் இப்போதும் மதுவை அருந்திவிட்டு வண்டியை ஓட்டுகிறார்கள். அதன் பின்னர் தாம் கெட்டித்தனம் செய்துவிட்டோம் என்ற தோரணையில் பேசுவதையும் கேட்டிருக்கிறேன். எத்தனையோ இளம் அண்ணாமார்களும் இப்படி மதுவைக் குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டி விபத்துக்குள்ளாகிச் சிக்கல்களுக்குள் அகப்பட்டு இருப்பதையும் கேள்விப்படுகிறேன். அவர்கள் எப்போது திருந்தப் போகிறார்கள்? தெரியவில்லை. அப்பா கவனமாக இருந்திருக்கலாம். "கண் கெட்ட பின்னர்தான் சூரிய நமஸ்காரம்" என்று யாரோ கூறியது நினைவுக்கு வருகின்றது. எமது குடும்பத்தில் நடந்த ஒன்றே மற்றவர்களுக்கு நல்லதொரு பாடமாக அமைந்துவிட்டது. ஆனாலும் இதனை ஓர் எச்சரிக்கையாக மற்றவர்கள் எடுப்பதாகத் தெரியவில்லை. நாட்கள் செல்லச் செல்ல நானும் அம்மாவும் மற்றவர்களுடன் சிறிது சிறிதாக சிரித்துப் பேசினாலும், அப்பா இல்லாமல் நாங்கள் படுகின்ற துன்பங்களையும், எமக்குள்ளே இருக்கும் சோகங்களையும் என்னால் எடுத்துரைக்க முடியாது. அனுபவித்தால்தான் தெரியும். ஆனால் இப்படியான கொடிய அனுபவங்கள் யாருக்கும் வரவே கூடாது என்று நான் கடவுளை வேண்டுகிறேன்.

**தகவல் 2**

தமிழில் மேலைநாட்டு மரபை ஒட்டிய நவீனச் சிறுகதை முயற்சிகள் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. அ.மாதவையா 1910ஆம் ஆண்டில் இந்து ஆங்கில நாளிதழில் வாரம் ஒரு கதையாக 27 சிறுகதைகளை எழுதினார்.




**கர்ணன் சின்னத்தம்பி**

**இ**ப்பொழுது இவளில் தெரிகின்ற மாற்றம். இவள் ஏன் இப்படி ஆனாள். ஏதோ வேண்டா வெறுப்பாக வாழ்க்கையில் ஒட்டு இல்லாதவள் போல ஏன் மாறினாள்?

எத்தனை அழகாக வாழ்வை அனுபவி த்து இரசித்து வாழ்ந்தவள். அழகாக இரட்டைப் பின்னல் போட்டு நெற்றியில் குங்குமம் இட்டு மகாலட்சுமி மாதிரி வருவாளே! இப்போது மட்டும் ஏன் இப்படி மாறினாள்?

இவள் சிரிப்பதே கவிதைபோல் இருக்குமே!.. அதை ஏன் தொலைத்துவிட்டாள். மலர்களோடும் மலர்ச் செடிகளோடும் கூடப் பேசி மகிழ்ந்தவள். இப்போது மட்டும் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு நிற்கிறாளே!

ஏன்....எதற்காக...

ஒரு பத்து வருடங்கள் இருக்கும். இவள் இலண்டனுக்கு வந்து. ஊரில் வாரித்தம்பி வாத்தியாரின் ஒரே மகள். ஆண் பிள்ளை இல்லை என்பதற்காக ஆண் பிள்ளை போலவே தன்னம்பிக்கை ஊட்டி வளர்த்தவர் வாத்தியார். காயத்திரி என்று அழகாகப் பெயரிட்டுத் தனது எதிர்கால நம்பிக்கையாகவே நினைத்திருந்தார் வாரித்தம்பி வாத்தியார். காயத்திரி படிப்பு முடிந்ததும் ஊரிலேயே நல்ல மாப்பிள்ளை பார்த்துத் தன்னுடனேயே வைத்திருப்பது வாத்தியாரின் எண்ணமாகவும் இருந்தது. ஆனால் விதி வேறுவிதமாகச் சிந்தித்தது. வாத்தியார் வீட்டில் பெண் இருப்பது தெரிந்து அயல் கிராமத்தைச் சேர்ந்த இலண்டன் மாப்பிள்ளைக்குப் பெண்கேட்டு வர மகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு வாத்தியாரும் சம்மதித்து விடுகிறார். கல்யாணம் இனிதே நடந்து முடிந்தது. காயத்திரியும் லண்டன் செல்வதற்கு ஆயத்தமாகிறாள்.

காயத்திரிக்கும் தாய் தந்தை பிறந்த மண் நண்பர்கள் எல்லாரையும் விட்டுப் பிரியப்

போகிறோம் என்ற கவலை வருத்தியது. ஆனால் தன் வாழ்க்கை இப்படித்தான் என்று ஆனபின் வருந்துதல் நியாயமில்லை என்று நினைத்து அமைதியானாள். நாங்கள் அங்கு போனபின் அம்மா அப்பாவையும் அங்கு கூப்பிட்டு வாழலாம் என்ற கணவனின் உறுதி மொழியோடு கவலையை விட்டுப் பயண மாகிவிட்டாள். காயத்திரி மனது நிறைந்த கனவுகளுடனும் நிறைந்த எதிர் பார்ப்புக ளுடனும் லண்டன் என்று சொல்லிக் கேள்விப்பட்ட கனவுதேசத்தில் கால் வைக்கப் போகிறேனே என்கின்ற மகிழ்ச்சியிலும் விமா னத்தில் பயணம் செய்து கொண்டிருந்தாள்.

வார்த்தைகளால் இந்தச் சந்தோசத்தை வெளி ப்படுத்த அவளால் முடியவில்லை.

லண்டனுக்கு வந்த புதிதில் எல்லாமே இவளு க்கு வியப்பாக இருந்தது. கொஞ்சம் சிரமப் பட்டாள். நாளடைவில் லண்டன் மண்ணில் வாழ்வதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள்.

“காயு.. காயு” என்று தன்னையே சுற்றிவந்த கணவனின் அன்பில் நனைந்தேவிட்டாள். தான் எதிர்பார்த் ததைவிட நல்ல கணவன் கிடைத்து விட்டாரே என்ற மகிழ்வில் தான் வழிபட்ட புளியடி வைரவருக்கு ஒருமுறை நன்றியும் சொல்லிக்கொண்டாள். கணவன் வேலையால் வரும்வரை காத்திருந்து அவனுக்குச் சாப்பாடு போட்டுக் கொடுத்து அதன் பின்புதான் அவள் சாப்பிடுவாள். ஆனால் அன்று கணவன் அவளைப் பார்த்து “இன்று முதல் நீ சாப்பிடு.. பிறகு நான் சாப்பிடுறன்” என்று சொன்னது கொஞ்சம் புதிதாக இருந்தது.

“அலுப்பாக இருக்குது கொஞ்சம் விஸ்கி குடிச்சிட்டுச் சாப்பிட்டால் நிம்மதியாகத் தூங்கலாம்” என்று கூறிவிட்டு அவளின் பதி லுக்குக் காத்திராமல் அவன் குடிக்கத் தொட ங்கிவிட்டான். காயத்திரிக்கு இது புதிதாக இருந்தது. வேலைக்குப் போற மனிசன் அலுப்பிலை கொஞ்சம் குடிச்சால்தான் என்ன என்று தன்னைத்தானே ஆற்றுப் படுத்திக் கொண்டாள். அலுப்புக் கென்று குடிக்கத் தொடங்கியவனை இப் போது மது மெதுவாகக் குடிக்கத் தொடங்கியது. மெதுமெதுவாக மதுவுக்கு அடிமையாகிக் கொண்டிருந்தான். இப்போதெல்லாம் இவன் பேச்சில் பெரும் மாற்றம். நடைமுறையில் மாற்றம். காயத்திரியும் கணவன் திருந்திவிடுவான் என்ற நம்பிக்கையில் அப்பா அம்மாவிற்கும் சொல்ல முடியாமல் தனக் குள்ளே அழுது கொள்வாள். காலையில் எழுந்ததும் இனி மேல் குடிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்வான். ஆனால் மாலையில் அவனால் மதுவை விட்டு இருக்க முடி யவில்லை. அவனால் காயத்திரியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தன் உடல் வேத னைகள் எதனையும் புரிந்து கொள்ளாமல் மதுவே கதியென்ற வாழ்க்கைக்கு காயத்தி

**வேலைக்குப் போற மனிசன் அலுப்பிலை கொஞ்சம் குடிச்சால்தான் என்ன என்று தன்னைத்தானே ஆற்றுப்படுத்திக் கொண்டாள். அலுப்புக்கென்று குடிக்கத் தொடங்கியவனை இப்போது மது மெது வாகக் குடிக்கத் தொடங்கியது. மெது மெதுவாக மதுவுக்கு அடிமையாகிக் கொண்டிருந்தான்.**

ரியின் கணவன் தள்ளப்பட்டுவிட்டான். தன்னால் ஒரு பெண்ணின் வாழ்க்கை சீரழிகிறதே என்று எண்ணாமல் முற்று முழுதாக மதுவுக்கு அடிமையாகி விட்டான். அவளோடு ஆசையாக ஒரு வார்த்தை தன்னும் பேசுவதில்லை. எத்தனை கனவுகளோடு எல்லாவற்றையும் துறந்து இவனை மட்டும் நம்பி இவன் கனவுகளே தன் கனவுகளும் என்று நம்பி வந்தவள் இவள். எல்லாமே கானல் நீராகி இவ்வளவு சீக்கிரமாகத் தவிடு பொடியாகும் எனக் கொஞ்சமும் நினைத்திருக்கவில்லை. தனது கணவனைப் பற்றிப் பெருமையாகப் பேசியவள் இப்போது தனக்குத்தானே சமாதானம் சொல்ல முடியாமல் தடுமாறுகிறாள். குடித்துவிட்டு மரக்கட்டை போல் படுத்திருக்கும் கணவனைப் பார்த்து வேதனைப்படுவாள். இவள் வடிக்கும் கண்ணீரில் நனையும் தலையணைகளின் ஏக்கப் பெருமூச்சின் வெப்பத்தில் உலர்ந்து போய்விடும். இவளின் இல்லறத்தின் தோற்றுப்போன ரகசியத்தை வெளியே சொல்ல முடியாதவாறு வாத்தியாரின் குடும்ப கௌரவம் அவளைத் தடுக்கும். எத்தனையோ தடவை சொல்ல முனைந்து தோற்றுப் போய் விட்டாள். இவள் சொல்வதெதையும் அவர் காதில் வாங்கும் நிலையில் இல்லை. வேண்டாத விவாதங்களும் வாக்குவாதங்களும் இறுதியில் கைநீட்டலில் முடிந்து அவள் வருத்தமடைந்ததுதான் மிச்சம்.

தொடர்ச்சியான குடியினால் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் அவனை எண்ணி மனவேதனைப்பட்டாள். இப்போது காயத்திரி முன்போல் இல்லை. தன் சிரிப்பைத் தானே தியாகம் செய்துவிட்டாள்.பேசுவதையும் நிறுத்திவிட்டாள். மௌனமாகவே இருக்கத் தொடங்கினாள். தன்னுடைய மௌனமாவது அவனை மாற்றாதா என்கின்ற நப்பாசைதான்.

தன் துயரங்களைச் சாமியறையிலே கொட்டித் தீர்ப்பாள். வெறிச்சோடிக் கிடந்த அந்த விறாந்தையில் காயத்திரியின் குடும்ப நிம்மதியைக் குலைத்த அந்த மதுப்போத்தில் நிமிர்ந்து நிற்கிறது. அந்தப் போத்திலின் வெறுமை காயத்திரியின் வாழ்வின் வெறுமையைக் காட்டிக் கொண்டிருந்தது.

## அமெரிக்காவில் சிறுகதை

உலக நாடுகளில், மற்ற நாடுகளைவிட அமெரிக்காவில் தான் சிறுகதை மிக விருப்பமான இலக்கிய வடிவமாகப் போற்றப்படுகிறது. நாவலை விடச் சிறுகதைக்கே அங்குச் செல்வாக்கு அதிகம். பிராங்க் ஓ கானர் (Frank O ‘Connor) என்ற சிறுகதை விமர்சகர், “அமெரிக்கர்கள் சிறுகதை எழுதுவதில் காண்பிக்கும் திறமையைப் பார்த்தால், அதை அவர்கள் தேசியக் கலையாகக் கருதுகிறார்கள் என்று சொல்லலாம்” என்று குறிப்பிடுகிறார். “அமெரிக்க மக்களிடையே இருக்கும் வேகமும் பொறுமையின்மையும் காரணமாகத்தான் சிறுகதை வடிவம் அமெரிக்க இலக்கிய உணர்வுக்கு ஏற்புடையதாயிற்று” என்று வில்லியம் டீன் ஹவெல்ஸ் (William Dean Howells) என்ற மற்றொரு விமர்சகர் கூறியுள்ளார். அமெரிக்காவின் மிகச் சிறந்த சிறுகதைப் படைப்பாளர்களாக விளங்கும் எட்கர் ஆலன்போ, நத்தானியல் ஹாதான், வாஸிங்டன் இர்விங், ஓஹென்றி ஆகியோர் உலக நாடுகள் அனைத்திலும் செல்வாக்குப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.




குலசிங்கம் வசீகரன்

பருத்தித்துறையில் சிவன்கோவில் மடத்தடி என்றால் தெரியாதவர்களே இருக்கமுடியாது, அந்த மடத்தடிதான் இந்த கதையின் முக்கிய கதாப்பாத்திரமாக வருகின்ற நண்பர்களின் ஒன்று கூடும் சபை. வருகின்ற டிசம்பரில் O/L பரீட்சை எழுத இருக்கும் இவர்களில் வரதன், விமலன், ராசன் மற்றும் குகன் ஆகியோர் நெருங்கிய நண்பர்கள். அவர்களது ஓய்வு நேரத்தைப் பொறுத்து அந்த இடத்தில் தினமும் இரண்டோ அல்லது மூன்று முறை சந்திப்பது வழக்கம். மாலையில் மைதானத்தில் விளை யாடிய பின்பு சிறிது நேரம் மடத்தடியில் இருந்து கதைத்து விட்டு வீடு செல்வது என்பது ஒரு நாளும் மாறாத ஒன்று. மாலை நேரங்களில் பக்கத்திலேயே பொன்னு ஆச்சி தோசை சுட்டு விற்றுக் கொண்டிருப்பா, சில நாட்களில் இவர்களும் தோசை வாங்கிச் சாப்பிடுவார்கள், அநேகமாக நண்பர்களில் யாராவது ஒருவரின் ட்ரீட் ஆக அது இருக்கும்.

அன்றும் அவ்வாறு தான், விளையாடி முடித்துச் சிவன் கோவில் துலாக் கிணற்றில் கால் முகம் கழுவித் தண்ணி குடித்து விட்டு வந்து உட்கார்ந்து கதை க்கத் தொடங்கியிரு ந்தார்கள்

**“சரி தம்பி, நான் நாளைக்கு வாறன், மறுக் கமாட்டியள் எண்டு நம்பிக்கையோட போறன்” சைபிக்கிளை எடுத்துக்கொண்டு ரவிக்குமார் அந்த இடத்தை விட்டு விலகினான்.**

**அவன் போனதும் விமலன் கொஞ்சம் கோவமாகவே சொன்னான், “பாரடா இவனை, அந்த பிள்ளையை நான் கவனிச்சுக்கொண்டு வாறன், இவன் வந்து தனக்கு செற் பண்ணித் தரட்டாம், ஏன் நாங்கள் அமைக்க மாட்டமே”**

**“சொல்லவே இல்லையே, நீயும் பாக்கிறியே, வேற ஆர் பாக்கிறியள். சொன்னாக் குலுக்கிப் போட்டுப் பாத்து பிறகு யார் யாருக்குச் செற் பண்ணிறது எண்டு யோசிக்கலாம்” வரதன் சிரித்தபடி கூறினான்.**

நண்பர்கள். சையிக்கிள் ஒன்று மெதுவாக வந்து அவர்கள் அருகில் நின்றது, அதில் வந்த இளைஞன் வரதன் இருந்த திசையை நோக்கி,

“தம்பி, கொஞ்சம் அங்கால வாறியளே ஒரு விசயம் கதைக்கோணும்.”

“நீங்கள் ஆர் என்னோட என்ன கதைக் கோணும் இவங்கள் என்ர பிரெண்ட்ஸ் தான், என்னெண்டாலும் நீங்கள் இங்கயே சொல் லுங்கோ”

வரதன் தன்னை நோக்கி வந்து கதைத்த அந்த இளைஞனைப் பார்த்து கூறினான்.

மாலை கழிந்த இருள் தொடங்கியிருந்தது, வீதிவிளக்குகள் இல்லாத அந்த நேரத்தில் ஒருவரது முகத்தை மற்றவர் தெளிவாகப் பார்க்க முடியாதிருந்தது. சையிக்கிளில் இருந்து வரதனைக் கூப்பிட்ட அந்த இளை ஞன் சையிக்கிளை விட்டு இறங்கித் தானும் அவர்களுடன் மடத்தின் ஓரத்தில் அமர்ந்தான்.

“என்ர பெயர் ரவிக்குமார், சொந்த இடம் யாழ்ப்பாணம், இப்ப ரெண்டு நாளா இங்க நெல்லியடியில பிரெண்ட் வீட்டை வந்து நிக் கிறன். ஒரு உதவி கேக்கத்தான் உங்களைக் கூப்பிட்டனான்”

“ஓம் ஓம், நானும் கவனிச்சனான், ரெண்டு நாளா இதாலையும் அதாலையும் அடிக்கடி போய் வந்தனியள்” வரதனுக்கு அருகில் இருந்த ராசன் சொன்னான்.

“சரி, விசயம் என்னண்டு சொல்லுங்கோவன், உதவி செய்யிற அளவுக்கு நாங்கள் ஒண்டும் பெரியாக்கள் இல்லை” சிரித்தபடி வரதன் கூறினான்.

”நீங்கள் ஒவ்வொரு நாளும் இதில கூடி யிருந்து கதைக்கிறனியள் அதுதான் உங்களிட்டக் கேப்பம் எண்டு…” ரவிக்குமார் இழுத்தான்.

“அண்ணை, ரொம்ப அறுக்காதேங்கோ, வகுப்பிலையே நாங்கள் இவ்வளவு பொறு மையா வாத்தியாற்ர கதை கேக்கிறேல்லை” விமலன் கொஞ்சம் பதட்டமானான்.

ரவிக்குமார் நண்பர்களுக்கு நெருக்கமாக வந்து “தம்பியவை, கோபப்படாதை யிங்கோ நான் சொல்லுறன், முன் னால இருக்கிற வீட்டில இப்ப கொஞ்சநாளா யாழ்ப்பாணத்திலே இருந்து ஒரு அக்கா வந்து நிக்கிறா எல்லோ, அவவை நான் விரு ம்பிறன், அவவோட கதைக்கோணும், விருப் பம் கேக்கோணும், அதுக்கு உங்கட உதவி வேணும்” விறுவிறு எனக் கூறி முடித்தான்.

நண்பர்களிடையே திடீர் மௌனம் குடி கொண்டது. வரதன் கொஞ்சம் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, “அண்ணை! நாங்கள் ஒருக்கா யோசிச்சுப் போட்டு உங்களுக்குப் பதில் சொல்லிறம்” என்றான். மற்றவர்களும் அதை ஆமோதிப்பதுபோலத் தலையைக் குனிந்தபடி இருந்தார்கள்.

“சரி தம்பி, நான் நாளைக்கு வாறன், மறுக் கமாட்டியள் எண்டு நம்பிக்கையோட போறன்” சையிக்கிளை எடுத்துக்கொண்டு ரவிக்குமார் அந்த இடத்தை விட்டு விலகினான்.

அவன் போனதும் விமலன் கொஞ்சம் கோவமாகவே சொன்னான், “பாரடா இவனை, அந்த பிள்ளையை நான் கவனிச்சுக்கொண்டு

வாறன், இவன் வந்து தனக்கு செற் பண்ணித் தரட்டாம், ஏன் நாங்கள் அமைக்க மாட்டமே"

"சொல்லவே இல்லையே, நீயும் பாக்கிறியே, வேற ஆர் பாக்கிறியள். சொன்னாக் குலுக்கிப் போட்டுப் பாத்து பிறகு யார் யாருக்குச் செற் பண்ணிறது எண்டு யோசிக்கலாம்" வரதன் சிரித்தபடி கூறினான்.

"டேய்! ரவிக்குமாரைப் பாத்தா A/L படிக் கிறான் போலக் கிடக்கு, அந்தப் பிள்ளையும் இவனோட தான் படிக்கிறாள் எண்டு நினைக் கிறன், உன்னைவிட வயசு கூட எல்லோ, பிறகென்னண்டு நீ வளைக்கப் போறாய்" ராசன் கேட்டான்.

"எனக்கு வயசு ஒண்டும் பிரச்சனையில்லை மச்சான், அந்த பிள்ளையோட கதைச்சு சேப் பண்ணலாம்" விமலன் கூறினான்.

"வயசு சரி, உயரம் காணாதேடா, அவள் உன்னைவிட சரியான உயரமடா" ராசன் சிரித்தான்.

"மச்சான், உனக்கு டிசம்பர்ல சோதினை, ரவிக்குமார் A/L 92 பட்ச் படிக்கிறதெண்டு பாத்தா ஆகஸ்ட்ல சோதினை, முதல்ல சோதினை அவன் செய்யிறதால அவனே அந்த பிள்ளையைப் பாக்கட்டும்" குகன் சிரித்தபடி சொன்னான்.

"அதோட அந்தப் பிள்ளை யாழ்ப்பாணம், நாளைக்கே வெளிக்கிட்டிட்டாள் எண்டாள் பிறகு நீ இன்னும் வளராத தாடியைச் சொறி ஞ்சு சொறிஞ்சு தான் வளரவைக்கோணும்" வரதன் விமலனின் தோளில் கைபோட்டபடி கூறினான்.

விமலனின் முகம் கொஞ்சம் வாடிப்போனது, ஆனாலும் யாரும் அதை ஒரு பெரிய விச யமாகக் கருதவில்லை, O/L படிக்கும் தங்களுக்கு என்ன காதல் என்ற எண்ணத்தில்.

"அப்ப ரவிக்குமாருக்கு செட் பண்ணிக் குடுக் கப் போறமோ" ராசன் கேட்டான்.

"கடிதம் குடுக்கத் தானே எங்களிண்ட உதவி கேக்கிறான், வாங்கிக் குடுப்பம், அந்த பிள் ளைக்கும் பிடிச்சு அவனுக்கும் அமைஞ்சா நாங்கள் சேர்த்து வச்ச காதல் எண்டு வர லாறு சொல்லும்" வரதன் சொன்னான்.

"நாளைக்கு ரவிக்குமார் வரட்டும், ஓமெண்டு சொல்லுவம்" கூறியபடி எழுந்து நின்றான் வரதன், எல்லோரும் எழுந்து தங்கள் தங்கள் சையிக்கிள்களை எடுத்து வீடுகளை நோக்கி ஓட்டினார்கள்..

அடுத்த நாள் முதல் மெது மெதுவாக அந்தப் பிள்ளைக்கும் ரவிக்குமாருக்கும் இடையில் கடிதப் பரிமாற்றம் நண்பர்களின் உதவியுடன் ஆரம்பித்தது. சில நாட்களிலேயே அவர்களது நெருக்கம் சையிக்கிளில் ஒன்றாகச் சொல்லு மளவுக்கு வளர்ந்தது, ஒருநாள் நண்பர்களுக்கு தோசை ட்ரீட்டும் கிடைத்தது, ரவிக்குமார் மட்டுமல்ல அந்த பிள்ளையும் வீட்டு கேற்று க்குள் நின்றபடியும் எல்லோரும் ஒன்றாகத் தோசை சாப்பிட்டார்கள்.

மடத்தடி நண்பர்களுக்குக் கொஞ்சம் பெரு மையாகவே இருந்தது, தாங்கள் சேர்த்து வைத்த காதல் என்று. பின்னர் அந்தப் பெண் மீண்டும் யாழ்ப்பாணம் சென்றுவிட ரவிக்கு மாரும் கண்ணில் தட்டுப்படாமல் போக நண் பர்களும் அந்தச் சம்பவங்களையே மறந்து

விட்டார்கள்.

சில மாதங்கள் கழிந்து திடீர் என்று ஒரு நாள் மாலை விளையாட மைதானத்துக்கு சென்ற போது ராசன் சொன்னான்,

“டேய் வரதா.. அந்தப் பிள்ளை யாழ்ப்பாண த்தில இருந்து வந்திருக்கிறா, எங்களோட கதைக்கோணுமாம். விளையாடிப்போட்டு மடத்தடிக்கு வாறமெண்டு சொல்லிட்டு வந்தனான்.”

என்னவாக இருக்கும், ஏன் அந்தப் பிள்ளை வந்திருக்கும் என்ற எண்ணம் மனசில் ஓடப் பந்தை உதைத்தபடி விளையாடத் தொடங்கி னான் வரதன்.

துலாவில் இழுத்த வாளியிலிருந்த முழுத் தண்ணியையும் தான் ஒருவனே குடித்து முடித்து விட்டு நிமிர்ந்த வரதன், மீண்டும் துலாவை இழுத்துத் தண்ணியை ராசனுக்கு வார்த்தான்.

முகம் கைகால் கழுவித் தாகமும் விளை யாடிய களைப்பும் தீரக் கிணற்றடியில் தண் ணீர் குடித்துவிட்டு நால்வரும் மடத்தில் வந்து அமர்ந்தார்கள், எல்லோர் மனதிலும் கொஞ்சம் பதட்டமான உணர்வு. அந்தப் பிள்ளை என்ன கதைக்க வரச்சொல்லி இருக்கும்.

இவர்கள் எப்போது வருவார்கள் என்று காத்திருந்தது போல அந்த பிள்ளையும் எதிர் வீட்டுக் கேற்றுக்குப் பின்னால் வந்து நின் றாள். வரதன் மட்டும் எழும்பிச் சென்று அந்த பிள்ளையோடு வீதியில் நின்றபடி சிறிது நேரம் கதைத்து விட்டு வந்தான். வந்தது முதல் தலைகுனிந்துபடி இருந்த வரதனை பார்த்துப் பொறுக்கமாட்டாமல் விமலன்,

“என்னடா வரதா, வந்ததிலை இருந்து ஒண் டும் பேசாமல் இருக்கிறாய், என்னவாம் அந்தப் பிள்ளை? எங்களுக்கு ஏதாவது பார்ட்டி தரப் போதாமா?” ஆர்வமாகக் கேட்டான்.

”விசர்க்கதை கதைக்காதை, ரவிக்குமார் இப்ப முந்தி மாதிரி இல்லையாம், கதைக்கக் கூப்பி ட்டாலும் வாறதில்லையாம், கடிதம் குடுத்தா லும் வாங்கிறேல்லையாம், யாரிட்டையாவது குடுத்து விட்டாலும் பதில் அனுப்பிறதில் லையாம், அந்த பிள்ளை அழுகுதடா” வரதன் கவலையுடன் சொன்னான்.

”இது நல்ல கதையா எல்லோ இருக்கு, நாங் கள் சேர்த்து வச்சேண்டதுக்காக எல்லா த்துக்கும் நாங்களே பொறுப்பு? இனி அது அவவிண்ட பிரச்சனை. அவ தான் பாத்துக் கொள்ளோனும்” விமலன் சொன்னான்.

“ஏன்? ரவிக்குமார் வந்து கேட்ட உடன நீங் கள் விழுந்தடிச்சு உதவி செய்யிறேண்டு போனியள், இப்ப இந்தப் பிள்ளையும் உதவி தானே கேக்குது, செய்து குடுங்கோவன்” குகன் சொன்னான்.

“இது உதவி எண்டதுக்கு மேல நாங்கள் சேர் த்து வச்ச காதல் பிரிஞ்சிடக் கூடாது எண்ட பிரச்சனை, அவங்கள் சேர்றதோ பிரியிறதோ, ரெண்டிலையும் எங்களுக்கு சம்பந்தமிருக்கு, நாங்கள் எல்லாருமாச் சேர்ந்து ரவிக்குமாரைப் போய்ப் பாப்பம், என்ன பிரச்சனை எண்டு கேப்பம்”, வரதன் ஒரு முடிவோடு சொன் னான்.

”எப்ப இருந்து கதைக்கிறேல்லையாம்” ராசன் கேட்டான்.

”இப்பத்தான், ஒரு மாசமா, A/L ரிசல்ட் வந்ததிலை இருந்து கதைக்கிறேல்லையாம், ரவிக்குமாருக்கு ரிசல்ட் 3A B ஆம், இந்த பிள்ளைக்கு BC2S ஆம், அவனுக்குக் கம்பஸ் கிடைச்சுத் தனக்குக் கிடைக்காததால தான் தன்னோட கதைக்கிறானில்லையோ எண்டு இந்த பிள்ளைக்குச் சந்தேகம்”

“அது தானே பாத்தன், அவன் விசயகாரன், வலு தெளிவாத்தான் மூவ் பண்ணிறான், அப்பவே நான் நினைச்சனான், உவன் உந்தப் பிள்ளையை மனசால லவ் பண்ணமாட்டான் எண்டு” விமலன் நக்கலாகக் கூறினான்.

“உன்னை வளைக்க விடாமல் அவனுக்குச் செற் பண்ணினத்துக்காக நீ உப்பிடி கதைக்காதை”.

“நான் லவ் பண்ணினா எந்த நிலையிலையும் கழட்டி விட மாட்டன், உவன் ரவிக்குமார் ஒரு சந்தர்ப்பவாதி”

”போடா போடா, முதல்ல O/L ஐ பாஸ் பண்ணிர வழியைப் பார்” விமலனும் ராசனும் தர்க்கப்பட்டார்கள்.

“தேவையில்லாத கதையளை விட்டிட்டு இப்ப என்ன செய்யப்போறம் எண்டு யோசிப்பம்”, மற்றவர்களின் உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்த வரதன்,

“முதல் சொன்னதுதான், நாங்கள் எல்லாருமா நாளைக்கே யாழ்ப்பாணம் போய் ரவிக்குமாரைப் பாத்துக் கதைச்சு அதுகளைச் சேர்த்து வைப்பம்” என்றபடி எழுந்தான்.

”நாளைக்கு வெய்யில் ஏறமுன்னம் வெளிக்கிடோணும், ஆறரைபோல எல்லாரும் வந்திடுங்கோ, என்ரையும் ராசண்ட சயிக்கிளையும் கொண்டு போவம்”.

எல்லோரும் எழுந்தார்கள். காலையில் சொன்ன நேரத்துக்கு முன்னதாகவே எல்லோரும் மடத்தடியில் கூடிவிட்டார்கள், இரண்டு சையிக்கிள்களில் நால்வரும் போவதாக ஏற்கனவே கதைத்தபடி இரண்டு சையிக்கிள்கள் மட்டும் கொண்டு வந்திருந்தார்கள். வரதன் சையிக்கிளில் நின்றபடி கதவின் மறுபுறம் நின்ற அந்தப் பிள்ளையிடம் விசயத்தைச் சொல்லிவிட்டு வர நண்பர்களின் பிரயாணம் தொடங்கியது.

வல்லைப் பிள்ளையாருக்கு ஒரு தேங்காயை உடைத்து விட்டு மாறி மாறி சையிக்கிளை மிதித்து எட்டுமணி போல நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். சையிக்கிள்களை விட்டு விட்டு எல்லாருமாகக் கோவிலுக்குள் சென்று கும்பிட்டு விட்டு மீண்டும் புறப்பட்டார்கள்,

அந்த பிள்ளை கூறியிருந்த குறிப்புப்படி திருநெல்வேலி சந்தைக்கு அருகில் இருந்த ஒழுங்கையில் மூன்றாவது வீட்டின் முன் சென்று,

”ரவிக்குமார் அண்ணா, ரவிக்குமார் அண்ணா” என்று கூப்பிட்டார்கள்,

சிறிது நேரத்தின் பின்னர் வயசான ஒருவர் வெளியில் வந்து, “என்ன தம்பியவை, என்ன விசயம்? யார் நீங்கள்” எனக் கேட்டார்,

”ஐயா நாங்கள் பருத்தித்துறையில் இருந்து வாறம், ரவிக்குமார் அண்ணாவைத் தெரியும், ஒருக்காக் கதைக்கோணும்,”

"சரி தம்பியவை, உள்ளுக்கு வாங்கோ, அவன் சீனியேர்ஸ் தான் ராகிங் பண்ண வந் திருக்கிறாங்கள் எண்டு உள்ளுக்கு ஒளி யிறான், நான் கூப்பிடுறன்".

கூறியபடி பெரியவர் உள்ளே சென்றார், நண்பர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்,

"உவன் சரிப்படான், ராகிங்க்கு பயந்து தான் அந்த பிள்ளையை விட்டிட்டன் எண்டு சொல்லுவான் போல" விமலன் மெதுவாக சொன்னான்.

"சும்மா இரடா, இங்க கதைக்க ஏலாது, அவனை வெளியிலை கூப்பிடுவம் முதல்ல", வரதன் சொன்னான்.

ரவிக்குமார் உள் கதவுக்கூடாக எட்டிப் பார்த்தான், பின்னால் நின்ற தந்தையை பார்த்து,

"இவை எனக்குத் தெரிஞ்ச தம்பியவை, பிரச்சனை இல்லை நான் கதைக்கிறன்" சொன்னபடி இவர்களை நோக்கி வந்தான்.

"என்ன இவ்வளவு தூரம் வந்திருக்கிறியள், ஏதாவது அலுவலா யாழ்ப்பாணம் வந்த னியளே, உள்ள வாங்கோவன், இருந்து கதைப்பம்", கொஞ்சம் பதட்டமாகக் கதைப்பது போல வரதனுக்கு விளங்கியது.

"இல்லை அண்ணை, உங்களைச் சந்திக்க தான் வந்தனாங்கள், வெளியிலை ஒருக்கா வரேலுமே, கொஞ்சம் கதைக்கோணும்" வரதன் கூறினான்.

"தம்பி, இப்ப ராகிங் நடக்குது, சீனியேர்ஸ் வெளியிலை கண்டா ரூமுக்குக் கொண்டு போடுவான்கள், அதால வெளியிலை வரேலாது, என்னெண்டாலும் இங்கயே சொல்லுங்கோ".

"அக்கா ஊருக்கு வந்திருக்கிறா, எங்களைக் கண்டிட்டுக் கதைச்சவ, அப்பத்தான் சொன் னவ, நீங்கள் அவவோட இப்பெல்லாம் சரியா கதைக்கிறியள் இல்லையாம், ஏதாவது கோவமே தெரியா எண்டு கவலைப்படுறா, அதுதான் என்னெண்டு கேப்பமெண்டு வந்தனாங்கள்", வரதன் மெதுவாக சொன் னான்.

"அவ உங்களிட்ட வந்து கோள் மூட்டிப் போட்டாளோ? தம்பியவை நீங்கள் இதிலை தலையிடுறது தேவையில்லாத வேலை. நீங்கள் உங்கட படிப்பைக் கவனியுங்கோ".

"என்ன விசர் கதை கதைக்கிறியள், அந்தப் பிள்ளையைச் சுழட்டேக்க மட்டும் நாங்கள் தேவைப்பட்டனாங்கள், இப்ப அவாவோட சேர்த்து எங்களையும் கழட்டிவிடப் பாக்கி றியளோ" விமலன் கோவமாகக் கேட்டான்.

"தம்பி, மரியாதையாச் சொல்லியிட்டன், இது என்ர தனிப்பட்ட விசயம், நீங்கள் என்னைக் கேள்வி கேக்கேலாது, படிக்கேக்க பழகிறது எல்லாம் காதல் இல்லை, நீங்க போட்டு வாங்கோ" கூறியபடி கேற்றைப் பூட்ட முயற்சித்தான், தந்தையார் வந்திடுவாரோ என்ற பதட்டம் அவனது செய்கையில் விள ங்கியது.

கதவை மூட விடாமல் கையால் தடுத்தபடி வரதன் நிதானமாகச் சொன்னான், "ஒரு விசயம் மட்டும் சொல்லுங்கோ, நாங்கள் போறம், எதுக்காக அவவோட கதைக்கிறதை

விட்டனீங்கள்”.

”எனக்கு கம்ப்ஸ் கிடைச்சிட்டுது, அவவுக்குக் கிடைக்கேல்ல, படிக்கேக்க பழகிறதெல்லாம் சும்மா பொழுது போக்குக்குத் தான் உங்க ளுக்கு அதெல்லாம் விளங்காது, நீங்கள் உங்கட வேலையைப் பாருங்கோ. போயிட்டு வாங்கோ” பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே சென்றுவிட்டான்.

நண்பர்கள் சையிக்கிள்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள், ஒருத்தரும் ஒன்றும் பேசவில்லை. சையிக்கிள்கள் நேரே பருத்தித்துறையை நோக்கி ஓடிக் கொண்டி ருந்தது. நேரம் ஒன்பது மணியளவில் இருக்கும். காலைச் சாப்பாடு எதுவும் இன் னும் சாப்பிடவில்லை என்பது கூட யாருக்கும் உறைக்கவில்லை. கோப்பாய் சந்தியில் இருந்த சைவக்கடையைப் பார்த்ததும் ராசன் சொன்னான்,

‘‘ஏதாவது சாப்பிட்டுப் போவம், அங்கால வேற கடையளும் இல்லை”. சையிக்கிள்களை நிறுத்தி விட்டு நால்வருமாக உள்ளே சென் றார்கள். கைகழுவிக் கதிரையில் உட்கார்ந்தா ர்கள், சாப்பாடு பரிமாறுபவர் மேசையைத் துடைத்தபடி

”என்ன சாப்பிடுறியள், இடியப்பம், தோசை, இட்லி இருக்குது”,

விமலன் சொன்னான், ‘‘அண்ணை எல்லா ருக்கும் இடியாப்பமும் ஒரு வடையும் வையுங்கோ”,

அவன் சொன்ன தொனியில் சாப்பாட்டில் பெரிய ஆர்வமில்லை என்பது விளங்கியது. மற்றவர்களின் மனநிலையும் அப்ப டியே இருந்ததால் யாரும் எதுவும் சொல்ல வில்லை. சாப்பிட்டுத் தேத்தண்ணியும் குடித்துவிட்டு மீண்டும் தமது பிரயாணத்தைத் தொடங்கினார்கள்,

எல்லோருடைய மனதிலும் அந்தப் பிள்ளை க்கு என்ன பதில் சொல்லப்போகிறோம் என்ற சிந்தனையே ஓடிக்கொண்டிருந்தது.

வல்லைப் பிள்ளையாரைக் கும்பிட்டு விட்டு மரத்தடியில் இருந்த கல்லில் உட்கார்ந்தான் வரதன், மற்றவர்களும் சுற்றிக் கல்லிலும் சைக்கிளிலும் உட்கார்ந்தார்கள். ‘‘அந்தப் பிள்ளையிட்ட நடந்ததைச் சொல்லிக் காலம் போக போக மறந்திடுவீங்கள் எண்டு ஆறுதல் சொல்லுவம்” ராசன் சொன்னான்.

‘‘உண்மையைச் சொல்லத்தான் வேணும்” அதிகம் பேசாத குகனும் ராசன் சொன்னதை ஆமோதித்தான்.

‘‘நானும் அப்பிடி தான் நினைக்கிறன். எதை யாவது மறைச்சுப் பிறகு பிரச்சனை இன்னும் பெரிசாகாமல் ரவிக்குமார் சொன்னதுகளை அப்பிடியே சொல்லுவம், பிறகு பாப்பம்” வரதன் இறுதியாகக் கூறினான்.

‘‘மச்சான், நான் அவவுக்கு ஆறுதல் சொல் லுறன், சாட்டோட சாட்டா ட்ரை ஒண்டு போட்டு பாப்பம்” விமலன் மெதுவாகச் சொன்னான்.

”டேய், விசர் கதை கதைக்காதை, உண்ட லவ் ஐ சொல்லேறதுக்கு உனக்கு வேற நேரம் கிடைக்கலையே” ராசன் கோபப் பட்டான்.

‘‘விமலன், இது விளையாடுற நேரமில்லை, அந்த பிள்ளையைத் தேத்திறது தான் இப்ப

எங்களுக்கு இருக்கிற பெரிய பொறுப்பு, அதை விட்டிட்டு வேற ஏதாவது கதைச்சுக் கொண்டிருக்காதே, சொல்லீட்டன்” வரதன் அறுதியாகக் கூறினான். சையிக்கிள்களை எடுத்து பருத்தித்துறையை நோக்கி உழக்க தொடங்கினார்கள்.

பருத்தித்துறையை அடையும் போது நேரம் பதினோரு மணி இருக்கும். நேராக மடத்த டிக்கு போகாமல் மைதானத்துக்குப் போனா ர்கள், இந்த நேரம் அந்தப் பிள்ளையோடு வீதியில் நின்று கதைக்க முடியாது. பின் னேரம் விளையாடி முடிந்த பிறகு வழமை போல மடத்தடியில் சந்திப்பதாகப் பேசிப் பிரிந்தார்கள்.

மாலை விளையாடப் போகும்போது வரதன் அந்த பிள்ளை கேற்றடியில் நிற்பதைக் கண் டான், ஏக்கத்துடன் கூடிய பதிலை அறிய துடிக்கும் பார்வையை வரதனை நோக்கி வீசினாள். பின்னர் வருவதாகச் சைகை செய்து விட்டு சென்ற வரதனுக்கு திரைப் படங்களில் பார்க்கும் காதலுக்கு உதவுபவ ர்களை விடத் தமது நிலைமை மோசமாக உள்ளதே என்று மனதுக்குள் தோன்றியது.

ஏனோ அன்று விளையாட்டு அவ்வளவாகச் சோபிக்கவில்லை, பந்தை தவற விட்டதற்கா கப் பல தடவைகள் சின்னாவிடம் வரதன் திட்டும் வாங்கினான். விளையாடி முடித்துக் கால் முகம் கழுவி மடத்தடியில் வந்து உட்கார்ந்தார்கள், அந்தப் பிள்ளை இவர்களு க்காகவே காத்திருப்பது விளங்கியது. “நீயும் வா ராசன், தனியாச் சமாளிக்கேலாது போலக் கிடக்கு. கொஞ்சம் பதட்டமா இருக்கு” என ராசனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வரதன் எதிர்புற கேற்றுக்கு அருகில் சென்றான்.

அந்தப் பிள்ளையை நிமிர்ந்து பார்க்கவே வரதனுக்குத் தயக்கமாக இருந்தது, அந்தப் பிள்ளையின் முகமோ வரதன் ஏதாவது நல்லவிசயம் சொல்லுவான் என்ற ஆர்வ த்துடன் வரதனின் கண்களை நோக்கியது. வரதனின் கையை மெதுவாகச் சுரண்டினான் ராசன், தன்னைச் சுதாரித்துக் கொண்ட வரதன் சொன்னான்,

“ரவிக்குமாரை கண்டு கதைச்சனாங்கள், அவர் ராகிங் பயத்தில வீட்டிலையே இருக்கிறார், நாங்கள் வீட்டை போய்க் கூப்பிட, தகப்பன் வந்து யார் எண்டு பாத்துத் தான் மகனை வெளியிலை விட்டவர்”.

”என்னோட ஏன் கதைக்கிறாரில்லையாம், கேட்டனியளே?” மற்ற எந்த விசயத்திலும் ஆர்வமில்லாதவளாகத் தனது காதலின் நிலையை அறிவதிலேயே குறி யாக இருந்தாள் அவள்.

“ஓம் கேட்டனாங்கள், அவருக்குக் கம்பஸ் கிடைச்சிட்டுதாம், படிக்கிற காலத்தில பழகிறதெல்லாம் காதல் இல்லையாம், அது மட்டுமில்லை உங்களுக்குக் கம்பஸ் கிடைக்கல்லையாம்” ஒருவாறு தங்களின் இயலாமையைச் சொல்லி முடித்தான் வரதன்.

அந்த பிள்ளை தலையை குனிந்தபடி விசும்பிக்கொண்டிருந்தாள். “நீங்கள் உதைப் பெரிசா எடுக்காதையுங்கோ. நாங்கள் அவரைப் பற்றி வடிவா விசாரிச்சிருக் கோணும், அப்பிடிச் செய்யாமல் விட்டிட்டம், அவர் உங்களுக்குப் பொருத்தமானவர்

இல்லை, இப்பிடிக் கொஞ்சக் காலத்திலையே மாறிறவர் பிறகு பிறகு எப்படியெல்லாம் மாறுவாரோ தெரியா, நீங்க செக்கண்ட்சை A/L எடுங்கோ, நல்ல ரிசல்ட்டோட கம்பஸுக்கு போய் அவருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும்" இடைவெளிவிட்டால் அந்த பிள்ளை பெரிதாக அழுத்திடுவாளோ என்று அவசர அவசரமாய்ச் சொன்னான் வரதன்.

அந்தப் பிள்ளையின் விசும்பல் ஒலி மட்டும் சிறிது நேரம் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு,

“உங்களுக்கும் கஸ்டம் குடுத்திட்டன் தம்பி யவை, அவரை பற்றி நான் ஒண்டும் கதைக்க விரும்பேல்ல, உங்களுக்கு ஒண்டு மட்டும் சொல்ல விரும்பிறன், அவரைப் போலப் படிக்கிற காலத்தில சும்மா பொழுது போக்கா நான் பழகேல்ல, எனக்கு இது பெரிய ஏமாற்றம் தான், நான்இதிலை இருந்து மீள முடியுமோ தெரியாது, நீங்கள் எனக்கு இன்னும் உதவி ஏதாவது செய்யோணும் எண்டு நினைச்சா, உங்கட வாழ்க்கையில எந்த பொம்பிளைப் பிள்ளை யளிண்ட மனசோட மட்டும் விளையாடாதை யுங்கோ”

அந்த வார்த்தைகள் தன்னையும் சேர்த்து மொத்த ஆண்களையும் செருப்பால் அடித்ததாக வரதன் உணர்ந்தான், பதில் சொல்ல நா எழவில்லை.

”எல்லாத்துக்கும் தாங்க்ஸ், நான் நாளைக்கு யாழ்ப்பாணம் வெளிக்கிடுறன், நீங்கள் செய்த உதவியளுக்கு நன்றி, உங்களை நான் மறக்க மாட்டன், மற்றவையிட்டையும் சொல்லுங்கோ. போறன்” குரல் கரகரக்கக் கூறினாள், வரதன் மெதுவாகச் சொன்னான். “நீங்க சொன்னதை நிச்சயமா மனசில வச்சு நடப்பம்” தலையைக் குனிந்தபடியே உள்ளே சென்றாள்,

இவர்களும் மடத்தடிக்குத் திரும்பினார்கள். விமலன் ஆர்வமாகக் கேட்டான், “என்னவாமடா, ஆள் ஓகேயா?”

“ரவிக்குமாரை மாதிரி எங்களை ஒரு காலத்திலேயும் நடந்திட வேண்டாம் எண்டு சொன்னவ. முக்கியமா உன்னட்ட சொல்ல சொன்னவ” ராசன் நக்கலாக விமலனைப் பார்த்துக் கூறினான்.

ஆனாலும் ராசன் கூறியதில் இருந்த உண்மை அங்கிருந்த யாரையும் மேற்கொண்டு எதுவும் பேசவிடவில்லை. காதலை உணரும் முன் னமே காதல் தோல்வியின் வலியை அன்று அந்த கணத்தில் அவர்கள் உணர்ந்தார்கள்.

## தகவல் 3

அனைத்தையும் தன் கதைகளின் பேசு பொருளாக்கியவர் ஜெயகாந்தன். சிறந்த நாவலாசிரியர் மற்றும் சிறுகதையாசிரியர். இவரது சிறுகதைகளின் முழுத்தொகுப்பை கவிதா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவரின் சிறந்த சிறுகதைகள் **அக்னிப் பிரவேசம், யுகசந்தி, நான் இருக்கிறேன், குருபீடம், மௌனம் ஒரு பாசை, நான் என்ன செய்யட்டும் சொல்லுங்கோ ட்ரெடில், பிணக்கு** ஆதியனவாகும்.



# போர்வை

**நக்கீரன்மகள்**

**சூ**ரியன் மெதுவாக மறைந்து கொண்டிருந்தான். வேலை முடித்து விமானநிலையத்திற்கு வந்திருந்த தமிழினி விமானம் பறக்க முன்னரே மகிழ்ச்சியில் பறந்து கொண்டிருந்தாள். விமானத்துக்குள் ஏறியதும் இலண்டன் விழாவில் யார் யாரையெல்லாம் சந்திக்க வேண்டும். சந்தித்து என்னென்ன பேச வேண்டும், ஞாபகமாக வைத்திருக்கப் பல படங்கள் எடுக்கவேண்டும். இத்தனைக்கும் சில மணி நேரங்கள் எப்படிக் காணும் என்ற பல எண்ண அலைகள் தமிழினியின் மனக் கரையைத் தொட்டுப்போக விமானம் தரையை எட்டியது.

ஐரோப்பிய எழுத்தாளர் சங்கத்தால் இலண்டன் மாநகரில் கலைஞர்கள் ஒன்று கூடலைக் 'கலைஞர்கள் சங்கமம்' என்ற விழாவாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பில் தமிழினி இலண்டனில் உள்ள விடுதி ஒன்றிற்கு வெள்ளிக்கிழமை இரவு பத்து மணிக்கு வந்து சேர்ந்தாள். சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு விழா ஆரம்பம். இலக்கியப் பயண மாக இருப்பதால் தமிழினி விடுதியிலேயே தங்கும் வசதியும் ஏற்பாட்டாளர்களால் செய்யப்பட்டிருந்தது. மின் குமிழ்கள் இமைகளை மூடிய பின்னும் அவளது விழிகள் நாளைய கலை விழாவைக் கற்பனையில் கண்டு சிரித்தது. அந்தச் சனிக்கிழமை இலண்டன் மாநகரம் கதிரவன் உதயத்தோடு அழகாக விடிந்தது. தமிழினி தங்கியிருந்த விடுதியிலிருந்து விழா மண்டபத்திற்குத் தன் இலண்டன் தோழி கௌசியுடன் அரைமணி நேரத்திற்கு முன்பே வந்து சேர்ந்தாள்.

வாசலில் நிறைகுடம் வைத்து அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சினிமா விருது வழங்கும் இடம் போல் மண்டபம் பொலிவுடன் இருந்தது

அறிஞர்பெருமக்களில் ஆண்கள் வேட்டியும் பெண்கள் சேலையுமாக அவ்விடமெங்கும் தமிழ் மணம் வீசியது. இந்தத் தமிழ் மணத்தில் தமிழினி மனதுக்குள் ஆயிரம் பூக்கள் மலர்ந்தன. தமிழினியும் தலைக்குப் பூ வைத்து அழகிய தமிழ்ப் பெண்ணாக அவர்களுள் ஒருத்தியாக நின்றிருந்தாள். இத்தனை சமூக நலன் கருதும் பெரியவர்களை ஓரிடத்தில் காணுவதைப் பெரும் பாக்கியமாக எண்ணிக்கொண்டாள்.

"நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே…" அன்று பாட்டியிடம் படித்த ஔவையின் மூதுரையும் ஞாபகமீட்டிப் போனது

"நான் பேஸ்புக்கில் இன்ஸ்டர்கிராமில் பார்த்த எனக்குப் பிடித்த கனபேர் நிற்கினமடி…கௌசி எல்லாரோடையும் கதைக்கவேணும்" என்று தன் தோழியிடம் பேசிக்கொண்டாள் தமிழினி. "அதுதானே எனக்குப் பெரிசா இதுகளில் ஆர்வம் இல்லாட்டியும் உனக்காக வந்தனான். உன்ர தீராத அறிவுப் பசிக்கு விருந்து கிடைக்கட்டும்" என்று சிரித்தாள் கௌசி.

**"வணக்கம் நான் தமிழினி நோர்வேயில் இருந்து வந்திருக்கிறேன்" என அறிமுகம் செய்தாள்.**

**அவர்களும் பதிலுக்குத் தங்கள் பெயரையும் பட்டங்களையும் தாம் வெளியிட்ட நூல்களின் பெயர்களையும் சொல்லி அறிமுகப்படுத்த இருவரும் பல மணித் துளிகளை எடுத்துக்கொண்டனர்.**

**"நீங்கள் என்ன …. எழுத்தாளரா….எப்படி இந்த விழாக்கு வந்தனீங்கள்" என்றாள் ஒரு பெண் மணி அலட்சியமாக. "கொஞ்சம் பேமஸ் ஆன ஆக்களைத்தான் கூப்பிட்டவை என்று சொல்லிச்சினம் இப்ப சும்மா எல்லாரும் வந்திருக்கினம் போல இருக்கு" என்றாள் அருகே இருந்த பெண்மணி**

**"தமிழில பற்று இருந்தால் இப்பிடியான நிகழ்வுகளில் உங்களைப் போல பெரியாக்களிடம் பல விசயங்களைப் கற்றுக் கொள்ளுதற்கு வாறதில தவறில்லைத்தானே அம்மா" என்று பதிலளித்தாள் தமிழினி.**

இந்த விழாவினூடாகத் தமிழறிஞர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி நல்ல விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே தமிழினியின் விருப்பம். தனது தமிழறிவை வளர்த்துத் தமிழ், தமிழர்கள் பற்றி ஆய்வுகள் செய்ய வேண்டும் இதன் மூலம் எமது எதிர் காலத் தமிழ்ச் சந்ததிக்குத் தன்னால் இயன்ற நல்லதைச் செய்யவேண்டும் என்பது அவளது நீண்ட நாள் கனவாக இருக்கிறது. இந்தக் கனவு நிறைவேற இவ்வாறான இலக்கிய சந்திப்புகள் நல்லதெனவும் எண்ணிக் கொண்டாள். தமிழினி 16 வயதில் நோர்வே நாட்டுக்குப் புலம்பெயர்ந்து 20 வருடமாக வாழ்கிறாள்.

மனநல மருத்துவராகப் பணியாற்றும் தமி

ழினி கணவன் குழந்தையென நல்ல குடும்பத் தலைவியாகவும் சமூக சேவைகள் செய்யும் சமூக அக்கறை கொண்டவளாகவும் வாழ் கிறாள். தன் தாய் மொழியில் மிகுந்த பற்றுக் கொண்ட இவளின் மிகப் பிடித்த பொழுது போக்காகவே கவிதை எழுதுகிறாள். தமிழ் மீதும் தாய் நாட்டின் மீதும் அக்கறை கொண்ட இவள் சமூக வலைத் தளங்க ளூடாக ஓரளவு பிரபலம் அடைந்தவளா னாலும் தன்னைக் கவிஞர் என்று சொல் வதோ அல்லது தான் ஒரு மருத்துவர் என்ற தலைக்கனமோ இல்லாதவள். கற்கவேண்டும் என்ற தேடலும் துடிப்புமுள்ள பெண் தமிழினி என்றே கூறலாம். இருபது வருட நோர்வே நாட்டு வாழ்வினால் அந்நாட்டு நல்ல பழக்கங் களும் பெற்றோரிடம் கற்றுக்கொண்ட பழக்க ங்களும் தமிழினியைப் பண்படுத்தியுள்ளது எனலாம். இத்தனை கலைஞர்களையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைத்து இப்படி ஒரு விழாவைச் செய்வதும் உணவு மற்றும் சகல தேவைகளைக் கவனிப்பதும் எவ்வளவு கடினமானது. இவ்வாறு விழாவின் நல்ல ஒழுங்கமைப்புகளைப் பார்த்ததும் ஏற்பாட்டாளர்கள் மீது தமிழினிக்கு இருந்த மதிப்பு இரட்டிப்பானது. மங்கல விளக்கேற் றலைத் தொடர்ந்து எல்லோரும் மண்டப த்துக்குள் வந்தமர்ந்தனர். மேடையில் ஒளிர்ந்த வண்ண மின் விளக்குகள் கண் சிமிட்டி அவளை வாவென்று அழைப்பது போல் உணர்ந்தாள்.

தமிழ்த்தாய் வாழ்த்தோடு அழகாகத் தொட ங்கிய விழா தமிழினிக்கு ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வைத் தந்தது. நிகழ்ச்சி நிரலைக் கையில் வைத்துப் பார்த்த படி கவிதை,பேச்சு,பாட்டு,பட்டிமன்றம், நடனம், நாடகம் எனப் பல்வேறு நிகழ்வுகளையும் பார்த்து ஒவ்வொன்றையும் சுவைக்க வேண் டும் என்ற ஆர்வத்தோடு கையில் எழுது கோலோடு குறிப்புகள் எடுக்கவும் காத்திருந்தாள்.

தமிழினி எத்தனையோ கூட்டங்கள் விழாக் களை நோர்வே நாட்டவர்களோடு கலந்து கொண்டாலும் தாய்மொழி மீது பற்றுக் கொண்ட தாய் நாட்டவரோடு கூடியிருப்ப தைப் பெருமையாக உணர்ந்தபடி பக்கத்தில் இருந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க இரு பெண்களுக்கு

“வணக்கம் நான் தமிழினி நோர்வேயில் இருந்து வந்திருக்கிறேன்” என அறிமுகம் செய்தாள்.

அவர்களும் பதிலுக்குத் தங்கள் பெயரையும் பட்டங்களையும் தாம் வெளியிட்ட நூல்களின் பெயர்களையும் சொல்லி அறிமுகப்படு த்த இருவரும் பல மணித் துளிகளை எடுத்துக்கொண்டனர்.

“நீங்கள் என்ன .... எழுத்தாளரா....எப்படி இந்த விழாக்கு வந்தனீங்கள்” என்றாள் ஒரு பெண் மணி அலட்சியமாக

“கொஞ்சம் பேமஸ் ஆன ஆக்களைத்தான் கூப்பிட்டவை என்று சொல்லிச்சினம் இப்ப சும்மா எல்லாரும் வந்திருக்கினம் போல இரு க்கு” என்றாள் அருகே இருந்த பெண்மணி

“தமிழில பற்று இருந்தால் இப்பிடியான நிக ழ்வுகளில் உங்களைப் போல பெரியாக்க

ளிடம் பல விசயங்களைப் கற்றுக் கொள்ளு தற்கு வாறதில தவறில்லைத்தானே அம்மா'' என்று பதிலளித்தாள் தமிழினி.
அழகான தொகுப்பாளர்கள் இருவர் அரு மையான குரலிற் தொகுத்து வழங்கினர். விழா சிறப்பாக வேண்டுமென எல்லா விட யங்களும் தேர்ந்தெடுத்துச் செய்தது போல் அருமையாக இருந்தன.

வரவேற்புரை வழங்கச் சங்கத் தலைவர் சத்தியமூர்த்தி வருகை தர அரங்கம் அதிரும் வண்ணம் கைதட்டல்கள் ஒலித்தன. தமிழே மூச்சு என்று வாழ்பவருக்கு இத்தனை அன்பு இருப்பதில் ஐயமில்லை என நினைத் தாள் தமிழினி.

சத்தியமூர்த்தியின் சமூக அக்கறையுள்ள பல பதிவுகளைப் பார்த்துப் பெருமதிப்பு வைத்த தமிழினிக்கு தனது அப்பா வயதில் வேட்டி சட்டை போட்டு கம்பீரத் தோற்றத்துடன் வந்த வரைப் பார்க்கவே பிடித்திருந்தது. அவரு டைய வரவேற்புரையைக் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அவருடைய வரவேற்புப் பல நூல்களை வெளியிட்ட முன் வரிசை களில் அமர்த்தப்பட்ட பிரபலங்களின் பட்ட ங்களையும் படைப்புகளின் பெயர்களையும் குறிப்பிட்டதோடு பல வர்த்தகர்களின் புகழ் கூறி ஒவ்வொருவராக வரவேற்று அறிமுக ப்படுத்தியதில் வரவேற்புரை நீண்டு போனது. அழைக்கப்பட்ட வளர்ந்து வரும் கலைஞர்க ளையோ நிகழ்ச்சி செய்ய வந்திருப்பவர்க ளையோ அவர் கருத்தில் எடுக்கவேயில்லை. வரவேற்புரையைக் கேட்கக் கேட்கக் கொஞ் சம் கொஞ்சமாக அவருக்கான மதிப்பு அவளி டமிருந்து இறங்கிக் கொண்டிருந்தது.

“பட்டங்கள் பதவிகள் தவிர்த்து மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும் என்றெழுதும் சத்தியமூர்த்தி ஐயாவா இப்படிக் கூறுகிறார்'' என்று தன்னிடம் கேட்டுக் கொண்டாள். ஆனாலும் ஒரு விடயத்தை வைத்து ஒரு வரை மதிப்பிட முடியாது என்றும் தன்னைக் கடிந்து கொண்டாள்.

விழா மண்டபத்துள் எல்லோரையும் சத்திய மூர்த்தி சரியாக வரவேற்கவில்லையென்ற சலசலப்பு ஒரு சில நிமிடங்கள் ஏற்பட்டு அமைதியானது.

அடுத்த நிகழ்வாக இரு பெண் குழந்தைகள் பாரதியார் பாடல்களைப் பாடினர். தமிழினி அந்த இசையில் மெய் மறந்து போனாள்.

“இந்தப் பிள்ளையள் என்ன பாட்டுப் படி க்கினம்... சுருதி கொஞ்சமும் சேரேல்ல...'' என்று பின்னுக்கிருந்து வந்த குரல்கள் தமிழினியைப் பாடலை இரசிக்க விடாமல் இடையூறு செய்தது. இச்சிறுவயதில் இத் தனை அழகாகப் பாடும் இவர்களைப் பாரா ட்டும் மனங்கள் ஏனில்லாமல் போனதென வருந்தினாள். அந்தப் பாடல் முடிந்ததும்

ஒரு எழுத்தாளர் எப்படி இருக்கவேண்டும் என்று உரையாற்ற வந்த குலசேகரம் என்ற பிரபல எழுத்தாளர் தனது சொந்தப் புகழ் பாடிப் பலரைத் தூங்க வைத்தார். மீண்டும் ஒரு வீணையிசைத்த சிறுமி தமிழினியைத் தட்டி எழுப்பி விட்டாள். அத்தோடு தேநீர் இடைவேளைக்கான நேரமெனத் தொகுப்பா ளினி கூறியது அவள் காதிற்கு இனிப்பா கத்தான் இருந்தது. சிற்றுண்டி உணவுக்கென வேறு ஒரு மண்டபம் அழகாக மேசை

கதிரைகளுக்கு வண்ணச் சட்டைகள் போட்டு அழகாக அடுக்கப்பட்டு இருந்தது. முன் வரிசைப் பிரபலங்கள் பலருக்குப் பிரத்தி யேகக் கவனிப்புகள் நடந்தன அத்தோடு அவர்களுடன் பேசுவதற்குப் பலர் வரிசையில் நின்றனர். பிரபலங்கள் சிலரின் உதடுகள் மற்றவர்களைப் பார்த்துப் புன்ன கைப்பது கூடக் கௌரவக்குறைவு என்பது போல் பூட்டிக் கிடந்தன. நோர்வே நாட்டில் ஒரே மேசையில் உணவுண்ணும் அதிகாரியையும் வேலையாளையும் பார்த்து வளர்ந்த தமிழி னிக்கு இவை வெறுக்கத்தக்க விடயங் களாக இருந்தன. வேறு சிலர் சிற்றுண்டிகளை உண்பதை விட செல்பி எடுப்பதிலும் சேர்ந்து சேர்ந்து படங்களை எடுத்து முகநூலில் போடு வதிலும் நேரத்தைச் செலவிட்டனர். தமிழினி யும் தோழியும் இருந்து சாப்பிட்ட மேசையருகே வந்த ஒருவர்

“நீங்களும் இண்டைக்கு நிகழ்ச்சி செய்யப் போறீங்களா?”

“ஓம் செய்யப்போறன்” என்றவளைப்

புத்தகங்கள் ஏதும் வெளியிட்டனீரோ?

இல்லையென்றே சொல்ல விரும்பிய

தமிழினி சொல்ல முன்னர்

“ ஓம் ஓம் வெளியிட்டு இருக்கிறாள்” என்றாள் அவள் தோழி கௌசி

“இலங்கையில் நீர் எந்தப் பல்கலைக் கழகம்?”

“அங்க எந்தப் பல்கலைக்கழகத்திலும் படிக் கேல்ல” என்றாள் தமிழினி

“படிக்கேல்லையோ....” என்று ஒரு நக்கலான சிரிப்புடன்

“நான் பிள்ளை பேராதனையில் படிச்சனான் பத்துப்புத்தகம் வெளியிட்டும்விட்டன் நீர் நிறைய வளரவேணும்” என்றவாறு அடுத்த மேசைக்குப் போனார்

“பாரடி எப்படிச் சொல்கிறார் எண்டு. நீ டொக்டர் என்று சொல்லியிருக்கலாந்தானே” என்றாள் கௌசி.

“சும்மா இரு மனுசரை மதிக்காமல் பட்டத்தை மதிக்கிறவங்களுக்கு ஏன் சொல்லவேணும்” என்றாள் தமிழினி. பக்கத்தில் நின்ற ஒரு பெரியவருக்கு அவள் டொக்டர் என்பது காதில் விழுந்து விட்டது. முன்னர் அலட்சி யமாகப்பாரத்தவர் இப்போது

“ஓ உம்மட மருத்துவக்கட்டுரைகள் ஆங்கிலத்தில் பார்த்தமாதிரி இருக்குது” என்றார் பின்னர்

“நான் டொக்டர் ஆனந்தன் என்னைத் தெரியாதவை இருக்கமாட்டினம் இந்தாரும் என்ர விசிட்காட் தொடர்பு கொள்ளும் நிறைய விசயங்கள் சொல்லித்தாறன்”

“நன்றி ஐயா நீங்கள் எந்தக் கொஸ்பிட்டலில் வேலைசெய்கிறீர்கள்”? என்றாள் தமிழினி

“கொழும்பில் வேர்க் பண்ணினான் இங்க இவங்கட கொஸ்பிட்டலில் வேலை செய்யப் பிடிக்கேல்ல ஆனால் எழுதுறன்

எழுத்தாளர் ஆனந்தன் என்றால் உம்மட பேரன்ஸ் இற்கு தெரிஞ்சிருக்கும்” என்று சொல்லிவிட்டு

"இவாதான் டொக்டர் தமிழினி" என வாய் நிறைந்த சிரிப்புடன் மற்றவர்களுக்குக் கூறினார். அதன்பின்னர் பல கைகள் வந்து குலுக்கிக் கொண்டாலும் அவள் அவற்றை மனதளவால் உதறிக் கொண்டாள்.

கௌசி கழிவறைப் பக்கம் போன நேரத்தில் தமிழினி தனியே இருக்க ஒரு பெரியவர் கைகொடுத்து

" நான் கவிஞர் முருகன் இந்த மண்ட பத்திலேயே நீங்கதான் அழகாக நடிகை போல் இருக்கிறீங்க வயசு என்ன? திருமணமானவரா? கணவர் வரேல்லையா" என்று அசடு வழிந்தார். இதெல்லாம் இவ ருக்கெதற்கென சற்றுக் கோபமாகக்

"கல்யாணம் செய்து கனகாலம் குழந் தையளும் இருக்கினம்" என்றாள் தமிழினியின் அக்கினிப் பார்வையில் அந்தக் கவிஞர் முருகன் மறைந்துவிட்டார்.

ஒரு பெரியவர் தமிழினி கௌசியுடன் வந்த மர்ந்து தன் பெயரை ஆறுமுகம் எனச்சொல்லி அறிமுகப்படுத்தினார்.

ஊரில் படித்த பல்கலைக்கழகமோ பட்டமோ எதையும் சொல்லாது தமிழினி கௌசி பற் றியும் பெயரைத்தவிர எதுவும் கேட்காது நோர்வே நாடு, இலக்கியங்கள், தமிழர் வரலாறென பல விடயங்கள் பற்றிச் சாதாரணமாகச் சிலாகித்தார். அந்தச் சிற்று ண்டிகளைவிட அவரது உரையாடல் சுவையாக இருந்தது. இடைவேளையின் பின் கௌசியும் தமிழினியும் அந்தப் பெரியவர் அருகே அமர்ந்தனர். அந்தப் பெரியவர் இலண்டனில் பிரபல பல்கலைக்கழக விரிவுரையாளர் என்பதைத் தமிழினிக்குக் கௌசி காதுக்குள் கிசுகிசுத்தாள். சிறப்புரை ஆற்ற யேர்மனியில் இருந்து வந்த தமிழருவி எனும் புனைபெயர் கொண்ட கோமதி அம்மாவின் உரைகளை யூரியூப்பில் கேட்டுத் தமிழினி உண்மையிலேயே அவர் நாவில் தமிழ் அருவியாகக் கொட்டுகிறது என்று கூறி நேரில் பார்க்கவேண்டும் என்று ஆசைப் பட்டதுண்டு.

" பாரடி இப்போ தமிழ் அருவியாக் கொட்டும்" என்று தமிழினி சொல்லி வாய் மூட அந்த அம்மா

"Good evening Ladies and gentlemen..... " என ஆங்கிலத்தில் தொடங்கினார்

தமிழினி ஏமாற்றத்தில் தன்னை மறந்து " இது தமிழ்க் கலைஞர்களுக்கான விழாத்தானே எதுக்கு இப்ப ஆங்கிலம்" என்று கொஞ்சம் கோபமாகத் தோழியிடம் சத்தமாகவே சொன்னாள் தமிழினி

"ஏன் பிள்ளை உமக்கு இங்கிலிசு விளங் காதா பேசாமல் இரும்" முன்னே இருந்த பெண்மணி கேட்டார். அதற்குப் புன்னகையை மட்டும் பதிலாகக் கொடுத்தாள் தமிழினி. இப்படியே நடந்த நிகழ்ச்சிகளில் பல தமிழி னியின் நேரத்தையும் பணத்தையும் தேவைய ற்றுத் தின்று விட்டதென அவள் அறிவு அவ ளுக்குச் சொல்லிக் கொண்டிருந்தது. சாதாரண மனிதப் பண்பே தெரியாதவர்கள் சமூகத் திற்கும் என் போன்ற இளையோருக்கும் என்ன கற்றுத்தரப் போகிறார்கள் என்ற கேள் விகள அவளைத் துளைத்துக் கொண்டி ருந்தன.

தமிழினி கவிதை படிக்கும் நேரமும் வந்தது. தமிழ்மொழி பற்றி திருப்தியாக எழுதி வந்த கவிதையை அங்கே படிக்கத் தமிழினிக்குப் பிடிக்கவில்லை. இவர்கள் பெரியவர்களெனத் தம்மை எதை வைத்து மதிப்பிடுகிறார்கள். இலக்கிய அறிவு இருப்பதாலும் அல்லது இந்தப் பெரிய பட்டங்களை வைத் திருப்பதாலும் தமக்குத்தாமே பெரியவர்கள் எனும் போர்வையைப் போர்த்திக் கொண்டு போகிறார்களே ஆனால் இந்த இலக்கியமும் பட்டமும் இவர்களைப் பண்படுத்தவில்லையே. பண்படாத கல்வி எதற்கு? பண்படாதவர்கள் பெரியவர்களா?இவர்களிடம் நாம் கற்பதென்ன? இவ்வாறு தனக்குள்ளே வெந்து கொண்டிருந்தாள். ஊரில் இப்படியான எண்ணத்தில் சிலர் வாழ்ந்திருக்கலாம். மனிதன் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருக்கிறான். புலம் பெயர்ந்து இத்தனை காலமாகியும் பிற்போக் குச் சிந்தனைகள் மாறவில்லை என்பது தமிழி னிக்கு மனவருத்தம் தந்தது. மேடையில் திடீரெனத் தனக்குள் தோன்றியதை

“பெரியவர்கள்”எனும் தலைப்பில் கவிதையா கச் சொல்லத் தொடங்கினாள். அவளின் ஒவ்வொரு வரியும் சபையில் அமர்ந்திருந்த பலரை உரித்துக் காட்டின.

“இந்தப் பெட்டையை யார் இங்க கூப்பி ட்டது இவாக்கு கவிதையே தெரியேல்ல.,... வந்திட்டா இங்க” என்று ஒரு குரல் கேட்டது

ஆக்ரோசமாகத் தன் கவிதையைச் சொல்லி மேடையைவிட்டு இறங்கி வெளியேறிக் கொண்டிருந்தாள் தமிழினி.

**“பண்பற்ற மனிதரெல்லாம்**

**பட்டப் போர்வையால்**

**பெரியமனித வேடமிட்டால்**

**பெரியமனிதர் ஆவாரோ”**

என்ற அவளின் இறுதிவரிகள் எதிரொலித்துக் கொண்டேயிருந்தன. அவளும் கௌசியும் வெளியே போய்க் கொண்டிருந்தபோது மண்டபம் சில மணித் துளிகள் மயான அமைதியாக இருந்தது.
அந்தப் பெரியவரின் கைதட்டல் மட்டும்

### தகவல் 4

சொ. விருத்தாசலம் என்று அழைக்கப்பட்ட புதுமைப்பித்தன் அவர்கள் சிறுகதை மன்னன் என அழைக்கப்பட்டார். கேலியும் கிண்டலும் கலந்த சமூ கச்சாடல் இவரைத் தமிழுலகிற்கு அடையாளம் காட்டியது. தமிழ் நாட்டின் மாப்பாசான் எனப் போற்றப்பட்டார். இவரது கதைகளில் கயிற்றரவு, சாபவி மோசனம் , பொன்னனகரம் ஆகியன காலத்தை வென்ற கதைகளாகும்.

### பிரான்ஸ் நாட்டில் சிறுகதை

பிரான்ஸ் நாட்டில் தோன்றிய சிறுகதைகள் உலக அளவிலேயே மிகப் புகழ்பெற்றவை ஆகும். மெரிமீ (Merimee), பால்ஸாக் (Balzac) மாப்பசான; (Maupassant) ஆகிய சிறுகதை ஆசிரியர்கள், ஆங்கில மொழிபெயர்ப்பின் மூலமாக உலகத்தினரால் அறியப்பட்டனர். இவர்களில், மாப்பசான்தான் இந்திய இலங்கை மொழிச் சிறுகதைப் படை ப்பாளிகளுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கின்றார்.

### ரஸ்யாவில் சிறுகதை

ரஸ்யாவில் செகாவ் (Chekkov) துர்கனேவ், கொகொல் (Gogol) ஆகியோர் புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர்கள். இவர்களில் கொகொல் எழுதிய மேலங்கி(Overcoat) புகழ்பெற்ற கதையாகும். இக்கதையை முன்மாதிரியாகக் கொண்டுதான் ர்'யாவில் பலர் சிறுகதை படைத்துள்ளனர். அதைக் கருத்தில் கொண்டு, ”கொகொலின் மேலங்கியுள் இருந்துதான் நாங்கள் எல்லாரும் பிறந்து வந்தோம்” (We all come out from under Gogol’s Overcoat) என்று கூறி, நன்றி பாராட்டுகிறார் துர்கனேவ்.




# கலைஞனின் வீடு..

**தான தந்தன தானனா**

**தான தந்தன தானனா**

**தான தந்தன தான தந்தன**

**தான தந்தன தானனா...**

**எ**ம்மா நாச்சி தூக்கிப் போட்ட காகிதக் கட்டிலிருந்து தூசி விசிறியடித்தது. எல்லாம் செய்தித்தாள்கள். ஒரு பாதி கறையான் அரித்திருந்தது. தூக்கிப்போட்ட கட்டிலிருந்து காகிதப்பூச்சிகள் சிதறி ஓடின.. பழைய கதிரையிலிருந்து தாளம் போட்டுக் கொண்டிருந்த முடியப்புப் புலவர் விடாமல் தும்மத் தொடங்கினார். தும்மிக் களைத்து மேலும் இருந்து தும்ம முடியாமல் எழும்பி நின்று தும்மினார். கண்கள் கலங்கி கண்ணீர் நரை மீசையைக் கடந்து ஓடியது. மூக்கைச்சீறி ஜன்னலால் விசிறினார். மீசையில் பாதி ஜன்னல் கம்பியில் பாதியென தொங்கிகொண்டிருந்தது. மீசையைப் புறங்கையால் துடைத்துக்கொண்டே எம்மாவைப் பார்த்தார். எம்மா நாச்சி அதைக் கண்டுவிட்டாள். “ஜன்னலால விசிறாதயுமெண்டா கேட்டால்லா... உம்மைக் கட்டினதுக்கு வீட்டக் கழுவினதும் ஜன்னலைச் துடச்சதும் தான் ஆச்சு. நல்ல சோறுண்டா... கறியுண்டா... என்று அப்படியே ராகமெடுத்து ஒப்பாரியாக்கினாள் ”

வயித்துல பெத்ததும் தான் வழியிலயே போயிட்டு.... கழுத்துல கட்டினதுவும் கடனுக்கு போயிட்டு..... ஏ மரியா.... மாதோட்டத் தாயே..... மனசென்டு ஒண்டிருந்தா.... கண்ணு திறப்பாயே.... ”

“அரசாங்கம் கலைஞனுக்கு வீடு கொடுக்குதாம். பரிசு வாங்கின காகிதமெல்லாம் கறையான் திண்டு வளந்திருக்கே.... இதுகளச் சீராக்கிக்

கொண்டு போய்க் காட்டினா வீடு தர மாட்டானா.... பொலப்பு இல்லாதவன் பணிஞ்சு போனா குத்தமில்ல புலவரே.... வானம் பார்த்த வீடா இருக்கே...வரப்புக் கட்டுறன் வீட்டுக்குள்ள... "

முடியப்பு மனசுக்குள்ளயே சிரித்துக் கொண்டார். இந்த உலகத்தில ரொம்ப பிடிச்சது யாருன்னு கேட்டா "எம்மா நாச்சி"ன்னு தான் சொல்லுவார். எம்மாக்கு ஐம்பத்தெட்டு. முடியப்பருக்கு அறுவது. காட்டு மரம் போல நல்ல தேகம். கண்ணாடி போடாமலே சின்ன எழுத்துக்களைக் கூட வாசித்து விடுவார். புலவர் எண்டு சொல்லுற அளவுக்கு அவர் பல்கலைக்கழகம் எல்லாம் போய்ப் படிக்கவில்லை. ஆனால் திருவிழாக் கூத்து போடவேண்டுமென்றால் முடியப்பர் இல்லாமல் எதுவும் ஆகாது. ஒரு துறைன்னு இல்ல, கவிதை, சிறுகதை, நாவல், நாட்டார் பாடல்னு எல்லாப் பக்கமும் அவருக்கு ஆகும். காலத்துக்கு ஏற்றது போல கூத்துப் பாட்டு எழுதுறதும், எழுதுறதுகளை திருத்துறதுலயும் தாளம் தப்பாது. முடியப்புக்கு பதினெட்டு வயது இருக்கும் போது தான் எம்மாவைப் பார்த்தார். விவசாய வேலை முடிஞ்சா கூத்துல பாட்டுக்கட்டுறது புலவருக்கு வேலை. எம்மா பேருக்கேத்தது போல நல்ல வெள்ளக்காறி மாதிரி இருந்தா... கோரஸ்ல ஒரு ஓரமா மிரண்ட மான்குட்டிமாதிரி எம்மா நின்றதைப் பாத்ததுமே புலவருக்கு பிடித்துக் கொண்டது. திருவிழாவுக்குக் கூத்துப் பார்க்க மாடு கட்டிவந்த எம்மாவுக்கு அந்தப் பத்துநாள் கூத்துலயும், பகலில் நடக்கும் கூத்துப் பாசறையிலும் முடியப்பரைப் பிடித்துப் போய் விட்டது. திருவிழா முடிஞ்சு எல்லாரும் வண்டியைக் கட்டும் போது எம்மா முடியப்புவின் விரல்களைப் பிடித்துக் கொண்டு நின்று விட்டாள்.

**ஐயா... அரசாங்க சுற்று நிருபம் வாசிச்சீங்களா...? அது என்ன சொல்லு தெண்டா வறுமையில வாடுற கலைஞரா இருக்கனும். 60 வயசுக்கு உள்ள இருக்கனும்.... 20 வருசத்துக்கு மேல கலைத்துறை அனுபவம் இருக் கனும். உங்கட பேருல ஒரு காணியோ வீடோ இருக்கக் கூடாது... அது சரி தம்பி... 60 வயசு வரைக்கும் இருக்க ஒரு காணியில்லாமயா இருப்போம். வயல்லையும் வெய்யில்லயும் காஞ்சு 10 பேச் காணி வேண்டி வச்சிருக்கிறன். வீடு கட்டுற அளவுல தான் வசதி அமையல. மத்தபடி மூணு வேள நாச்சியும் நானும் வயித்த அது சரி தம்பி... 60 வயசு வரைக்கும் இருக்க ஒரு காணியில்லாமயா இருப்போம். வயல்லையும் வெய்யில்லயும் காஞ்சு 10 பேச் காணி வேண்டி வச்சிருக்கிறன். வீடு கட்டுற அளவுல தான் வசதி அமையல. மத்தபடி மூணு வேள நாச்சியும் நானும் வயித்த நிறப்புற அளவுல வசதியாத் தான் இருக்கிறோம்.**

**ஐயாட கதையில ஞாயம் இருக்கு. அது எனக்கு தெரியும்... அரசாங்கத்துக்கும் தெரியனும் தானே.**

"யேய்... நாச்சி... எம்மாக்கெளவி... சம்பவம் நடந்து நாப்பது வருசம் ஆயிருக்கும்ல" சின்னச் சிரிப்போடு முடியப்பர் சீண்டினார். இப்படி ஏதாவது இடையிடையே கேட்டு சீண்டுவது முடியப்புவிற்கு பிடிக்கும். நாச்சி

க்கும் பழசை நினைக்கிறதுல ஒரு விருப்பம் இருக்கத்தான் செய்தது.

“அதெ எதுக்கு இப்ப நினைக்குறீரு. அறு பதாங் கல்யாண ஆசையா... பெத்த புள்ள இருந்திருந்தா ஒப்பாரிக்கு விட்டிருக்க மாட்டானே.. நீரும் தான் கட்டி அலையுறீரே... சிஸ்யக் கோடிகள.... செய்வானுகளா.... ஆசான்னு வாயுக்குள்ளயாவது சொல்லுவா னுகளா... ”

“எவனும் என்னத்துக்குச் சொல்லனும்... அரசாங்கம் தான் சேவைக்கு கலாபூஸணம் தந்திருக்கே. நாவலுக்கு சாகித்தியம் தந்தி ருக்கே” என்று ஓலைவீட்டின் மூலையைப் பார்த்தார். கிடுகுகளுக்கு இடையிடையே நிறையப் பதக்கங்கள் சொருகிக் கிடந்தன. கூரையின் வழியாக வானம் விரிந்து கிடந்தது.

“எல்லாம் வெங்கலம். இரும்பா இருந்தாக் கூட அவசரத்துக்கு விக்கலாம். மாலை யெல்லாம் மணி கழண்டிருச்செ.. பொன்னா டயப் பாரு... தலைய மூடினா கால் குளி ருது. பொறந்த நாள்னு வந்த குட்டிக்கு பாவாட தக்கட்டும்னு நேத்து ரெண்டக் குடுத்துவிட்டன்...”

“குடு... குடு... வச்சி வச்சி பாச்சான் மணமடிக்குது. இறைச்சாத் தானெ ஊறும்..” கதைத்துக் கொண்டே முடியப்பர் காகிதக் கட்டிலிருந்து கலைத்துறை ஆவணங்களையும், செய்தித் தாள் ஆதாரங்களையும் வரி சைப்படுத்திக் கொண்டிருந்தார்.

“எங்க ஊறிச்சு... சாகித்ய ரெத்னாவை எவனோ கேட்டான்னு எறச்சீரு.... 10 வருசம் ஆச்சு... மறுக்கா ஊறிச்சா... ” எம்மாவின் குரலில் வேதனை கலந்திருந்தது.

தொடர்ச்சியாகக் கூத்து நடந்த காலங்களில் எம்மா முடியப்பரோடு விரல்களைக் கோர்த்துக் கொண்டு பாட்டுக் கட்டப் போவாள். முடியப்பரோடு போட்டிக்கு பாடும் அளவில் எம்மா தேர்ச்சி பெற்றிருந்தாள்.

“வான் நிறைந்த முகிலம்மா.... வளம் கொழிக்கும் மழையம்மா... பேதமின்றி அன்பு காட்டும்... கருணையவள் மொழியம்மா....” என அறுவடைக்கும் கூத்துத் தொடங்கும் காலங்களிலும் எம்மா மாதாவை நினைத்துக் குரலை உயர்த்தி உள்ளத்தால் உருகிப் பாடினால் தான் வேலைகள் தொடங்கும்....

முடியப்பர் பழசை நினைத்து மனசுக்குள் சிரித்து கொண்டே காகிதங்களை வரிசையாகக் கட்டினார். நேரத்துக்கே வெளிக்கிட்டாத் தான் கந்தோருக்குப் போய் உரியவர்களைச் சந்திக்கலாம் என நினைத்துக் கொண்டார். கோப்பியை ஊத்திக் குடித்தார். எம்மாவுக்கும் ஒரு குவளைக் கோப்பி வைத்தார். எம்மா வுக்குக் கோப்பி குடிக்கப் பிடிக்கும். ஆனால் ஊத்தப் பிடிக்காது. முதலிலிருந்தே அப்படி ஆகிவிட்டது. பலபல நினைப்புகளோடு பஸ் ஏறியவருக்கு இறங்க வேண்டிய இடம் வந்தது கூடத் தெரி யவில்லை. இடையில் கொஞ்சம் நித்திரை வேற.... கண்ணைக் கசக்கிக் கொண்டே தடுமாறி இறங்கிக் கந்தோரை நோக்கி நடந்தார்.

கந்தோரில் இவருக்கு முன்னமே நிறைய ஆட்கள் நின்றார்கள். அவருடைய வயதில்

யாரும் இல்லை. கொஞ்சம் வெட்கமாகவும் கிடந்தது. எல்லாம் இளம் ஆட்கள்.

முன்னால் நின்ற இளைஞனிடம் “தம்பி இங்க கலைஞர்களுக்கு வீட்டுத் திட்டம் குடுக்கிறது உண்மையா” என்று கேட்டார். அவன் தன் வீட்டிலேயே பாதியைக் கேட்டது போல முகத்தைச் சுழித்தான். “கலைஞர்களுக்குக் குடுக்கப் போறாங்க எண்டு தான் கதை... அதான் வந்திருக்கிறன் ... நீங்க எந்தத் துறையில கலைஞர்”

”ஒரு துறையெண்டு இல்லையப்பன்.... கொஞ்சம் ஆவணங்கள் கொண்டு வந்தன் ... காட்டிப் பாப்பமெண்டு...”

கதைத்துக்கொண்டு நிற்கும் போதே முன்னால் இருந்து அழைப்பு வந்தது... “அந்த வயசான ஐயாவைக் கொஞ்சம் விடுங்கோ.... வயோதிபருக்கு வரிசையில முன்னுரிமை குடுக்கனும்” என்று வீட்டுத் திட்ட அலுவலர் சத்தம் போட முன்னால் விட்டார்கள்.

ஐயாட பேர் என்ன... எந்த இடம்? சொன்னார்.. ஐயா... ஆவணம் எல்லாம் எடுங்கோ.... காட்டினார். ஐயா... அரசாங்க சுற்று நிருபம் வாசிச்சீங்களா...? அது என்ன சொல்லுதெண்டா வறுமையில வாடுற கலைஞரா இருக்கனும். 60 வயசுக்கு உள்ள இருக்கனும்.... 20 வருசத்துக்கு மேல கலைத்துறை அனுபவம் இருக்கனும். உங்கட பேருல ஒரு காணியோ வீடோ இருக்கக் கூடாது... அது சரி தம்பி... 60 வயசு வரைக்கும் இருக்க ஒரு காணியில் லாமயா இருப்போம். வயல்லையும் வெய் யில்லயும் காஞ்சு 10 பேச் காணி வேண்டி வச்சிருக்கிறன். வீடு கட்டுற அளவுல தான் வசதி அமையல. மத்தபடி மூணுவேள நாச்சியும் நானும் வயித்த நிறப்புற அளவுல வசதியாத் தான் இருக்கிறோம்.

ஐயாட கதையில ஞாயம் இருக்கு. அது எனக்கு தெரியும்... அரசாங்கத்துக்கும் தெரி யனும் தானே. இந்த ஆவணங்களும் ஒண்டும் ஒழுங்கா இல்ல. இந்தப் படத்துல நிக்கிறது நீங்களா எண்டே தெரியல... இன்னொரு முறை பாப்போம்... நீங்க வெயிலேற முதல் வீட்ட போயிருங்க... முடியப்பருக்குக் கண்கள் கனத்தன... வீடில்லை என்பது ஒரு விசயமில்லை. இதைப்போல் எத்தனை எத்தனை புறக்கணிப்புகள் முடியப்பருக்கு. எம்மா கிளவிக்கு என்ன பதில் சொல்வது என்பது தான் பெரிய பிரச்சினை யாக இருந்தது. உடனே வீட்டிற்கு செல்வது பற்றிய சாத்தியத்தை யோசித்துக்கொண்டார். அது ஏலாது. இருட்டவிட்டு கடைசி பஸ் எடுத்தால் போய் படுத்துவிடலாம் என்று யோசித்துக் கொண்டே மரநிழலில் சாய்ந்தார். நேரம் செல்லச் செல்ல கூட்டம் அதிகரித்தது. அவ்வளவு பேரும் கலைஞர்கள் என தெரி ந்தபோது முடியப்பருக்குப் பரவசமாக இரு ந்தது. கூத்துப் பழக்க ஆள் தேவையெண்டு கூப்பிட்டால் கூட முன்பு போல இப்போது ஆக்கள் வருவதில்லை என்று கவலைப் பட்டிருக்கிறார். மத்தியானத்திற்கு மேல் இன்னும் பலர் வந்தார்கள். அவர்கள் கந்தோர் களில் லீவு போட்டுவிட்டு வந்தவர்கள். பலருக்கு முடியப்பரைத் தெரிந்திருந்தது. ஒராள் சாப்பிடப் போவோம் எனக்கூட்டிப

போனார். ஒராள் கைகழுவத் தண்ணீர் கொடுத்தார். இப்போது முடியப்பரைச் சுற்றி ஆறு ஏழு கலைஞர்கள் இருந்து கதைத்தார்கள். அவருடைய நாடகங்களில் சிப்பந்தியாக நின்று சாமரம் வீசியவனும் ராசா வேசம் கட்டினவனும் கூட வீட்டுத்திட்டத்திற்காக வந்திருந்தார்கள். கூடிக்கதைக்க நல்ல வாய் ப்பாக இருந்தது போல பலதையும் சிரித்து சிரித்துக் கதைத்தார்கள். கலைஞர் வீட்டுத்திட்ட பரிதாபங்களைப் பற்றிய பகடி களாக நிை-றயச் சொன்னார்கள். மேளம் அடிக்கும் குட்டியான் சொன்னான்... அப்பு... அண்டக்கி கூட்டம் எண்டு வந்து பாத்தன். வழமைக்கு மாறா ஏகப்பட்ட கூட்டம். கூட்டம் முடியறப்போ தான் எங்களுக்கே வீட்டுத் திட்டம் பத்தித் தெரியும். முடிஞ்சு வெளியில் வரும் போது அவசரமா வந்த பொடியன் கேட்டான்....

“கலைஞர் கூட்டம் முடிஞ்சுதா ஜி”

“ஓம் நானும் கலைஞன் தான் ஜி... வர கொஞ்சம் லேட்டாயிட்டு..”

“எந்த அமைப்பு ஜி நீங்க...?” அமைப்பாப் பதிவு செய்யத்தான் யோசிச்சிட்டு இருக்கிறன் ... இப்ப நான் தனியா தான் பண்ணிட்டி ருக்கன் ஜி...”

“என்ன பண்ணிட்டிருக்கிங்க...?”

“4,5 டிக்டொக் வீடியோ போட்டிருக்கன் ஜி... வீட்டுத்திட்டம் கிடைக்குமோ தெரியலைஜி...”

“கட்டாயம் கிடைக்கும் ஜி... முயற்சியை மட்டும் கைவிட்றாதிங்க..கலைஞர்ஜி... அமைப்பை பதிவு செய்யும் போது தலைவர் செயலாளர் தேவைப்பட்டா சொல்லுங்க... கைவசம் ஒரு குழு இருக்கு ... வாழ்த்துக்கள் ஜி....” அப்படின்னு சொல்லி அனுப்பிட்டேன்னு குட்டியான் சொல்லி முடிக்க முடியப்பரும் வாய்விட்டுச் சிரித்தார். குட்டியானின் முறை வர அவன் வீட்டுத்திட்ட அலுவலரைப் பார்க்கப் போனான். முடியப்பர் தேத்தண்ணி ஒன்றைக் குடித்துக்கொண்டே கதைத்துக் கொண்டிருந்தார்.

திரும்பிவந்த குட்டியானின் முகம் தொங்கிக் கிடந்தது.

“அப்பு... ஆவணம் ஒண்டும் காணாதாம்... ஏதாவது ரெண்டு மூணு படம் இருந்தா கிடைக்கலாமாம்” என்றான்...முடியப்பர் கையிலிருந்த காகிதக் கட்டை அவனிடம் போட்டார்.

“இதுல உண்ட படம் ரெண்டு மூணு பாத்தன்... சவுரிக்கும், ராசாக்கும் தேவையானது கிடந்தாலும் எடுத்துக்குடு.... எறக்கிறது தானேடா ஊறும்... நான் மெல்லப் போறன்... வீடுகட்டி முடிய வாங்கடாப்பு. ஏதாவது நாடகம் போடுவம்” என்றபடி முடியப்பர் எழும்பி நடந்தார். நாச்சியாவின் பாடல்கள் காதுக்குள் அலையடித்தன.

↔

## தகவல் 5

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வங்காள எழுத்தாளர் இரவீந்திரநாத் தாகூர் எழுதிய 11 சிறுகதைகளை மொழி பெயர்த்து வெளியிட்டார். கல்கி அவர்கள் சிறுகதைத் துறையில் கால் வைத்து புதினங்களால் புகழடைந்து கல்கி இதழைத் தொடங்கினார். இவரது கதைகளில் கணையாளியின் கனவு , திருடன் மகன் திருடன், வீணை பவானி ஆகிய கதைகள் குறிப்பிடத்தக்கன.

# சுமைதாங்கி..

K. சிவரமணி



மலர் மனதோடு மழைக்காலம் என பாடியபடி சமையல் செய்து கொண்டிருந்தாள். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த பார்வதி மெல்ல எழுந்து

“விடும்மா விடு….நான் செய்கிறேன்”

“இல்லம்மா நான் முடித்து வைத்துவிட்டு வேலைக்குக் கிளம்புகிறேன்”

“மலர் நீ கிளம்பு மா. நான் என்ன படுக்கையிலா இருக்கிறன். சாதாரண இடுப்பு வலி தானே. அதுகூட நீ போட்டுவிட்ட மருந்தில் சுகம்மாயிட்டுது.”

“நீ வேலைக்கும் போய் இங்கையும் கஸ்ரப்பட ணுமா சொல்”

“பரவாயில்லம்மா தம்பி எழும்பினால் சொல்லுங்க காலேஜ் போயிட்டு வார வழியில கரன்ட் பில் கட்டச் சொல்லுங்க. பணம் வைச்சிருக்கன் சரியா” “சரிம்மா.. மலர்” “அம்மா அண்ணன் ஏதாவது பணம் தந்தாரா இம்மாதச் செலவிற்கு”

“எங்கம்மா நேற்று நானா மருந்திற்கு 500 கேட்டேன் அதுகூட இல்லை. நானே இம்மாதம் என் செலவிற்கு என்ன

> **“பார்வதிக்குக் கோபம் தலைக்கேறியது . ஏனாம் ஒரு பொம்மனாட்டி எட்டு மணிவரை தூங்கினால் தலையிடி இல்ல எல்லாம்வரும்.”**
>
> **“ஏன் ஏன் இப்படி கரிச்சுகொட்டுறிங்க.”**
>
> **பின்ன அவள் வேலைக்கு போவாளா சமைப்பாளா வீட்டை என்னை பார்ப்பாளா. நீ என்ன இந்த குடும்பத்தை தூக்கியா சுமக்கிறாய்”**
>
> **“அவளக் கட்டினதில் இருந்து மகுடிக்கு ஆடும் பாம்பாய் நீயும்.. சரி விடு என் கோப த்தை கிளறாம ஆகுற வேலையைப் பார் புரிந்ததா”**
>
> **“உங்களுக்கு நான் சந்தோசமாய் இருந்தால் பிடிக்காதே உடனே மோள் புராணம் தான்.”**

செய்றது என தெரியவில்லை'' என்கிறான்.

''ஏனம்மா சம்பளம் எடுத்திருப்பாரே''

''ஆமாம் எடுத்தாச்சு போல. உன் அண்ணியோட போனான் இரவு வரும் போது நிறைய பார்சல்கள் நிறைய

சொப்பிங் அது இதென பேச்சு காதில விழுந்தது.''

''ஒரு மரியாதைக்கு கூட என்னிடம் சொல்லல மா. அதுகூட பரவாயில்லை சாப்பாடு எடுத்து வைத்திருக்கா மலர் நீங்க போட்டுச் சாப்பிடுங்க என்றேன்.''

''ஒன்றும் தேவையில்லை நாங்க சாப்பிட்டோம் தினமும் உப்பிபோன பராட்டாபருப்பு.அதான் அவரோட நான் போனேன்''

''வாங்க சரன் என அண்ணாவ இழுத்துக் கொண்டு ரூமுக்க போனவ தான் இன்னும் வரல''

''சரிம்மா கவலைப்படாத நான் இருக்கிறன் தானே''

''நீ பெண் பிள்ளையடா முப்பது வயதாகிறது உனக்கு ஒரு வாழ்க்கை வேண்டாமா அதை நான் பார்க்க மாட்டேனா''

''இவன் சரன் மூத்தபிள்ளை ஒழுங்கா குடும்பத்த பார்த்தால் நீ ஏன் கஸ்டப்படனும் சொல்''

''இல்லம்மா இல்ல... கலங்காதே. தம்பி தங்கை படித்து நிலையாகாமல் நான் உன் னைவிட்டு எங்கேயும் போகமாட்டேன்.''

''ஏதோ நல்லா உன் அப்பா படிக்கவைத்தார் .இருக்க ஒரு வீட்டையும கட்டி வைத்தார் நிம்மதியா வாழ்க்கை போகுது உன்னால் தான் அழுகிறேன்.''

''சரிம்மா சரி புலம்பாதீங்க இதுவும் மாறும்.'' ''என்னடி மலர் காலையில் கதையளக்கிற ஒரு ரீ குடிக்கமுடியல ஊத்தி கொண்டுவந்து தாரதிற்கு என்ன கேடு''

''இல்ல அண்ணா நான் ஊத்தி பிளாஸ்க்கில வைத்திருக்கன் நீங்க எழும்பல''

''சரிசரி ரீயைக் கொண்டே அண்ணிக்கு குடு தலை இடி என இருக்கிறாள்''

''ஏன் சரி இதோ கொடுக்கிறன்'' என அவள் அகன்றாள்

''பார்வதிக்குக் கோபம் தலைக்கேறியது . ஏனாம் ஒரு பொம்மனாட்டி எட்டுமணிவரை தூங்கினால் தலையிடி இல்ல எல்லாம்வரும்.''

''ஏன் ஏன் இப்படி கரிச்சுகொட்டுறிங்க.''

பின்ன அவள் வேலைக்கு போவாளா சமை ப்பாளா வீட்டை என்னை பார்ப்பாளா. நீ என்ன இந்த குடும்பத்தை தூக்கியா சுமக் கிறாய்''

''அவளக் கட்டினதில் இருந்து மகுடிக்கு ஆடும் பாம்பாய் நீயும்.. சரி விடு என் கோப த்தை கிளறாம ஆகுற வேலையைப் பார் புரிந்ததா''

''உங்களுக்கு நான் சந்தோசமாய் இருந்தால் பிடிக்காதே உடனே மோள் புராணம் தான்.''

''அப்போது மலர் ரீயுடன் வந்து அண்ணா இந்தா என நீட்டினாள் கொண்டே குடு அண்ணிக்கும்''

''ம்ம்'' என முறைப்பாக வேண்டி சென்றான்

இதைப்பார்த்த தாயுள்ளம் வெம்பியது "ஒன்னே ஒன்னு என என்னமாய்ப் பார்த்துப் பார்த்து வளர்த்தேன் ஆனால் இவன் பெண் டாட்டி தான் உலகம் என குடும்பத்தையே மறந்து திரியுறானே."

"ஆண்டவா என் செய்வேன் இந்த பிள்ள ங்களக் கரையேத்த" தாயின் மனவே தனையை அறிந்து மனதில் அழுதாள் மலர்.

"சரி சரி அழாதேம்மா நான் இருக்கிறேன் இப்ப வேலைக்கு நேரமாச்சு வருகிறேன்" எனக் கிளம்பினாள். வேலையில் மனம் ஒட்டவில்லை இந்த மாதம் அண்ணா தரவி ல்லையானால் ரொம்பச் சிரமம் தம்பி தங்கை கல்லூரி மாதாந்தப்பணம் கட்ட வேண்டும். வீட்டுச்செலவு. என்ன செய்வது மேலதிக பணமும் செலவாயிடுச்சு. இவள் யோசனை-யைக் கவனித்த தோழி யசோ. "என்னாச்சு மலர் இப்படி டல்லா இப்படி நீ இருக்கமாட் டியே எனனாச்சு சொல்லு"

"ஏதுமில்லடி சும்மாதான்"
சும்மா சொல்லுப்பா என்னாச்சு நான் ஏதாவது உதவ முடியுமா எனப் பார்க்கிறன்"
"உதவிக்காக இல்ல யசோ சொன்னா மனப் பாரம் குறையுமே அதற்காகச் சொல்கிறேன்."
"சொல்லு பா …"

"இல்ல இந்த மாதம் இன்னும் நெருக்கடி . தம்பி தங்கை படிப்புச் செலவு அது இதென"
"ஏன் அது எப்பவும் உனக்கு இருக்கிறது தானே"
"ஓம் ஓம் ஆனால் அண்ணன் தாரபடியால் சமாளிப்பேன். கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்து இப்ப இல்லையே என்டுட்டார் என்ன செய்யச் சொல்லுடி"
"போனமாதம் அம்மாட வைத்திய செல விற்காய் காப்பையும் விற்றுவிட்டேன் இப்ப???"

தலைசுற்றுது தலையை பிடித்தபடி மலர் தலை குனிந்தாள்"

"சரி மலர் கவலைப்படாதே ஏதோ வழி கிடைக்கும். என் வீட்டு நிலமையும் உனக்கு தெரியும். எல்லாம் தீர்ந்து மாத இறுதியில் ததிக்கன தோம் தான்"
"தெரியும் யசோ என்பாடு நீ யென்ன செய் வாய் விடு"
"பொறு பொறு என் ஆருயிர்த் தோழி நீ உனக்காக இதுகூடச் செய்ய மாடடேனா என்ன? ஆனால் என்ன செய்யலாம் எனத்தான் கவலை"

"இன்றும் நீயே என் ஆறுதல் உன் கவலையை நான் எப்படி பார்ப்பேன் சொல்"

"பொறு …மலர் என் புகுந்த வீட்டுக்கு தெரி யாமல் இந்தக் காப்பைத் தாறன் அடைவு வைத்துப் பணத்தை எடு வரும் மாதம் திருப் புவோம்."

"வேண்டாம் வேண்டாம் அது மரி யாதை இல்ல"
"இல்ல நான் சொல்றதக் கேளு நீ வை எனக்குசரி உனக்குசரி பணம் கிடைத்ததும் எடுப்பம் சரியா"

"சரி சொல்லாம விடுவியா சொல்."

மதிய உணவு நேரம் இருவரும் தனியார் வங்கி சென்று பணத்தைப் பெற்றுக் கொண் டனர். மாலை வீடு திரும்புகிறாள் மலர். முன்

வரவேற்பறையில் அம்மா தம்பி தங்கை அண்ணன் என உட்கார்ந்திருந்தனர். ஒவ்வொருவர் முகபாவங்களைப் பார்த்தால் ஏதோ நடந்திருப்பது புரிகிறது. ஆனால் என்னவென புரியவில்லை.

“அம்மா அம்மா என்னாச்சு?”

“ஒன்றுமில்லை உன் தம்பி கவின்
பாடசாலைக் கட்டணம் கட்டவில்லை என
திருப்பி அனுப்பிட்டாங்க. அதான் அவமானமாய் இருக்கு என அழுகிறான்.”

“நான் என்ன செய்வது நீ என்ன செய்வது.
படிக்க வைத்து பார்ப்பான் கை நிறைய
சம்பாதிக்கிறான் எனப் பார்த்தால் இவன்
சரனும் இப்படிப் பன்றான்.”

“சரிம்மா விடு”

“பார் இவ்வளவு துன்பத்தைப் பார்த்தும்
கல்லுளி மங்கன் மாதிரி நிற்கிறத. உவன்
சரன் சரியா இருந்தா நமக்கேன இந்த
கஸ்டம். சொல்”

“ஆமா ஆமா இதே புராணத்தைப் பாடுங்க
எனக்கு மட்டும் செலவழித்தேன் என்டுங்க.”

“அதான் ஒரு தீர்வா அந்தக் கனடா வரனை
மலருக்கு முடிப்பம் என்டோம் நீங்க கேட்கல”

“ஆமா பெரிய வரன் பெரியவராய் பார்த்தாய்
போ என் பெண்ணைப் பாழுங்கிணற்றில்
தள்ள நான் தயாரில்லை போ”

“உங்களுக்கு நல்லது சொன்னாப் புரியாதே
நான் உங்க எல்லோர் நல்லதிற்கும் சொன்னேன்”

“தம்பி எகிறினான். அக்காவ அப்படி யாருக்கும் செய்து வைக்கத் தேவையில்லை
நான் படிப்பை முடித்துவிட்டுப் பார்ப்பேன்”

“ஆமா இவர் கிழித்தார்”

“கவின் விடு வா ரீ போட்டுத்தாரன். நாளை
நீ போகலாம் கல்லூரிக்கு”

“இப்படியே எல்லாரையும் சமாளி உன்னை
எண்ணிப் பார்க்க யாருமில்லை”

இவ்வளவையும் உள்ளேயிருந்து கவனித்துக் கொண்டிருந்த சரன் மனைவி பாய்ந்து வந்து மதனின் கைகளைப் பிடித்து இழுத்துச் சென்றாள்.

“உங்களுக்கு ஏன் இந்த வேலை. இவையளுக்கு செய்றது வீண் வாங்க வாங்க என

இதனைப் பார்த்து கண் கலங்கிய தாயை
அணைத்து ஆறுதல் படுத்திய மலர்
உள்ளே சென்றாள்.

பின் தொடர்ந்த தம்பி தங்கையிடம்
நாளை பணத்தைக் கட்டுங்கள் நான்
கொண்டு வந்துள்ளேன் பணத்தை என
கொடுத்தாள். கவனமாக வைத்திருந்து
கட்டுங்க இது யசோவின் உதவியால் பெற்ற
பணம் . இதனைக் கேட்டுக் கொண்டு
உள்ளே வந்த தாய்

“ஏம்மா அந்தப் பிள்ளையா உதவிச்சு பாவம்
அவளும்.”

“ஆமாம் அம்மா அவள் பிரச்சனையை முதல்
தீர்க்கணும் நான்.”

இதனை ஒட்டுக் கேட்ட சரனும் மனைவியும்
பொருமினர்.

“இங்க பாருங்க பணம் கொடுக்கிறத நிற்ப்பாட்டினா ஏலாம அந்த கல்யாணத்திற்கு ஓம்

படுவினம் என நினைத்தேன். இவர்கள் என் னென்றா சமாளிக்கிறாங்களே''

விடக்கூடாது எப்படியாவது மலரை இதுக்கு சம்மதிக்க வைத்தால் நாம் கோடீஸ்வரர் ஆகலாம் அதவிட்டுட்டு இங்க தானம் அவ வாழ்க்கை. அம்மா இருக்கு மட்டும் நாம அடக்கித் தான் வாசிக்கனும்''

''புரியுதுங்க ஆனால் அந்தச் சம்பந்தம் தட்டிப் போனால்''

''போகாது மலரைக் கண்டபடியால் தான் மோகங் கொண்டு அலையுது கருமம் கட்டையில போறவன்''

''அப்படிச் சொல்லாதீங்க பணங்காய்ச்சி மரம் ஆமா அதற்காகத்தானே நீ சொன்னவற்றிக்கு ஒத்துக்கொண்டேன்.'' இதனை வெளியே வந்த பார்வதி கேட்டதும் தலைசுற்றி ''அடப்பாவிகளா'' எனத் தலை சுற்றிச் சுவரைப் பிடித்தபடி சரிந்து விட்டாள். தாயின் சத்தம் கேட்டு ஓடிவந்த யாவரும் அம்மா..அம்மா எனத் தாங்கிக் கதிரையில் இருக்க வைத்துத் தண்ணீர் கொடுத்தனர்.''

தாய் சற்று ஆசுவாசப் படுத்திக் கொண்டு எழுந்தார் .

''மலர் மலர் எனத் தேம்பி தேம்பி அழுதபடி பாரம்மா இந்தப் பாவிகளை உன்னை விற்று தாங்கள் சுகமாக வாழ யோசிக்கிறார்கள்.'' ''என்னம்மா சொல்றிங்க?''

''ஆமா இவங்க பேசினதை நான் கேட்டேன். மூத்தபிள்ளை என இவ்வளவு நாள் பொறு த்தேன் எனி முடியாது இங்கிருந்து போகச் சொல்''

''ஆமாம்மா இனி உவன் இங்க இருந்தா தூங்கக் கூட முடியாது.''

''இதனைப் பார்த்த சரன் தனத்திற்கு தம் சாயம் வெளுத்ததால் வெட்கம் பிடுங்கி தின்றது அதையும் சமாளித்து

''உங்களுக்கு நல்லது நினைச்சா உப்படிதான் சொல்வீங்க''
''சரி இந்த வீட்ட விற்று காசத்தாங்க''

''என்ன வீடா?''

''ஆமா இது எல்லோருக்கும் தானே''

''ஆனால் பரம்பரைச்சொத்து இல்ல. உன் அப்பா உழைச்சுக் கட்டினது. இங்கபார் நீ மூத்தபிள்ளை என கல்யாணச் செலவே வீண். இதில மூன்று பிள்ளைகளோட நான் தெரு வில இறங்குவதா''

''அது எனக்கு தெரியாது. நீங்க வீட்ட வித்து நாலாய்ப் பிரியுங்க என் பங்கத் தாங்க நான் என் மனைவியுடன் போறன்.''

''அடி செருப்பால பிள்ளை பிள்ளை என பார்த்தால் பெற்றவளுக்கும் சகோதரங்க ளுக்கும் கொள்ளி வைக்கப் பார்க்கிற''

''உனக்கு இனி என் மனசிலோ வீட் டிலோ இடம் இல்லை போயிடு இப்பவே''

''போ போ என்டா நான் கேட்டது கேட்டது தான் இல்ல சட்டப்படி பார்க்கிறேன்.''

''ஓ இதெல்லாம் உன் மனைவி போட்ட தூபமோ''

''மலர் இங்க வாம்மா இதுகள் அடங்கா துகள். நீ போய் என் அலுமாரியில் வீட்டு ப்பத்திர நகல் ஒன்று உள்ளது எடுத்து

வாம்மா.''

''சரிம்மா''எனப் போய் எடுத்து வந்தாள்.

''இந்தா இதைப்படி அப்பா எழுதினது மனுசனின் தீர்கதரிசனம் எங்களைக் காப்பாற்றுது''

''இதில் என் இறுதி மூச்சுவரை இதை யாரும் விற்கமுடியாது. என் இளையபிள்ளை கவினுக்கே வீடு உரிமை.''

''இதென்ன அநியாயம் நான் என்ன வேற்று பிள்ளையா?''

''எல்லோரும் செய்வதைத்தான் அப்பாவும் செய்துள்ளார் இளைய பிள்ளைக்கே இவ்வுரிமை. இதில் பாத்தியதை உனக்கில்லை. உன் சாயம் வெளுத்து விட்டது புறப்படு.''

தலையைச் சிலுப்பிய மருமகள் பின்னே மகனும் செல்வதைக் கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்தாள் பார்வதி.

## தகவல் 6

**அம்பை** என்கின்ற **சி.எஸ் லட்சுமி** தமிழின் சிறந்த பெண் படைப்பாளிகளுள் ஒருவர். 1960 களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர். பல பெண் படைப்பாளிகள் தொடச் சிரமப்படும் விடயங்களை சாதாரணமாகத் தொட்டுச் சென்றவர். இவரின் முழுச் சிறுகதைத் தொகுப்பை காலச்சுவடு வெளியிட்டுள்ளது. அம்மா ஒரு கொலை செய்தாள், வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, காட்டில் ஒரு மான் சிறகுகள் முறியும், கருப்புக் குதிரைச் சதுக்கம் ஆதியன சிறந்த சிறுகதைகளாகும்


## கதை எழுதும் மரபு

'எழுத்து மரபு' ஏற்பட்ட போது, கதைகள் பெரிய எழுத்துக் கதைகளாக எழுதப்பட்டன. பின்னர், அச்சு இயந்திர வருகைக்குப் பின்னர், அக்கதைகள் நூல்களாகவும் வெளிவந்தன. இன்றும், அவை பெரிய எழுத்துக் கதைகள் என்ற பெயரில் விற்பனையில் உள்ளன. அல்லி அரசாணி மாலை, புலந்திரன் கதை, வீர அபிமன்யு, மயில் இராவணன் கதை, சதகண்ட இராவணன் கதை, நல்லதங்காள் கதை, அரிச்சந்திரன் கதை என்று இக்கதைகள் பல. மேலை நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும், கீழை நாடான ரஸ்யாவிலும் சிறுகதை என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சி, ஓர் உணர்ச்சி, ஓரிரு பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு, அரைமணி நேரத்தில், ஒரே அமர்வில் படித்து முடித்துவிடக் கூடிய கதைகள் தோற்றம் பெற்று அச்சேறின. ஆங்கிலக் கல்வியின் காரணமாக, நம்மவர்களும் அதே போன்ற கதை மரபை நம்மிடையே உருவாக்கத் தொடங்கினர். இப்படித் தொடங்கியதுதான் தமிழ்ச் சிறுகதை வரலாறு.

## கதை சொல்லும் மரபு

காலம் காலமாகக் கதை சொல்வதும், கதை கேட்பதும் எல்லாத் தேசங்க ளிலும், எல்லா மக்களிடையேயும் வாய்மொழி மரபாக இருந்து வந்திருக்கிறது. நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே, மக்கள் இனக் குழுக்களாக இயங்கி வந்த போது, ஓய்வு நேரங்களில் சக மனிதர்களிடம் தொடர்பு கொள்வதற்கும், குடும்ப உறவினர்களுடன் பொழுதைக் கழிக்கவும் கதை கூறும் மரபைக் கையாண்டு வந்துள்ளனர். கதை கூறுபவர் தன்னுடைய கற்பனை வளத்தாலும், அனுபவத்தின் பயனாலும், தான் கண்டதையும் கேட்டதையும் விரித்துச் சொல்லி, கேட்போரின் பொழுது போக்கிற்குத் துணை நின்றனர். 'ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜாவாம்' என்று சுவாரஸ்ய உணர்வோடு கதை தொடங்கும் மரபும் நம்மிடையே இருந்துள்ளது. பொய்ம்மொழி, பொய்க்கதை, புனைகதை, கட்டுக்கதை, பழங்கதை என்றெல்லாம் கதைகள் அக்காலத்தில் சுட்டப்பட்டுள்ளன. குடும்பங்களில் சிறு குழந்தைகளுக்குப் 'பாட்டி கதை' சொல்லும் மரபு உண்டு. அம்மரபு போன தலைமுறை வரை தமிழ் மண்ணில் இருந்து வந்துள்ளது.

# லட்சுமி புத்தகசாலை



**உங்களுக்குத் தேவையான சகல**
**புத்தகங்களுக்கும் எம்மை நாடவும்**

101 A Blyth Road, Hayes, UB31DB, UK    Tel: 07852810285


WESTERN
Jewellers
அற்புதமான அழகு மிகு வடிவங்களில் குறைந்த விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First and Best Jewellery shop in the UK
Specialised in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery.
Wembley Branch:
5, Plaza Parade
29-33 Ealing Road
Wembley, HA04YA
Tel: 0208 903 0909
Tooting Branch:
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 02087673445
Silk Emporium
122 Upper Tooting road
London
SW177EN
Tel: 02086721900
Opening Hours: Monday to Saturday (10.30am - 6.30pm), Sunday (11.30am - 6.30pm)